R & C PROPERTY LAWYERS LLP
& NOTARY PUBLIC
10a Upper Tooting Road, London SW17 7PG
Telephone: 02087724920
Conveyancing Services:
Residential, Commercial Conveyancing,
Notarial Services:
Notarisation & Legalisation of Documents
Power of Attorneys,
SENTHURAN THAVARAJA LLB (Hons) Solicitor & Notary Public
Consultant : RAJA THAVARAJA LLB Solicitor

A Freely Circulated Monthly
# புதினம்
PUTHINAM
JUNE 2018
மலர் 22
இதழ் 5


LINGA & CO LTD
ADVISORS ON LEGAL MATTERS & COMMUNITY WELFARE
V.P.Lingajothy
LLB (Hons), MSc, Dip Fms, Acilex
Principal, Immigration Specialist
46 HIGH STREET COLLIERS WOOD
LONDON SW19 2BY
TEL: (020) 8544 9285 FAX: (020) 8542 9530
EMAIL : LJLEGALADVISORS@YAHOO.CO.UK


லண்டனில் முதலாவது தமிழர் நகை மாளிகை
வகை வகையான வடிவங்களில் தரமான தங்க நகைகள் குறைந்த விலையில் பெற்றுக் கொள்ள நாடுங்கள்
WESTERN Jewellers
Tooting Branch:
230 Upper Tooting Road, London Sw17 7EW
Tel : 02087673445
Wembley Branch:
5, Plaza Parade, 29-33 Ealing Road, Wembley, MiddX HAO 4YA
Tel : 02089030909


THARANI JEWELLERY
அதி குறைந்த வட்டி வீதத்தில்
அடைவு பிடிக்கும் நகை மாளிகை
54 Ealing Road, Wembley, Middlesex HA0 4TQ.
Tel: 020 8902 7111, 020 8902 6777

# படுகொலை

தூத்துக்குடியில் உரிமைக்காய் போராடிய பொதுமக்கள் 13 பேரை, தமிழக அரசு சுட்டுக்கொன்றுள்ளது.

22 ஆண்டுகால போராட்டத்தை, படுகொலைகள் மூலம் ஒடுக்கிவிடலாம் என்று மத்திய-மாநில அரசுகள் முடிவெடுத்துள்ளன.

போராட்டங்களை அனுமதித்து, இறுதியில் அதனை வன்முறையாக மாற்றும் உத்தியை பிஜேபியின் பினாமி அரசு மேற்கொள்கிறது.

அண்மைக்கால நெடுவாசல், கதிராமங்கலம், தூத்துக்குடி போராட்டங்களெல்லாம் உலக கார்பொரேட்களின் வளச் சுரண்டலுக்கெதிராக நேரடியாக நடாத்தப்படும் போராட்டங்கள்.

ஜல்லிக்கட்டுப் போராட்டமானது கார்பொரேட் ஆதிக்கத்திற்கெதிரான மறைமுகப் போராட்டமாக கருதப்படுகிறது.

எல்லாப் போராட்டங்களிலும் பயங்கரவாதிகள், மாவோயிஸ்டுகள் ஊடுருவிவிட்டார்கள் என்ற பிரச்சாரத்தையே அரசும், அதன் ஊதுகுழல் ஊடகங்களும் முன்வைக்கின்றன.

போராட்டத்தில் முன்னிற்பவர்களை குறிபார்த்து சுட்டுக் கொன்றுள்ளார்கள்.

144 தடை உத்தரவின் கீழ், போராட்ட ஒருங்கிணைப்பாளர்களை வீடுவீடாகச் சென்று கைது செய்துள்ளார்கள்.

இணையச் சேவைகளை முடக்கி, வெளித்தொடர்புகளை அறுத்து, போராட்டக்காரர்களை வேட்டையாடுகிறது எடப்பாடி பழனிச்சாமியின் கொடுங்கோல் அரசு.

மத்திய அரசின் முதன்மை தலைமை அதிகாரிகளின் துணையோடும், சிறுபான்மை அதிமுக அரசின் துணையோடும் இந்த ஒடுக்குமுறைகளை மக்கள் மீது ஏவிவிட்டுள்ளது மதவாத பாஜக அரசு என்பதே மக்களின் கருத்தாக இருக்கிறது.

பெருவணிக நிறுவனங்களின் வணிக இலாபத்திற்காக, சொந்த மக்களையே பலிக்கடாவாக்கும் அரசுகளின் கைகளில் அதிகாரம் கிடைத்தால், இப்படித்தான் நடக்கும் என்பதை தமிழக மக்கள் தாமதமாகவே புரிந்து கொள்கிறார்கள்.

தமிழகத்தை கார்போரேட்மயமாக்குவதற்கு, மத்திய ஆட்சியிலுள்ள தரகர்கள், எத்தனை படுகொலைகளையும் செய்வார்கள் என்பதற்கு தூத்துக்குடி ஒரு உதாரணம். ■


S.Eswaranathan ACMA (Easan)
Easan & Co
Chartered Management Accountants
Specialists in arranging Commercial Loans
- Self Assessment Tax Return
- CIS Refunds
- Accounts & Book Keeping
- VAT Returns
- Paye
- Management Accounting
169 Merton High Street
South Wimbledon
London SW19 1AX
Tel: 020 8543 8484
Fax:020 8540 0107
Mobile : 07801227017



செல்வராஜா கோல்டு ஹவுஸ்
Tooting Broadway
அழகான சுடிதார்கள்!
Buy 1 Get 1 Free
162 B, MITCHAM ROAD, LONDON SW17 9NJ
TEL: 020 87673795

LycaFly
call us 24X7
0207 132 32 32
Colombo பயணமா?
எங்குமில்லாத சிறப்பு சலுகை.
PLUS
£20 FREE LYCAMOBILE CREDIT
Terms & Conditions apply. Applicable only for selected bookings



தரமான தங்கத்திற்கு லண்டனில் சிறந்த இடம்
LAKSHMIS JEWELLERS
276, High Street North, London E12 6SA,
Tel: 020 8470 5600 FAX: 020 8470 3448

Lyca TV

உலகின் மிகப் பிரமாண்டமான
தொலைக்காட்சி நிலையம்

நீங்கள்
IPTV BOX
பாவனையாளரா ?



ஒருவருட
இணைப்புச் சந்தா
£49
மட்டுமே

உங்களிடமுள்ள பழைய IPTV BOX களை
எங்களிடம் கையளித்து
விசேட விலைச் சலுகையில்
LYCATV ஐ பெற்றுக் கொள்ளுங்கள்

50க்கும் அதிகமான தமிழ்த் தொலைக்காட்சிகள்

TENT KOTTA
1000க்கும் அதிகமான தமிழ்த் திரைப்படங்கள்
4K / HD / 5 .1 DOLBY தரத்தில் திரைப்படங்கள்

+

SUN NXT
4000 + MOVIES
35+ HD CHANNELS
LATEST SONGS
NEWS



SUBSCRIBE NOW!
0207 132 2727
www.lycatv.tv

# குருதிவாய்க்காலில் ஒளிரும் சுடரை அணையவிடாது காப்போமாக!

**வடக்கின் நினைவேந்தலால் பாரிய பிரச்சனைகள் எழும் என்று எச்சரித்துள்ள முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச சில தமிழ் அரசியல்வாதிகளின் செயல்கள் இன்னொரு இரத்தக் களரிக்கே வழி வகுக்குமெனத் தெரிவித்திருக்கும் கூற்றை தமிழ் மக்களுக்கான பயமுறுத்தல் என்பதற்கு அப்பால், சிங்கள பௌத்த இனவெறியரை தமிழருக்கு எதிராக எழுச்சி கொள்ளச் செய்யும் அழைப்பாகவே பார்க்க வேண்டும்.**



இவை அனைத்துமே எதிர்பார்த்தவைதான்! முள்ளிவாய்க்காலில் மே 18ம் திகதி தமிழ் மக்கள் நினைவேந்தல் அனுஷ்டித்த வேளையில், அடுத்து என்னவெல்லாம் நடைபெறும் என்று எதிர்பார்த்தோமோ அவையெல்லாம் அச்சொட்டாக அப்படியே நடைபெறுகின்றன.

எதிர்பார்க்கப்பட்டவைகளில் முக்கியமானவையாக இரண்டினைக் குறிப்பிடலாம்.

வடமாகாணசபைத் தலைவரை குறிவைத்து, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்களைச் சீண்டிவிடும் செயற்பாடுகள் சிலரால் திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவது நன்கு தெரிகிறது.

சிங்கள பேரினவாத தரப்பிலிருந்து ஆவேசக் கண்டனங்களும் தமிழ் இனத்துவேச பரப்புரைகளும் வருமென்பது எதிர்பார்க்கப்பட்டதே.

ராஜபக்ச சகோதரர்களிடமிருந்தே காரசாரமான அறிக்கைகள் வருமென்பது பலராலும் எதிர்பார்க்கப்பட்டதுபோல அப்படியே நடைபெறுகின்றது.

அதேசமயம் வேறு சில சில்லறைச் சம்பவங்களும் கால தேவையை ஒட்டி இடம்பெறுகின்றன.

முள்ளிவாய்க்கால் யுத்தம் நடைபெற்றுக் கொண்டிருந்தபோது வாய் மூடி மௌனித்திருந்த விக்னேஸ்வரன், இன்று எதற்காக இதுபற்றி அதிகம் பேசுகிறார் என்று கேள்வி எழுப்பியுள்ளார் அண்மையில் அமைச்சரான விஜேதாச ராஜபக்ச.

அடுத்து வரப்போகின்ற மாகாணசபைத் தேர்தலுக்கான முன்னுரையா என்ற பாணியில் இவரது கேள்வி அமைந்துள்ளது.

கடந்த மூன்று வருடங்களாக முள்ளிவாய்க்காலில் நினைவேந்தலை வடமாகாண சபையே பொறுப்பேற்று நடத்தியது என்பதையும், முதலமைச்சரே சுடரேற்றி சிறப்புரை நிகழ்த்தினார் என்பதையும் அமைச்சர் விஜேதாச அறியவில்லைப் போலும்.

வடக்கில் சில நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ள சென்றவேளையில், அங்கு உரைநிகழ்த்தும்போதே அவர் இவ்விடயங்களைக் குறிளப்பிட்டுள்ளார்.

கூட்டமைப்பின் பேச்சாளரான எம்.ஏ.சுமந்திரனின் அழைப்பில் அமைச்சர் விஜேதாச யாழ்ப்பாணம் சென்றிருந்தமையால், சுமந்திரனை மகிழ்விப்பதற்காக முதலமைச்சர் பற்றி ஏதாவது தெரிவிக்க வேண்டிய கட்டாயம் அமைச்சர் விஜேதாசவுக்கு ஏற்பட்டிருக்கலாம்.

தாயகத் தமிழர்கள் பற்றி இன்று அடிக்கடி அதிகம் பேசுபவராக அமைச்சர் மனோ கணேசன் காணப்படுகிறார்.

விடுதலைப் புலிகளின் தலைமையையும் உரசிப் பார்க்க இவர் தவறுவதில்லை.

2002 யுத்த நிறுத்த காலத்தில் வன்னிக்கு விரைந்து தமிழரின் தேசியத் தலைவருடன் கைலாகு கொடுத்துப் படமெடுத்து, அதனைச் சகல ஊடகங்களிலும் பதிவிட்டு புளகாங்கிதம் கொண்ட இவர், இப்போது நரம்பில்லாத நாக்கை நான்கு பக்கமும் சுழற்றி தமிழரின் விடுதலைப் போராட்டத்தை நக்கல் அடிக்கிறார்.

அன்று ஓடி ஒளிந்தவர்கள் இன்று தீபமேற்றுகிறார்கள் என்று மனோ கணேசன் கூறியது, யுத்தத்தின்போது தமது உறவுகளை இழந்தவர்களையும் தொலைத்தவர்களையும் மனசு நோகடிக்கச் செய்யும் வார்த்தைப் பிரயோகம் என்பதை சிலவேளை அவரால் மாலை மயக்க வேளைகளில் உணர முடியாதிருக்கலாம்.

யுத்தத்தின்போது படையினரால் பொதுமக்கள் கொல்லப்பட்டனர் என்று கருத்து வெளியிட்ட அமைச்சர் ராஜித சேனரட்ன மீது, அவரது வம்சத்தினர் கற்களை வீச ஆரம்பித்துள்ளனர்.

யுத்தத்தை முன்னின்று நடத்தியவர்களில் ஒருவரான ஓய்வு பெற்ற இராணுவ அதிகாரி மேஜர் ஜெனரல் கமல் குணரட்ன அமைச்சரை நோக்கி ஒரு கேள்வி எழுப்பியுள்ளார்.

"இராணுவம் தமிழ் மக்களைக் கொலை செய்ததை ராஜித சேனரட்ன பார்த்தாரா" என்பதுதான் கமல் குணரட்னவின் கேள்வி.

அமைச்சர் ராஜித சேனரட்ன நேரில் பார்த்தாரா இல்லையா என்ற கேள்விக்கு அப்பால், இராணுவம் மக்களைக் கொலை செய்தது என்ற தனது கூற்றை இன்னமும் அவர் மீளப் பெறவில்லையென்பதுதான் இங்கு கவனிக்கப்பட வேண்டியது.

போர்க்களத்தை கொலைக்களமாக்கி பல்லாயிரக்கணக்கானவர்களை பலியெடுத்த இராணுவ அதிகாரிகளில் முக்கியமானவரான கமல் குணரட்ன, தமது மனச்சாட்சியைத் தொட்டுப்பார்த்து அமைச்சரின் கேள்விக்கான பதிலை பெற்றுக் கொள்ளலாம்.

சிங்களத் தரப்பில் முக்கியமான இருவரின் கருத்துகளை இங்கு பார்ப்போம். ஒருவர் முன்னாள் ஜனாதிபதி. அடுத்தவர் எதிர்காலத்தில் ஜனாதிபதியாக வரத்துடிப்பவர்.

1977ம் ஆண்டுக் காலகட்டத்துக்கு நாட்டின் நிலைமை தற்போது சென்றுள்ளது என்று பயமுறுத்தும் கோதபாய ராஜபக்ச, புலிகளை நினைவுகூரும் நடவடிக்கைகளை அனுமதிப்பது தமிழ் மக்களிடையே ஆயுதப் போராட்டம் ஒன்றை மீண்டும் உருவாக்கும் என்று சுட்டியுள்ளார்.

நல்லிணக்கம் என்ற பெயரில் பிரிவினைக்கு இடம்கொடுத்து, பயங்கரவாதத்தை வளர்த்தெடுக்க நினைவுத்தூபிகளை எழுப்பவும் அரசாங்கம் அனுமதியளித்துள்ளது என்று கோதபாய சிங்கள மக்களுக்கு இனவாதம் ஓதுகின்றார்.

வடக்கின் நினைவேந்தலால் பாரிய பிரச்சனைகள் எழும் என்று எச்சரித்துள்ள முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச, சில தமிழ் அரசியல்வாதிகளின் செயல்கள் இன்னொரு இரத்தக் களரிக்கே வழி வகுக்குமென்றும் எடுத்துக் கூறியுள்ளார்.

இந்தக் கூற்றை தமிழ் மக்களுக்கான பயமுறுத்தல் என்பதற்கும் அப்பால், சிங்கள பௌத்த இனவெறியினரை தமிழருக்கு எதிராக எழுச்சி கொள்ளச் செய்யும் அழைப்பாகவே பார்க்க வேண்டும்.

மகிந்த, கோதபாய உட்பட சில சிங்கள அரசியல்வாதிகளும், முன்னாள் இராணுவ அதிகாரிகளும் மட்டுமே முள்ளிவாய்க்கால் நினைவேந்தலைக் கையிலெடுத்து இனவாதத்தை உசுப்பிவிட முன்வந்துள்ளனரே தவிர, சிங்கள மக்கள் மத்தியிலிருந்து அவ்வகையான உணர்வலைகள் எதுவும் இதுவரை எழவில்லை.

போரின்போது விடுதலைப் புலிகளுக்கு பயந்து பெரும்பாலான அரசியல்வாதிகள் அமைதியாக இருந்தனர். நாங்கள் போரை முடிவுக்குக் கொண்டு வந்ததும் அந்த அரசியல்வாதிகள் கதாநாயகர்களாகி விட்டனர் என்ற மகிந்த ராஜபக்சவின் கூற்று இங்கே கவனம் பெறுகின்றது.

முள்ளிவாய்க்கால் நினைவேந்தலை முன்னெடுப்பதற்கோ அல்லது அதில் பங்கேற்றவர்களுக்கு இராணுவம் குளிர்பானம் வழங்கவோ அரசாங்கம் அனுமதி அளித்திருக்கக்கூடாது என்று தெற்கிலுள்ள வானொலி நிலையமொன்றுக்கு வழங்கிய செவ்வியில் கோதபாய தெரிவித்ததன் அர்த்தம் என்ன?

உலகின் கண்களுக்கு தங்களை மனிதாபிமானிகள் என்று காட்ட இராணுவம் குளிர்பானம் வழங்கியதை கோதபாயவின் கண்கள் இனவெறியில் நோக்குவதையே இது காட்டுகிறது.

மறுபுறத்தில் வடமாகாணசபை முதலமைச்சருக்கும் யாழ். பல்கலைக்கழக மாணவர்களுக்குமிடையே குழப்பத்தை ஏற்படுத்த தமிழர் தரப்பில் சிலர் முயன்று வருகின்றனர்.

ஒருதரப்பினர் பல்கலைக்கழக மாணவர்மீது குற்றப்பத்திரிகை வாசிக்கின்றனர்.

இன்னொரு தரப்பினர் வடமாகாண முதலமைச்சரை இதே குற்றச்சாட்டில் இழுத்து வீழ்த்தப் பார்க்கின்றனர்.

நினைவேந்தல் நடைபெற்ற பகுதியில் பல்கலைக்கழக மாணவர் முதல்நாள் இரவு மது அருந்திக் கும்மாளமிட்டதாக திட்டமிட்ட பொய்ப்பரப்புரை நடைபெறுகிறது.

இதற்காக அங்குள்ள ஒரு வீட்டின் பின்பகுதியில் சிதறிக் கிடந்த மதுப்போத்தல்களின் படங்களையும் வெளியிட்டு வருகிறார்கள்.

இவைகளை விளக்கி பல்கலைக்கழக மாணவர் வெளியிட்ட அறிக்கையை திட்டமிட்டு இருட்டடிப்புச் செய்கின்றனர்.

உணர்வுபூர்வமாக மிகுந்த கட்டுப்பாட்டுடன் இடம்பெற்ற நினைவேந்தல், அடுத்த தேர்தலை எதிர்நோக்கியிருக்கும் சிலருக்கு வயிற்றுளைவை ஏற்படுத்தியுள்ளது.

முதலமைச்சரையும் பல்கலைக்கழக மாணவர்களையும் நல்லுறவில் தொடரவிடாது பார்த்துக் கொள்வதே இவர்களின் இலக்காகவுள்ளது.

இந்தத் தீயசக்திகளையிட்டு ஒவ்வொருவரும் விழிப்போடிருக்க வேண்டும்.

தெற்கில் ஆட்சிகளும் காட்சிகளும் மாறினாலும், குருதிவாய்க்கால் ஆக்கப்பட்ட முள்ளிவாய்க்காலில் ஒளிர ஆரம்பித்திருக்கும் நினைவேந்தல் சுடரை அணையவிடாது பார்த்துக் கொள்வது ஒவ்வொருவரதும் தார்மிகக் கடமை. ■

# புதினம்
PUTHINAM

லண்டன் தமிழர்களின் அபிமான இலவச இதழ்

ஆசிரியர்:

ஈ.கே.ராஜகோபால்

E.K.Rajagopal

வடிவமைப்பு
சத்யன் லே–அவுட்
9551395516

அலுவலக முகவரி:

PUTHINAM
38 MOFFAT ROAD
LONDON SW 17 7EZ
TEL: 020 8767 8004
MOB: 077 353 46890
EMAIL:
editor@londonputhinam.co.uk



## பெண் உதவியாளர் தேவை

தாயாரைப் பார்த்து, அவருக்குத் தேவையான உதவிகளைச் செய்வதற்கு பாச உணர்வுள்ள பெண் உதவியாளர் ஒருவரை மகன் தேடுகிறார். Croydon, Wallington, Mitcham போன்ற பகுதிகளில் இருப்போர் விரும்பத்தக்கது. காலை முதல் மாலை வரை. சம்பளம் பேசித் தீர்க்கப்படும்.

தொடர்பு: 07801704889



25வது ஆண்டு
ஸ்ரீமதி யோகா தில்லைநாதன்
வழங்கும்

## வெள்ளி விழா நிகழ்வு

## கானகுயில் - 2018

**30.06.2018**

சனி 6.00 Pm

Greenford Assembly Hall Ruislip Road, Greenford, MDDX UB6 9QN

மீண்டும் துஷி-தனு நண்பர்கள் இசைக்குழுவின் பின்னணி இசையில்

பால கானக்குயில்
8-12 வயதிற்குள்

இளைய கானக்குயில்
12-16 வயதிற்குள்)

கானக் குயில்
(16 வயதிற்கு மேல்)

அனைத்து விபரங்களுக்கும்:

போன் : 02034898309
மொபைல் : 07903327708
Email : arumthill@hotmail.com



Looking for an
## ACCOUNTANT ?
We are next to you!
We provide solutions for your Accountancy needs



உங்கள் தனிப்பட்ட மற்றும் வியாபார
ACCOUNTANCY
தேவைகளுக்கு
LONDON இல்
இயங்கும் தனித்துவமான ஸ்தாபனம்

Initial consultation is free
No fee for first three months

P & K ASSOCIATES
CIMA
PRACTISING CERTIFICATE HOLDER

183. Burnt Oak Broadway, Edgware. Middlesex. HA8 5EH

020 8958 8883
079 1613 4976
(Mr.P. Navendran)

www.pandkgroup.co.uk
pandkassociates@aol.com



## GYPS Pest Control
Serving the Community 24/7



- Mice
- Rats
- Cockroach
- Bedbugs
- Ants
- Wasps

Are you harassed by any of these pests?
Then call or experts on

07983 589 993
07723 467 012

For a prompt and Discreet service at very competitive rates


# துயர் பகிர்வோம்

## டாக்டர் ராசையா பத்மநாதன் - புவனம் பத்மநாதன்



சாவகச்சேரியைச் சேர்ந்தவரும் பின்னாளில் புறுணை, அமெரிக்கா புளோரிடாவில் வாழ்ந்தவருமான மருத்துவ கலாநிதி ராசையா பத்மநாதன் ஏப்ரல் 29–ம் திகதி அமெரிக்கா புளோரிடாவில் இறைவனடி சேர்ந்தார்.

இவர் புவனத்தின் அன்புக் கணவரும் மருத்துவ கலாநிதி யோஷனா(ஜோ)வின் பாசமிகு தந்தையும் முருகன் ராஜரட்ணத்தின் மாமனாரும் விஜி,கிருஷன் ஆகியோரின் பாட்டனாரும் காலஞ்சென்ற மருத்துவ கலாநிதி குகதாசன், காலஞ்சென்ற மருத்துவ கலாநிதி சர்வேஸ்வரி முருகேசு, காலஞ்சென்ற முத்துக்குமாரசாமி(துரை) ஆகியோரின் அன்புச் சகோதரருமாவார்.

யு;ழ்ப்பாணம் சுண்டுக்குளி விதானையார் ஒழுங்கையைச் சேர்ந்தவரும் புறுணை, அமெரிக்கா புளோரிடா ஆகிய இடங்களில் வாழ்ந்தவருமான திருமதி புவனம் பத்மநாதன் மே 7–ம் திகதி திங்கட்கிழமை புளோரிடாவில் காலமானார்.

இவர், காலஞ்சென்ற மருத்துவ கலாநிதி பத்மநாதனின் மனைவியும் காலஞ்சென்றவர்களான குமாரசாமி ருக்மணி ஆகியோரின் அன்பு புதல்வியும் மருத்துவ கலாநிதி யோஷனா(ஜோ)வின் தாயாரும் முருகன் ராஜரத்தினத்தின் மாமியாரும் விஜி, கிருஷன் ஆகியோரின் பாட்டியும் காலஞ்சென்ற மருத்துவ கலாநிதி பரமேஸ் துரையப்பா, காலஞ்சென்ற புஷ்பா சோமஸ்கந்தன், மகேந்திரன், காலஞ்சென்ற மருத்துவ கலாநிதி விஜேந்திரா, பத்மா விமல் சொக்கநாதன், கலாநிதி சிவேந்திரன் ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

**துயர் பகிர்வு தொடர்புகளுக்கு:**
rajflorida@msn.com
FLORIDA: 001 727 240 4307



# விமலின் பக்கம்

கடந்த மாதம் நான் கனடா போயிருந்தபோது என் இலங்கை வானொலி தோழர் விக்னேஸ்வரன் அவர்களைச் சந்தித்தேன்.

“நாங்கள் ஜூன் மாதம் அரங்கேற்க இருக்கும் நாடக ஒத்திகை ஒன்றை வந்து பார்க்க உங்களுக்கு வசதிப்படுமா? நீங்கள் வந்தால் என் கலைஞர்கள் அதை ஒரு கௌரவமாகக் கருதுவார்கள்!” என்று கேட்டார்.

கொழும்பில் எனது புனித பெனடிக் கல்லூரி நாட்களில் மேடை நாடக நடிப்புப் போட்டியில் நான் பரிசு பெற்றிருக்கிறேன். கொழும்பு பிரிட்டிஷ் கவுன்சிலின் ஷேக்ஸ்பியர் நாடக விழாவில் வணிகன் ஷைலாக்காக நடித்திருக்கிறேன். 1970-களில் மகாகவி உருத்திரமூர்த்தி அவர்களின் ‘புதிதோர் வீடு’ நாடகத்திலும் நடித்திருக்கிறேன். தற்போதைய இலங்கை அமைச்சர் மனோ கணேசனின் தந்தை வி.பி.கணேஷன் தயாரித்த ‘புதிய காற்று’ தமிழ் படத்திலும் நடித்திருக்கிறேன். கரும்பு தின்ன விக்னேஸ்வரனிடம் நான் கூலியா கேட்க முடியும்?



பி.விக்னேஸ்வரன்

ஞாயிற்றுக்கிழமை காலை அவரது இல்லம் போய்ச் சேர்ந்தேன். பிரிட்டனில் உள்ள வீடுகளில் நில மட்டத்தின் கீழ் தோண்ட முடியாது. கட்ட முடியாது. நிலத்தின் அடியில் நீரும் மின்சாரமும் சுரங்க ரயில்களும் இங்கு ஓடும். கனடாவில் நான் பார்த்த வீடுகளில் நில மட்டத்தின் கீழ் தத்தமது விருப்புக்கு அமைய மாற்றங்களைச் செய்திருந்தார்கள். ஒருவர் வானொலி - தொலைக்காட்சி ஒளிப்பதிவுக் கூடம் ஒன்றை அமைத்திருந்தார். இன்னொருவர் ஒரு சினிமா தியேட்டரையே சுரங்க அறையில் கட்டியிருந்தார்.

விக்னேஸ்வரன் வீட்டின் சுரங்க அறை நாடக ஒத்திகைக் கூடமாக மாற்றப்பட்டிருந்தது. இலங்கை வானொலியிலும் ரூபவாஹினி தொலைக்காட்சியிலும் பழுத்த நாடக மற்றும் ஒலிபரப்பு அனுபவம் மிக்க தம்பி விக்கி - கனடா நாட்டில் கனடிய தமிழர்களின் கலை உலகில் ஒரு ஊடகராக மட்டுமல்லாமல் ஒரு நாடக எழுத்தாளராக நாடக நெறியாளராக - பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள் - தமிழ் மொழியில் மொழிபெயர்க்கும் சாதனையாளராக பிரகாசிக்கிறார். இவரது நாடகங்கள் பல நூல்களாக வெளியிடப்பட்டுள்ளன.

நான் அழைக்கப்பட்டிருந்த ஒத்திகை கனடாவில் தான் மேடையேற்றும் 5-வது நாடகத்திற்கானது என்று தம்பி விக்கி சொல்லி முடித்ததும் இளம் கலைஞர்கள் மிகப் பிரகாசமான புன்னகை உதிர்த்தபடி ஒருவர் பின் ஒருவராக விக்கியின் வீடு வந்து சேர்ந்தார்கள்.



அரசி

விக்கியின் இல்லத் தலைவி சக்தியும் 70-களில் வானொலி நிலையத்தில் என்னோடு பணியாற்றியவர். அவரது பாரம்பரிய விருந்தோம்பல் உபசாரத்தின் பின் ஒத்திகை ஆரம்பமானது. நாடகத்தின் தலைப்பு ‘ஒரு பொம்மையின் வீடு!’

பிரிட்டனின் ஷேக்ஸ்பியர் போல உலகப் புகழ் பெற்ற நோர்வே நாட்டு நாடகாசிரியர் ஹென்றிக் இப்சன் எழுதிய *A DOLLS HOUSE* தான் விக்னேஸ்வரன் மொழிபெயர்த்து நெறிப்படுத்தி மேடையேற்றும் ‘ஒரு பொம்மையின் வீடு!’



ஜெயபிரகாஷ்

நாடக உலகினை நவீனப்படுத்த அத்திவாரமிட்டவர்களில் நாடகாசிரியர் இப்சனும் ஒருவர். ‘யதார்த்தத்தின் தந்தை’ என்று விபரிக்கப்படுபவர். இப்சன் இந்த நாடகத்தை எழுதி அரங்கேற்றிய 19-ம் நூற்றாண்டு பெண்கள் வெறும் பொம்மைகளாகக் கருதப்பட்ட காலப் பகுதி. குழந்தை பெறுதல் - குழந்தை வளர்த்தல் ஆகிய இரண்டும் மட்டுமே இவர்களின் பொறுப்புக்கள். பதியின் சொற் கேட்டு - படி தாண்டாமல் பத்தினிகள் வாழ்ந்து வந்த 19-ம் நூற்றாண்டு நோர்வே கிராமத்தை கதைக் களமாக வைத்து ‘நோரா’ என்ற நடுத்தர வர்க்க குடும்பப் பெண்ணின் கதைதான் ‘ஒரு பொம்மையின் வீடு!’ ஆணாதிக்க சமுதாயத்தில் விதிமுறைகள் - சட்டங்கள் அனைத்தும் ஆண்களால் உருவாக்கப்பட்டவை. அவற்றை பெண்கள் கடைப்பிடிக்க வேண்டியது கட்டாயமாக்கப்பட்டிருந்தது. 19-ம் நூற்றாண்டு மனைவிமார் தமது பொருளாதார விடுதலைக்காக - சமூக விடுதலைக்காகப் போராட முடியாமல் ஏங்கிக் கொண்டிருந்த காலத்தில் இப்சன் எழுதிய நாடகம் ‘பெண்ணிய’ கொள்கைகளை உரத்துப் பேசியது - கடுமையான அதிர்வலைகளை உருவாக்கியது. மனைவிமாரின் சுதந்திரத்தைப் பறிக்கும் ஆணாதிக்க சமூகம், பெண் பாவையரை பாவைகளாகப் பயன்படுத்துவதை வெளிச்சம் போட்டுக் காட்டிய இந்த நாடகத்தின் கிளைமாக்ஸ் காட்சியில் கதாநாயகி ‘நோரா’ கணவரையும் மூன்று குழந்தைகளையும் துறந்து வீட்டை விட்டு வெளியேறுகிறார்.




பவானி

8 வருட கால மணவாழ்வில் தான் செய்த தியாகங்கள்› பட்ட கஷ்டங்கள் எதையுமே பொருட்படுத்தாத கணவனை விட்டு வெளியேறும்போது வீட்டு முன் வாயிற் கதவை அடித்துச் சாத்திக் கொண்டு வெளியேறுகிறாள். ‘நோரா’ கதவை அடித்துச் சாத்திய ஒலி உலகம் என்ற கூரை எங்கும் எதிரொலித்தது.

19-ம் நூற்றாண்டில் இருந்த ஆணாதிக்கம் இப்போது 21-ம் நூற்றாண்டில் இல்லவே இல்லை என்று கருதும் ஆண்களில் நீங்களும் ஒருவராக இருந்தால் சவூதி அரேபியா› வட-இந்தியா போன்ற இடங்களுக்கு போய்ப் பாருங்கள்.

‘ஒரு பொம்மையின் வீடு!’ நாடகத்தின் உயிர் நாடி ‘மனைவி நோரா’. உலகப் புகழ் பெற்ற இந்தப் பாத்திரத்தில் அரசி விக்னேஸ்வரன் நடிக்கிறார். பரத நாட்டியம், இசைக் கலை இரண்டையும் முறையாகக் கற்ற அரசி, நாட்டிய நாடகம், விதா நிகழ்வு ஆகியவற்றில் ஏற்கனவே தன்னை நிரூபித்திருக்கிறார். மகாகவி உருத்திரமூர்த்தியின் பேத்தியான அரசிக்கு ‘நோரா’ வேடம் அற்புதமாகப் பொருந்தியிருக்கிறது.

நோராவின் கணவர் ஹெல்மராக ஜெயப்பிரகாஷ் ஜெகவன் நடிக்கிறார். நாடகம், வில்லுப்பாட்டு போன்ற திறமைகள் கொண்ட இவர் ரொறன்ரோ வண்ணத் தமிழ் நாடக நிலையத்தில் அறிவிப்பாளராகப் பணியாற்றுகிறார்.




லிண்டா என்ற ஒரு முக்கிய பாத்திரமேற்று நடிப்பவர் பவானி சத்தியசீலன். ரொறன்ரோவின் முன்னணித் தமிழ் நடிகை. ஏராளமான மேடை நாடகங்கள் - தமிழ் தொலைக்காட்சி நாடகம்› குறும்படம், முழு நீளத் திரைப்படம்(*GUN & THE RING*) ஆகியவற்றில் நடித்த பவானி மக்கள் அபிமானம் பெற்றவர்.

ஆனா மரியா என்ற முக்கிய பாத்திரத்தில் நடிப்பவர்: மாலினி பரராஜசிங்கம். பரதநாட்டியக் கலைஞர் - யாழ் பல்கலைக்கழக நுண்கலைத் துறையில் விரிவுரையாளராக முன்னாளில் கடமையாற்றியவர். ரொறன்ரோவில் மேடை நாடகத் தயாரிப்பாளராகவும் இயக்குநராகவும் திகழும் மாலினி கூத்து, யோசகாசனம் ஆகியவற்றிலும் மிகுந்த ஈடுபாடு கொண்டவர்.



மாலினி

குறொக்ஸ்ரட் என்ற முக்கிய பாத்திரத்தில் நடிப்பவர் - எஸ். ரி.செந்தில்நாதன். மேடை நாடகம், வானொலி ஆகியவற்றோடு ரொறன்ரோவின் தொலைக்காட்சி நாடகங்கள், குறும்படங்கள், திரைப்படங்கள் ஆகியவற்றிலும் தமது திறமையை நிரூபித்திருக்கிறார்.

டொக்டர் றாங்க் என்ற பாத்திரத்தில் மூத்த கலைஞர் குரும்பசிட்டி இராஜரத்தினம் நடிக்கிறார். இலங்கை வானொலியில் நாடக நடிப்பு அனுபவம் மிக்க இவர் ‘ஞான ஒளி’ திரைப்படத்தில் சிவாஜி கணேசன் நடித்த அன்ரனி பாத்திரத்தை - அந்த திரைப்படம் தயாரிக்கப்பட முன்னரே இலங்கை மேடைகளில் ‘ஞான ஒளி’ நாடகமாக நடித்தவர். இவர்களோடு சுனீத்தா உதயகுமார் என்ற இளம் நடிகையும் ஆதித்யா பிரபாகர், திலீபன் தீபன் என்ற இரு குழந்தை நட்சத்திரங்களும் தோன்றுகிறார்கள்.

இந்த மாதம் 30-ம் திகதி (30-06-18) ரொறன்ரோ மார்க்கம் கலை அரங்கில் மேடையேறும் ‘ஒரு பொம்மையின் வீடு!’ - ரொறன்ரோ மனவெளி கலையாற்றுக் குழுவின் 19-வது அரங்காடல் நிகழ்வாகும்.



குரும்பசிட்டி ராஜரத்தினம்

இப்சன் இந்த நாடகத்தை எழுதிய 1879 19-ம் நூற்றாண்டில் இருந்து சுமார் 180 ஆண்டுகள் கடந்து வந்துவிட்டோம். ஆனால், பெண்களை இரண்டாம் தர பிரஜைகளாக, வெறும் போகப் பொருளாக ஒதுக்கி தள்ளி வைக்கும் ஆணாதிக்கப் போக்கு மாறவே இல்லை.

தெருவில் ஒரு பெண் இரவில் தனியாக நடந்து செல்லும் சுதந்திரம் எங்கே இருக்கிறது? தான் கற்பழிக்கப்பட்டதாக ஒரு பெண் காவல் நிலையத்தில் புகுந்து முறையிடும் சுதந்திரம் எந்த நாட்டில் இருக்கிறது?

அரபு நாடோ, அமெரிக்க, ஆங்கில நாடோ சட்டம் இயற்றுவது ஆண்கள். இன்றும் பெண்களின் கருத்து மதிக்கப்படுவதேயில்லை. (என்று) இதனை அடுத்த தலைமுறைக்குச் சொல்ல இப்சன் போன்ற நாடகாசிரியர்கள் இன்னும் எத்தனை பேர் பிறக்க வேண்டும்? ■

# SkyWings Ltd.

*Your Travel Is Our Passion...*

23 YEARS

## Talk to our Specialist in TAMIL

## 0208 672 9111

## COLOMBO SPECIALS




**SECURE YOUR BOOKING BY PAYING A £150 DEPOSIT**

## Worldwide Specials

| | | | |
|---|---|---|---|
| MELBOURNE | fr £598 | CHENNAI | fr £387 |
| AUKLAND | fr £607 | TRICHY | fr £427 |
| NEW YORK | fr £324 | DELHI | fr £397 |
| SYDNEY | fr £590 | KUALA LUMPUR | fr £412 |
| TORONTO | fr £312 | SINGAPORE | fr £419 |

119, Tooting High Street London, SW17 0SY | T: +44 (0) 20 8672 9111

** Above fares are subject to availablility. T&Cs Apply.*

IATA

ATOL PROTECTED

# பதற வைக்கும் படுகொலைகள்

## தூத்துக்குடியின் ரத்தம் தெறித்த கதைகள்

“இது நாடுதானா? இவரு என்ன எடப்பாடியா, ராஜபக்சேவா? என்னய்யா அப்படிக் கேட்டுட்டோம்... அந்த ஸ்டெர்லைட்ட மூடுங்கன்னு சொன்னோம். அதுக்கு இத்தனை கொலையா? அதுவும் இந்தப் பொண்ணு ஜான்சிக்கும் போராட்டத்துக்கும் என்ன சம்பந்தம்? அது புள்ளைங்களுக்கு மீன் குழம்பு ஆக்க, மீனை வாங்கிட்டு ஆட்டோவுலருந்து இறங்கியிருக்கு. பொட்டுன்னு ஒரு சத்தம் அவ்வளவுதான். மூளை சிதறி தரையில விழுந்துடுச்சு. மூணு பொட்ட புள்ளைங்களும், சின்னப் பொடியனும் இனி என்ன செய்வாக? ஐயோ மாதா தாயே!

மூதாட்டி பெலிக்கானா, போலீஸ் தடியடியில் ரத்தக் காயங்களுடன் வீங்கிப் போயிருந்த தன் கைகளை மார்பில் அடித்துக்கொண்டு அரற்றிக் கொண்டிருக்கும்போதே, நம் கைகளைப் பிடித்து அழைத்துப் போனான் அந்தச் சிறுவன்.

“ண்ணா... இங்கப் பாருண்ணா. இங்கதான் ஜான்சி அக்காவோட மூளை சிதறிக் கிடந்துச்சு” என அவன் காட்டிய ரத்தக் கறை அப்படியே இருந்தது. ஈக்கள் மொய்த்துக் கொண்டிருந்தன.



தூத்துக்குடி மாநகரின் ஒவ்வொரு தெருவிலும் இப்படி ரத்தம் தெறித்த கதைகள் நிறைந்து கிடக்கின்றன. ரத்தம் தெறித்த கறைகளும் படிந்திருக்கின்றன. அவை இன்னும் பல ஆண்டுகளுக்கு நிறம் மாறாமல் அப்படியே இருக்கும்.

தமிழ்நாடு தூத்துக்குடி ஸ்டெர்லைட் ஆலைக்கு எதிராக நடந்துவந்த போராட்டம் 100-வது நாளை எட்டியது. அதன் பொருட்டு, மே 22-ம் தேதி ‘அறவழியில் ஆட்சியர் அலுவலகம் முற்றுகை’ என்ற அறிவிப்புடன் போராட்டத்தைத் தொடங்கிய ஆயிரக்கணக்கான பொதுமக்களில் பலர் இன்னும் வீடு திரும்பவில்லை. பலர் இனி நிரந்தரமாக வீடு திரும்பப் போவதுமில்லை. தங்கள் வளத்தையும் உயிரையும் உறிஞ்சும் ஒரு தனியார் நிறுவனத்துக்கு எதிராகப் போராடிய பொதுமக்கள் மீது துப்பாக்கிச் சூடு நடத்தி, பல பேரைக் கொன்று, பல பேரை முடமாக்கி, சுதந்திர இந்தியாவில் புதியதொரு ‘வரலாற்றை’ படைத்திருக்கிறது தமிழகக் காவல்துறை.

அமைதியான முறையில்தான் போராட்டம் தொடங்கியிருக்கிறது. ஆனால், இத்தனை மக்கள் கூடுவார்கள் என்பதைக் காவல்துறை எதிர்பார்க்கவில்லை. போராட்டத்தைத் தடுத்துக் கூட்டத்தைக் கலைத்திட காவல்துறைத் தொடர் முயற்சிகளை எடுக்கத் தொடங்குகிறது. அது கொஞ்சம் கொஞ்சமாகக் கலவரமாக மாறத் தொடங்குகிறது. காவல்துறை துப்பாக்கிச் சூடு நடத்தத் தொடங்கவும், அது உச்சத்தை எட்டுகிறது. இப்போதுவரை துப்பாக்கிச்சூடு எதன் அடிப்படையில் நடத்தப்பட்டது, யார் தந்த அனுமதியின் பேரில் நிகழ்த்தப்பட்டது என்பதற்கான பதில்கள் கிடைக்கவில்லை.



தூத்துக்குடி போராட்டத்தின் ஒவ்வொரு நிலையிலும், ஒவ்வொரு இடத்திலும், வன்முறையை ஆயுதமாக ஏந்தி, மூர்க்கத்தனமாகக் காவல்துறை செயல்பட்டது என்பதற்குப் பல ஆதாரங்களும் ரத்தச் சாட்சிகளும் இருக்கின்றன. ஜான்சி ராணியின் கதை, மொத்த நிகழ்வில் சிறுதுளி மட்டுமே.

தூத்துக்குடி அரசு மருத்துவமனையில், கலவரத்தில் பாதிக்கப்பட்ட பல நூறு பேர் அனுமதிக்கப்பட்டிருக்கிறார்கள்.

“எங்க குழந்தைகளுக்கு காலையில் எழுந்ததும் தாய்ப்பாலுக்கு பதில் மாத்திரையைத் தான் முதலில் தருகிறோம்” ஸ்டெர்லைட் ஆலைக்கு எதிரான போராட்டக் களத்தில் குழந்தையுடன் ஒரு பெண் கூறிய வார்த்தைகள் இவை.

ஸ்டெர்லைட் ஆலைக்கு எதிரான போராட்ட வரலாறு இரண்டு தசாப்தங்களைத் தாண்டியது. ஆலையிலிருந்து வெளியேறும் நச்சுப்புகையால் குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை புற்றுநோய், நுரையீரல் கோளாறுகள் ஆகியவற்றால் பாதிக்கப்படுகின்றனர் என்பது பிரதான குற்றச்சாட்டு. ஸ்டெர்லைட் ஆலையில் இருந்து வெளியேறும் ஆர்செனிக் உள்ளிட்ட வேதிக் கழிவுகளால் நிலத்தடி நீர் முற்றிலும் மாசடைந்துவிட்டது என்பதும் குற்றச்சாட்டாக உள்ளது. இந்த நிலையில்தான், வேதாந்தா நிறுவனம் சிப்காட்டை பயன்படுத்தி ஸ்டெர்லைட் ஆலை விரிவாக்க நடவடிக்கைகளை மேற்கொள்வதாக குற்றம் சாட்டி தூத்துக்குடி மக்கள் போராட்டத்தை மீண்டும் தீவிரப்படுத்தினர்.

திருமணமாகி மூன்று மாதமேயான இளம் வயதினர் (மனைவி இரு மாதக் கர்ப்பிணி) ஒருவரும் மற்றும் துப்பாக்கிச் சூட்டில் 17 வயது மாணவி உட்பட 13 பேர் பலியாகினர். போராட்டம் வன்முறையாக மாறியதால் தான் துப்பாக்கிச் சூடு தவிர்க்க இயலாததாகி விட்டது என தமிழக அரசு திரும்பத் திரும்பச் சொல்லி வருகிறது. ஆனால், உண்மை அதுவல்ல.

போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் எல்லாருமே சாமானிய மக்கள். இரக்கமற்ற துப்பாக்கிச் சூட்டில் உயிரிழந்த, மிருகத்தனமான தாக்குதலில் படுகாயமடைந்த பெரும்பாலானவர்கள் தினக்கூலிகள். இந்தக் கொடூர சம்பவத்தால், பலரின் குடும்பங்களும் நிலைகுலைந்து போயிருக்கின்றன.

தூத்துக்குடியில் ரத்தம் குடித்த போலீஸாரின் ரத்தத் தாகம் தீர்ந்ததாகத் தெரியவில்லை. துப்பாக்கிச்சூடு தொடர்ந்து நடக்கிறது. மக்களை அத்தியாவசியத் தேவைகளுக்காகக்கூட வீதிக்கு வரவிடாமல், எதிரிகள் போன்று அடித்து விரட்டுகிற கொடுமையும் நடக்கிறது. கிராமம் கிராமமாகச் சென்று தேடுதல் வேட்டையும் நடக்கிறது. சிலர் சட்டத்திற்குப் புறம்பாகக் கைது செய்யப்பட்டு போலீஸாரின் சித்திரவதைகளுக்கு உள்ளாக்கப்பட்டும் வருகின்றனர்.

பாதிக்கப்பட்டவர்களைச் சந்திக்க பல அரசியல் கட்சித் தலைவர்களும் தூத்துக்குடி அரசு மருத்துவமனைக்கு வந்துகொண்டிருந்த சமயம். இறந்தவர்களின் உடல்கள் பிரேதப் பரிசோதனை செய்யப்படுவதை அறிந்து மக்கள் அங்கு கூடியிருந்தனர். வந்திருந்த தலைவர்களிடம் தங்கள் குறைகளை மக்கள் கூறிக் கொண்டிருந்தனர். தலைவர்கள் அங்கிருந்து நகர்ந்ததும், மக்களை அப்புறப்படுத்த காவல்துறை நினைத்தது. ஆனால், மக்கள் கூட்டம் கலையவில்லை. முதல் வரிசையில் இருக்கும் காவலர்கள், தங்களுக்குப் பின்னால் இருக்கும் காவலர்களுக்கு ரகசியமாக சிக்னல் செய்கிறார்கள். உடனே அவர்கள், கூட்டத்தில் காவல்துறைக்கு எதிராகக் கோஷம் போடுபவர்களைத் தங்கள் மொபைலில் படம் பிடிக்கிறார்கள்.

சில நிமிடங்கள். காவல்துறை தடியடியைத் தொடங்குகிறது. குறிப்பாக, தங்கள் மொபைலில் படம் பிடித்தவர்களைக் குறிவைத்துத் துரத்துகிறது ஒரு போலீஸ்

தொடர்ச்சி 30ம் பக்கத்தில்















உ

# ஈழபதீஸ்வரர் ஆலயம்

**Eelapatheeswarar Aalayam**
**(Shive Temple)**
**Pavitt Hall, Union Road, Wembley HA0 4AU. Tel: 0208 902 3238**
**www.eelapatheeswarar.com**

## பிரும்மோற்சவ விஞ்ஞாபனம் 2018
## (10.06.2018 - 27.06.2018)

***சிவ மெய்யடியார்களே!***

எல்லாம் வல்ல ஸ்ரீ பர்வதவர்தினி அம்பிகா சமேத ஈழபதீஸ்வர பெருமானின் ஆலய பிரும்மோற்சவ விழா மங்களகரமான விளம்பி வருடம் வைகாசி மாதம் 28ம் நாள் 11.06.2018 திங்கள் கிழமை அன்று பரணி நட்ஷத்திரமும் திரயோதசி திதியும் கூடிய சுபதினத்தில் அன்று காலை 10.30 மணியளவில் கொடியேற்ற நிகழ்வுடன் ஆரம்பித்து 15 தினங்கள் பிரும்மோற்சவ விழா நடைபெற திருவருள் கைகூடியுள்ளது.

### பிரும்மோற்சவ நிகழ்ச்சிகள்

| | | | |
|---|---|---|---|
| 10.06.18 | ஞாயிறு | காலை 9.00 மணி | கணபதி ஹோமம் |
| | | மாலை 6.00 மணி | சாந்தி வழிபாடு, விநாயகர் விதி உலா |
| 11.06.18 | திங்கள் | காலை 10.30 மணி | கொடியேற்றம் |
| | | மாலை | விநாயகர் யாக ஆரம்பம் |
| 13.06.18 | புதன் | காலை | விநாயகர் யாக நிறைவு |
| | | மாலை | முருகன் யாக ஆரம்பம் |
| 16.06.18 | சனி | காலை | முருகன் யாக நிறைவு |
| | | மாலை | பக்தி முக்தி பாவனோற்சவம், சிவமஹாயகம் ஆரம்பம் |
| 20.06.18 | புதன் | மாலை | மாம்பழத் திருவிழா |
| 22.06.18 | வெள்ளி | மாலை | பஞ்சமுகார்ச்சனை கைலாய வாகன காட்சி |
| 23.06.18 | சனி | | மாலை சப்பறத்திருவிழா |
| 24.06.18 | ஞாயிறு | காலை | சித்திர தேரில் விதி உலா (10.30 மணிக்கு தேர் புறப்படும்) |
| 25.06.18 | திங்கள் | காலை 10.00 மணி | தீர்த்தோற்சவம் மஹாயாக நிறைவு |
| | செவ்வாய் | காலை | கொடியிறக்கம் |
| 26.06.18 | செவ்வாய் | காலை | பிராயசித்த அபிஷோகம் |
| | | | மாலை 07.00 மணி திருக்கல்யாணம் |
| 27.06.18 | புதன் | | மாலை வைரவர் மடை |

### பிரும்மோற்சவ நிகழ்ச்சி நிரல்

| காலை | மாலை |
|---|---|
| 08.30 அபிஷேகம் | 6.00 பூஜை |
| 10.00 பூஜை | 6.30 ஸ்தம்ப பூஜை |
| 10.45 ஸ்தம்ப பூஜை | 7.00 கலை நிகழ்ச்சிகள் |
| 11.30 வசந்த மண்டப் பூஜை | 7.30 வசந்த மண்டப் பூஜை |
| 12.00 சுவாமி திருவீதி உலா | 8.00 சுவாமி திருவீதி உலா |
| 01.00 பிரசாதம் வழங்குதல் | 9.30 பிரசாதம் வழங்குதல் |

**விசேட நாட்களில் பூஜை நேரம் மாற்றப்படும்**

சிவ அடியார்கள் அன்பர்கள் அனைவரும் பிருமோற்சவ விழாவில் பங்குபற்றி பூஜைக்கு தேவையான பொருட்களைக் கொடுத்து சிவபுண்ணிய பேறு பெற்று மண்ணில் நல்ல வண்ணம் வாழவேண்டுகிறோம்.

பிரும்மோற்சவ குருக்கள் : **சிவாகம சிரோன்மணி சிவஸ்ரீ ராஜசேகரக்குருக்குள்**

ஆலயகுருமார் : **சிவாகம கிரியாரத்தினா சிவஸ்ரீ சுரேஸ்வரகுருக்குள் / சிவாகம பாஸ்கர சிவ ஸ்ரீ கணேசக்குருக்குள்,**

இங்ஙனம் **ஆலய தர்மகர்த்தாக்களும், நிர்வாக சபையினரும், திருவிழா உபயகாரர்களும்**

FAST CASH
Since 1999

# Central Bank Approved Money Transfer to Sri Lanka

Transfer Fee from £5

## Why send with us?

- Central Bank approved Official Exchange Rates
- Fast, Safe and Secure - *Same Day Bank Credits**
- Your money sent from the UK and not credited locally
- Established in 1999 & UK FCA Authorised

* T & C Apply



*Credit our account online & calls us !* BARCLAYS
A/C Name : C.E.C. LTD
A/C No : 70713945 Sort Code : 20-36-47

www.efastcash.co.uk | 114-116, Station Road, Edgware HA8 7AA | Open 7 Days
FASTCASH IS A FCA & HM CUSTOMS AND EXCISE / REGISTERED BUSINESS. MSB 12112819 / FCA -PI 540536

**020 8886 4488 / 020 3437 1205**

COMMERCIAL BANK | HNB | BOC BANK OF CEYLON | PEOPLE'S BANK | NSB | SampathBank | SEYLAN BANK LIMITED | NDB bank | Nations TrustBank | HSBC | UNION BANK | PAN ASIA | Standard Chartered | DFCC Vardhana Bank | Amãna Bank

MODERN FAMILY APARTMENTS IN MT. LAVINIA,
# SRI LANKA

- DOUBLE ROOMS & 1,2,3 BED APARTMENTS
- FULLY FURNISHED WITH AIR CON, LIFT & PARKING

UK BOOKINGS MIKE ON 07733 261 999
VISIT OUR WEBSITE www.stayatmount.com

FROM £25 PER DAY*





*Now is the time to book your Flights or Holidays with us!*
CHECK OUR FARES FIRST, BEFORE YOU BOOK ELSEWHERE!

GREAT VALUE FARES*

KUWAIT AIRWAYS
COLOMBO RETURN! From £405* 01 Apr - 30 Jun 2018

| | | | |
|---|---|---|---|
| GULF AIR | £425* 01 Apr - 19 Aug 2018 | AIR INDIA | £485* 01 Apr - 30 Jun 2018 |
| TURKISH AIRLINES | £455* 06 Apr - 30 Jun 2018 | Emirates | £495* 06 Apr - 30 Jun 2018 |
| OMAN AIR | £475* 28 Apr - 30 Nov 2018 | SriLankan | £498* 08 May - 30 Jun 2018 |
| JET AIRWAYS | £480* 01 Apr - 30 Jun 2018 | ETIHAD AIRWAYS | £505* 19 Apr - 30 Jun 2018 |
| QATAR AIRWAYS | £480* 01 Apr - 18 Jul 2018 | *Inclusive taxes. Seats are subject to availability. | |

UNMISSABLE HOLIDAY DEALS

turyaa KALUTARA
Kalutara, Sri Lanka



A week on
All Inclusive
London Heathrow
7 Nights

fr £775pp

HolidayAir
A Travel Experience to Remember
Since 2006

Hotline - 07534 433111 020 8440 0770
130 HIGH STREET, BARNET EN5 5XQ WWW.HOLIDAYAIR.COM

*All advertised fares are of real time itineraries during the issue of publication. Fares include taxes & are subjected to availability and may change without any prior notice. T/ C conditions apply.*

சிவ தியாகராஜா

# துணுக்காய்ப் பயணம்

"உனது தாயையும் தந்தையையும் கொன்ற அசுரன் உன்னையும் உனது மனைவியையும் கொலை செய்யத் திட்டமிட்டிருக்கிறான், அதைத் தடை செய்ய வேண்டுமானால் அடுத்த பௌர்ணமி தினத்தன்று துணுக்காயிலிருக்கும் கொற்றவை கோயிலுக்குப் போ; அங்கே அதற்கான வழியை அன்னை உனக்குக் காட்டுவாள்"- எனச் சாமி வந்து சந்நதம் ஆடிய பூசாரியின் வார்த்தைகளைக் கேட்ட ஜோதிநாதன் ஒரு கணம் ஸ்தம்பித்து நின்றான்.

தன்னைச் சுதாரித்துக் கொண்ட ஜோதிநாதன் அருகிலிருந்த அமைச்சர் சத்திய வாக்கரைப் பார்த்துக் கேட்டான்:

"ஐயா, பூசாரி கூறிய வார்த்தைகளை நீங்களும் கேட்டீர்கள்; இதை எவ்வளவு தூரம் நம்பலாம்?"

மந்திரி சத்தியவாக்கர் சொன்னார்:

"ஜோதி, நம்பிக்கை என்பது நமது ஒவ்வொருவரதும் அறிவு நிலையைப் பொறுத்த விஷயம். நீ எனது தாயாரையும் தந்தையையும் இழந்தது எல்லோரும் அறிந்த விஷயம். அதை இந்தப் பூசாரியும் அறிந்திருக்கலாம். சந்திரவல்லிக்குக் கத்திக்காயம் பட்டதையும் இவன் அறிந்திருக்கலாம். எல்லாவற்றையும் இணைத்து ஒரு ஊகத்தில் இப்படிக் கதை விட்டிருக்கலாம். அல்லது, உனக்குத் தெய்வ நம்பிக்கை இருக்குமானால் அவனுக்கு உண்மையிலேயே சாமி வந்து, அவனுக்குக் கிடைத்த அருள் வாக்கை உனக்குத் தெரிவித்திருக்கிறான் என நீ நம்பலாம். அல்லது, உனக்கு ஆவித் தொடர்பில் நம்பிக்கையிருக்குமானால் - உனது தாயார் தற்கொலை செய்து உயிரை மாய்த்தவர். தற்கொலை செய்தவர்களின் ஆத்மா, அதற்குக் காரணமாக இருந்தவர்களைப் பழிவாங்க ஆவி ரூபத்தில் அலையும் என்பது ஒரு நம்பிக்கை. அந்தத் தாயாரின் ஆவி அந்தப் பூசாரியின் உடலில் புகுந்து இதை உனக்கு ஆணையாகப் பிறப்பித்திருக்கலாம்.

இவற்றில் எதை நம்புவது என்பது உனது அறிவையும், அனுபவத்தையும், தனிப்பட்ட நம்பிக்கைகளையும் பொறுத்த விஷயம்."

"ஐயா, கொற்றவைத் தெய்வத்திற்கான கோயில் இன்னும் இந்த நாட்டில் இருக்கிறதா? அத் தெய்வத்தை வழிபடுபவர்கள் இன்னும் இங்கே இருக்கிறார்களா?"

"ஜோதி, இங்கிருந்து வட மேற்காக அரைக்காத தூரத்தில் துணுக்காய் என்றொரு கிராமம் இருக்கிறது. அக்கிராமத்திற்கு மேற்கேயுள்ள ஜனரஞ்சகமில்லாத அடர்ந்த காட்டிற்குள் ஆயிரத்து ஐநூறு ஆண்டுகளுக்கு முன்னர் கட்டப்பட்ட ஒரு பள்ளிப்படைக் கோயில் இருக்கிறது. அது இப் பிரதேசத்தில் நடைபெற்ற ஒரு பெரும் போரில் உயிரிழந்த இந்நாட்டு அரசன் காடவராயனதும் அவனது வீரர்களினதும் ஞாபகார்த்தமாக கொற்றவைத் தெய்வத்திற்கு எடுக்கப்பட்ட கோயில். அக்காலத்தில் இந்நாட்டுக்கு வன்னி என்ற பெயர் இருக்கவில்லை, இதை உத்தரதேசம் என அழைத்தார்கள். வடக்கேயுள்ள யாழ்ப்பாணக் குடா நாடு நாக நாடு என அழைக்கப்பட்டது. அன்று அநுராதபுர அரசனாக இருந்த வசபன் நாக நாட்டைக் கைப்பற்றும் பொருட்டு தனது மூத்த மகன் துட்ட நாசினின் தலைமையில் ஒரு பெரும் படையை நாகநாட்டின் தலைநகரான கந்த கோட்டத்தை நோக்கி அனுப்புகிறான். ஈழத்தின் மேற்குக் கரையோரமாக அப்படை நகர்ந்து வருகிறது. நாக நாடு கைப்பற்றப்பட்டால் அடுத்து உத்தர தேசமும் வீழ்ந்து விடும் என்பதை உணர்ந்த காடவராயன் அந்தப் படையோடு பொருதுகிறான்.

அக் கோயிலிருக்கும் இடத்திற்கு மேற் திசையில் அநுராதபுர சைன்யத்திற்கும் உத்தரதேச வீரர்களுக்குமிடையே கடுமையான போர் நடந்தது. அப்போரில் அரசன் காடவராயனோடு பல நூறு போர் வீரர்கள் உயிர் நீத்தார்கள். வீர சொர்க்கம் புகுந்த அம் மன்னனதும், கொற்றவையை வணங்கிப் போர்க்களம் புகுந்த அவ் வீரர்களதும் நினைவாக- அவர்களுக்கு அஞ்சலி செய்யும் முகமாக நிறுவப்பட்ட பள்ளிப்படைக் கோயில் அது!

அவ்வீரர்களின் நினைவாகக் கட்டப்பட்ட இப்பள்ளிப்படை கோயிலை ஆயிரம் ஆண்டுகாளக அருகாமையிலுள்ள கிராம மக்கள் பரிபாலித்து, காலத்திற்குக் காலம் புனரமைத்து ஆதரித்து வந்தார்கள். ஆனால், காலப் போக்கில் கொற்றவை வழிபாடு பிரபலமிழந்து போய், கடந்த ஐநூறு ஆண்டுகாளக இக் கோயில் கவனிப்பாரற்றுப் போய், பாழடைந்து சுற்றுவர அடர்ந்த காடு மண்டிக் கிடக்கிறது.

அடுத்து வரும் பௌர்ணமியன்று நிலவு எழும் நேரம் அக்கோயிலுக்குப் போ ஜோதி; நிச்சயமாக இவற்றிற்கெல்லாம் ஒரு தீர்வோ அல்லது சமிக்ஞையோ அங்கே கிடைக்கும் என நான் நம்புகிறேன்" என்றார் மந்திரி சத்தியவாக்கர். அடுத்து வந்த பௌர்ணமி தினத்தன்று ஜோதிநாதன் தனது புதிய மனைவியிடம் கூறினான்:

"சந்திரா, அன்று குரவைக் கூத்து நடந்த பின் அந்தப் பூசாரி சொன்ன செய்தியை நீயும் கேட்டிருப்பாய்; நான் இன்றிரவு துணுக்காயிலுள்ள அந்தக் கொற்றவை கோயிலுக்குப் போய் வரலாமென்றிருக்கிறேன்."

அவளுக்கு அவன் தன்னை விட்டு இரவு நேரத்தில் வெளியே போவது விருப்பமில்லை. முகத்தை 'உம்' மென்று வைத்துக் கொண்டு பதில் பேசாமல் இருந்தாள்.

"என்ன சந்திரா, நான் கேட்டதற்குப் பதிலேதும் இல்லை."

"எனக்கு நீங்கள் அங்கே தனியாகப் போவதில் விருப்பமே இல்லை, அங்கே என்னென்ன அபாயம் காத்திருக்குமோ தெரியாது."

"எங்கே இருந்தாலும், வரவேண்டும் என்ற நியதி இருந்தால் அபாயம் வரும்; இத்தனை கட்டுக்காவலுள்ள மாளிகைக்குள் அந்த அபாயம் உன்னைத் தேடி வரவில்லையா? நான் சென்று இவற்றிற்கு ஒரு தீர்ப்புக் கிடைக்குமா என்று பார்க்கிறேன்."

"அப்படிப் போவதானால் தனியாகப் போகவேண்டாம், துணைக்கு சில வீரர்களை அழைத்துக் கொண்டு போங்கோ"

"என்னைத் தனியாகப் போகும்படிதான் பூசாரி சொல்லியிருந்தான். எனது வாளிலும் தோளிலும் எனக்கு நம்பிக்கையிருக்கிறது. நீ ஒன்றுக்கும் பயப்பட வேண்டாம். எனக்கு எதுவும் நேராது; நான்

## பூதத்தம்பி கோட்டை

அத்தியாயம் 22



போய்விட்டு வருகிறேன்".

துணுக்காய்க்குச் செல்லும் வழியை அறிந்து கொள்வதற்காக அமைச்சர் சத்தியவாக்கரைப் பார்க்கச் சென்றான் ஜோதிநாதன்,

"ஜோதி, அக் கொற்றவை கோயில் இருக்குமிடம் அடர்ந்த காடு மண்டிய பகுதி.

நீ இங்கிருந்து பாலியாற்றிற்கப்பால் வடக்கே செல்லும் வண்டில் பாதை வழியே சென்றால் அப்பாதை அரைக்காத தூரத்தில் மாங்குளத்திலிருந்து மேற்கே செல்லும் பாதையை மல்லாவி என்ற கிராமத்தில் தொடுகிறது. அப்பாதையில் இடது பக்கம் திரும்பி மேற்கு நோக்கி மேலும் கால் காதம் போனால் துணுக்காய் கிராமத்தை அடையலாம்.

அக் கிராமத்தில் யாரையாவது வழி கேட்டால் காட்டிற்குள் போகும் வழியைக் காட்டுவார்கள். அங்கே தங்கிவிட்டு நிலவு எழும் சமயம் காட்டுக் கோயிலுக்குப் போ. போகும் போது ஒரு மண் விளக்கு, திரி, எண்ணெய், நெருப்புக் கல் எல்லாம் எடுத்துக் கொண்டு போ. அக் கிராம மக்கள் அக்கோவிலுக்குப் போவதாகத் தெரியவில்லை. பல நூற்றாண்டுகளாக மனித நடமாட்டமில்லாமல் அக் கோயில் பாழடைந்து போய்க் கிடக்கும். எதற்கும்

உனது வாள், வேல் எடுத்துக்கொண்டு போ. உனது தேடல் வெற்றிகரமாக அமைய எனது வாழ்த்துக்கள்" என்றார் சத்திய வாக்கர்.

அன்று பிற்பகல் தனது குதிரைக்கு தோலினால் செய்யப்பட்ட இருக்கை மாட்டி, சேணம் பூட்டி, வேண்டிய பொருட்களை இருக்கையிலிருந்து பக்கவாட்டில் தொங்கும் தோற்பையில் எடுத்துக் கொண்டு, இடுப்பில் தொங்கிய நீண்ட வாளோடும், சிறிய கைவாளோடும், முதுகுப்புறம் தோலினால் பொருத்தப்பட்ட நீண்ட வில்லோடும், அம்புகள் நிறைந்த தூணியோடும், போருக்குப் புறப்படுவது போன்ற போர்க்கலன்களோடு புறப்பட்டான் ஜோதிநாதன். அவன் தனியாகப் போவதை குமார வன்னியன் மாமா விரும்பாத போதிலும், தாத்தா கைலாய வன்னியர் அவனுக்கு ஆசி வழங்கி வழியனுப்பி வைத்தார். பாலியாற்றில் முழங்காலளவு நீர் ஓடிக்கொண்டிருந்தபடியால் அவனது குதிரை ஆற்றை இலகுவாகக் கடந்து வடக்கே போகும் வண்டிப்பாதையில் மெது நடை போட்டுச் சென்றது.

சிறிது தூரம் சென்றதும் காடு இரு பக்கமும் அடர்த்தியாகக் காணப்பட்டது. அடர்ந்த காட்டினுள் இருந்து வரும் சில்லென்ற ஒரு ரீங்கார சத்தமும், பறவைகளின் 'கீச் கீச்' சென்ற ஒலியும் அவனுக்குப் பரிச்சயமானவை. வண்டிப் பாதைக்குக் குறுக்கே ஓடும் முயல்களையும், மரைக்களையும் தவிர அவன் செல்லும் பாதையில் மனித நடமாட்டம் இருப்பதாகவே தெரியவில்லை. இந்த அடர்ந்த காட்டின் இடையிடையே எப்படிக் கிராமங்கள் தோன்றியிருக்கும் என வியந்தான் ஜோதிநாதன். 'முற்காலத்தில் சிறு சிறு குழுக்களாக காட்டில் நாடோடிகளாவிருந்து வேட்டையாடி, உணவு சேகரித்து வாழ்ந்த மக்கள் விவசாயம் அறிமுகப்படுத்தப்பட்ட பின்னர் காட்டின் நடுவே வெளிகளாக இருந்த இடங்களில் குடிசைகள் அமைத்து, கூட்டாக ஒருவருக்கொருவர் உதவியாக வாழ்ந்த இடங்களே பின்னர் கிராமங்களாக உருவெடுத்தன' என நல்லூர் திண்ணைப் பள்ளியில் சிறு வயதில் படித்தது நினைவுக்கு வந்தது.

குதிரையில் அரைக்காத தூரம் சென்றபின் அவன் சென்று கொண்டிருந்த வண்டிப்பாதை கிழக்கு மேற்காகச் சென்ற அகலமான மட்பாதையோடு இணைந்து கொண்டது. அந்த முச்சந்திக்குச் சமீபமாக சில குடிசைகள் காணப்பட்ட போதிலும் அங்கே மனித நடமாட்டம் எதுவும் காணப்படவில்லை. அச்சந்தியில் தனது குதிரையை இடது பக்கமாக, மேற்கு நோக்கிச் சென்ற பாதையில் திருப்பிக்கொண்டு மேலே பயணித்தான். சிறிது தூரம் சென்றதும் எதிரே ஒரு மாட்டு வண்டி அதிவேகமாக - அவ்வண்டியை எவரோ பின்னால் துரத்தி வருவது போன்ற தோற்றத்தோடு ஓடி வந்து கொண்டிருந்தது. அவ்வண்டி அருகே வந்ததும் தனது கரத்தை நீட்டி அந்த வண்டியை நிறுத்தினான் ஜோதிநாதன். ஒரு வயதான வண்டிக்காரன் இரட்டை எருதுகள் பூட்டிய அந்த வண்டியை, எருதுகளின் மூக்கணாங்கயிற்றை 'கோ கோ' என்ற ஒலியிட்டு இழுத்து நிறுத்தினான். வண்டியில் பொருட்கள் ஏதுமின்றி வெறுமையாக இருந்தது.


"எதற்காக ஐயா இப்படித் தலை தெறிக்க ஓடி வருகிறீர்கள், வண்டியில் தான் பொருட்கள் ஏதும் இல்லையே?"

"தம்பீ, நீ துணுக்காய்க்குப் போவதாக இருந்தால் அங்கே போக வேண்டாம்."

"ஏன் அப்படி?"

"கடந்த சில நாட்களாக துணுக்காய்க்குப் பின்னாலுள்ள காட்டில் ஓநாய்கள் புகுந்து விட்டிருக்கின்றன. இன்று மதியம் காட்டுக்குள்ளிருந்து கிராமத்திற்குள் புகுந்த ஓநாய், பொதுக் கிணற்றில் தண்ணீர் எடுத்தக்கொண்டிருந்த ஒரு பெண்ணைக் கடித்துக் குதறிக் கொன்றுவிட்டுப் போய்விட்டது. அங்கே மக்களெல்லாம் பீதியில் இருக்கிறார்கள். நான் மாங்குளத்திலிருந்து துணுக்காய் சத்திரத்துக்கு அரிசி மூட்டைகளை எடுத்துக்கொண்டு போய் கொடுத்து விட்டு வருகிறேன். ஓநாய்கள் துரத்தி வருமோ என்ற பயத்தில் வேகமாக காளைகளை விரட்டிக் கொண்டு வருகிறேன்" என்றான் வண்டிக்காரன்.

"ஒரு முக்கிய வேலையாக துணுக்காய் போக வேண்டியிருக்கிறது. என்னிடம் ஆயுதங்கள் இருக்கின்றன;



நான் சமாளித்துக் கொள்ளுவேன்" என்ற ஜோதிநாதன், "ஐயா துணுக்காய் சத்திரம் எந்த இடத்தில் இருக்கிறது?" என்று கேட்டான்.

"தம்பி, இந்தப் பாதை கிராமத்திற்குள் போனதும் முதலில் சில குடிசைகள் காணப்படும். அதற்கு அப்பால் வலது பக்கத்தில் கற்சுவர்களோடு உள்ள ஓடு வேய்ந்த மாடிக் கட்டிடம்தான் சத்திரம்" என்றான் வண்டியோட்டி.

"மிக்க நன்றி ஐயா"

"தம்பீ, மாலை மங்கிக் கொண்டு வருகிறது, இந்த நேரம் அங்கே போவது நல்லதல்ல; எதற்கும் கவனமாக இரு" என எச்சரித்து விட்டு வண்டிக்காரன் விரைந்தான்.

அக் கிராமத்தினுள் ஜோதிநாதன் சென்றபோது அமைதியான சோகம் பொதிந்த சூழல் அவனை வரவேற்றது. தொழுவங்களில் ஆடுகளும் மாடுகளும் அடைக்கப்பட்டிருந்தன. கூடுகளுக்குள்ளிருந்து கோழிகள் கொக்கரித்துக் கொண்டிருந்தன. ஆனால், மனிதர் எவரும் கண்களில் தென்படவில்லை.

வசந்தகாலம் தனது வர்ணஜாலங்களைக் காட்டிக்கொண்டிருந்தது. மாம்பூக்கள் நாலாபுறமும் நறுமணத்தைப் பரப்பிக் கொண்டிருந்தன. மரங்கள் எல்லாம் சருகுகளை உதிர்த்துவிட்டுப் புதிய இலைகளை ஆடையாகப் போர்த்தியிருந்தன.

சந்திரத்தைக் கண்டுபிடிப்பதில் சிரமம் இருக்கவில்லை. சத்திரத்தின் வாசலுக்கு முன்னால் நீண்ட தாழ்வாரத்தைத் தாங்கி நின்ற தூண் ஒன்றில் குதிரையைக் கட்டிவிட்டு சத்திரத்தின் மூடியிருந்த வாசற் கதவைத் தட்டினான். மூன்றாவது தடவை தட்டியபோது வாசற் கதவு திறந்தது.

ஆயுத பாணியாக அரைப்பட்டியில் நீண்ட வாளும், முதுகில் அம்பு வில்லும் தரித்து உள்ளே நுழைந்த ஜோதிநாதனைக் கண்டதும் கதவைத் திறந்த சத்திரக்காரர் ஒரு கணம் தடுமாறினார்.

"இங்கே இன்று ஒரு அசம்பாவிதம் நடந்திருக்கிறது; அதனால்தான் சத்திரத்தை மூடி வைத்திருக்கிறேன். மன்னிக்க வேணும்; உள்ளே வந்து உட்காருங்கோ"

சத்திரத்தின் வரவேற்பு அறையில் நான்கு நீண்ட மேசைகளும் அவற்றின் இரு பக்கங்களிலும் நீண்ட மர இருக்கைகளும் காணப்பட்டன. தூர இருந்த மேசையருகே உட்கார்ந்திருந்த இருவர் மௌனமாக இரு குவளைகளில் மது அருந்திக் கொண்டிருந்தார்கள்.

முதுகில் பொருத்தியிருந்த வில்லையும், அம்புத் தூணியையும் கழற்றி அந்த இருக்கையில் வைத்துவிட்டு, அதன் அருகில் அமர்ந்த அவனைப் பார்த்து -

"தம்பி வெளிக் கிராமத்திலிருந்து வருகிறீர்கள் போலத் தெரிகிறது. இன்று மதியம் காட்டிலிருந்து வந்த ஒரு ஓநாய் எங்க ஊர்ப் பெண்ணொருத்தி கிணற்றில் நீர் அள்ளிக்கொண்டு இருக்கும் போது அவளைக் கடித்துக் கொன்று போட்டுப்போயிட்டுது. அந்த நேரத்திலிருந்து எல்லோரும் நடுநடுங்கிக் கொண்டிருக்கிறோம். ஊரில் எல்லோரும் தத்தமது வீடுகளைப் பூட்டிக் கொண்டு உள்ளே இருக்கிறார்கள். கடந்த சில நாட்களாக இரவு நேரத்தில் ஓநாய்கள் ஊளையிடும் சத்தம் காட்டினுள் இருந்து கேட்கிறது. இதற்கு முன் இக்காடுகளில் ஓநாய்கள் இருந்ததே இல்லை. இவை எங்கேயிருந்து வந்தனவோ தெரியாது. இன்று இந்த ஓநாய் ஊருக்குள்ளேயும் வந்து விட்டது. வழக்கமாக இந் நேரம் இச் சத்திரம் ஊர் மக்களால் நிரம்பி வழிந்து கலகலப்பாக இருக்கும். இன்று வெறிச்சிட்டுப் போய்க் கிடக்கிறது. உங்களுக்குப் பனங்கள்ளு அல்லது சாராயம் கொண்டு வரவா?"

"இப்போ எதுவும் வேண்டாம்"

"அப்படியானால் பொறுத்திருங்கோ; இருண்ட பின்னர்தான் இங்கே சோறும் கறியும் தயாராகி முடியும்" என்றார் சத்திரக்காரர்.

சிறிது நேரம் சென்றபின் அச் சத்திரத்தின் மாடிப்படிகளில் ஒரு இளம்பெண் இறங்கி வந்தாள். பதினெட்டு அல்லது இருபது வயதிருக்கும்; சுமாரான அழகி; தலை மயிர் வாரி விடாமல் கலைந்து கிடந்தது.

அவள் நேரே வந்து ஜோதிநாதன் அமர்ந்திருந்த மேசையில் எதிரேயிருந்த இருக்கையில் அமர்ந்தாள்.

"ஐயா வெளியூர் போல" என்றாள்.

அவன் தலையசைத்தான்.

" உங்களைப் போலப் பெரிய இடத்துப் பிள்ளைகள் இந்தக் கிராமத்திற்கு வருவதில்லை. அப்படி வந்தாலும் இந்தச் சத்திரத்தில் வந்து தங்குவதில்லை. இங்கே சில நாட்கள் தங்கியிருப்பீர்கள் போல"

"இல்லை, நான் இன்றிரவே திரும்பி விடுவேன்"

"அப்படியானால் என்னோடை மேலே மாடிக்கு வாருங்களேன்; வேண்டிய சுகம் தருகிறேன்."

ஜோதிநாதன் யோசித்தான், அவள் எதற்காகத் தன்னை அழைக்கிறாள் என்பது நன்றாகவே புரிந்தது.

நிலவு கிளம்ப இன்னும் வெகுநேரம் இருந்தது. அது வரை பேச்சுத்துணை இல்லாமல் இந்த மேசையில் உட்கார்ந்திருப்பது இயலாத காரியம்.

"சரி வருகிறேன்" என்றவன் இருக்கையின் அருகிலிருந்த வில்லையும் அம்புத்தூணியையும் எடுத்துக்கொண்டு அவளைப் பின் தொடர்ந்தான்.

மேல் மாடிக்குச் சென்ற அந்தப் பெண் தனது அறைக்கதவைத் திறந்து அவன் உள்ளே வந்ததும் அதைச் சாத்தி மூடினாள்.

அது ஒரு சிறிய அறை. பத்து முழ நீளமும், பத்து முழ அகலமும் கொண்ட அந்த அறையில் ஒரு மெத்தைக் கட்டிலும், அறையின் மூலையில் ஒரு மரப்பெட்டியும், ஒரு தண்ணீரக் கூஜாவும் இருந்தன.

அவன் தனது வில்லையும், அம்புத் தூணியையும், அரைப் பட்டியிலிருந்த வாளையும் கழற்றி நிலத்தில் வைத்துவிட்டு அக் கட்டிலில் அமர்ந்தான்.

தனது இடும்புப் பட்டியில் பொருத்தியிருந்த தோல் பையைத் திறந்து இரு தங்க நாணயங்களை எடுத்து அவளிடம் கொடுத்தான்.

அதைக் கண்டதும் ஒரு கணம் விக்கித்து நின்ற அப் பெண், "மிக்க நன்றி ஐயா" என அந்த நாணயங்களைப் பெற்றுக் கொண்டு தான் மேலே அணிந்திருந்த மார்புக் கச்சையைக் களைய ஆரம்பித்தாள்.

"ஆடையைக் களைய வேண்டாம்" என்றான் ஜோதிநாதன்.

*- தொடரும்*

# பிக்-பாஸ் சுஜா வருணியின் காதலன் சிவாஜி பேரன்!



பிக்பாஸ் வீட்டில் இருந்தபோது சுஜா வருணி கூறிய அத்தான் நான் தான் என்று சிவாஜி கணேசனின் பேரன் சிவாஜி தேவ் தெரிவித்துள்ளார். நடிகர் திலகம் சிவாஜி கணேசனின் மகன் ராம்குமாரின் மகன் சிவாஜி தேவ். சில படங்களில் நடித்துள்ள அவரும், பிக் பாஸ் பிரபலம் சுஜா வருணியும் காதலிப்பதாகவும், நிச்சயதார்த்தம் நடந்துவிட்டதாகவும் செய்திகள் வெளியாகின. அவர்கள் திருப்பதி கோவிலில் ஜோடியாக எடுத்துக் கொண்ட புகைப்படமும் வெளியானது. ஆனால், நிச்சயம் நடக்கவில்லை. என்று சுஜா மறுத்தார். சிவக்குமார் சிவாஜி தேவ், சுஜா வருணியுடனான உறவு குறித்து புகைப்படத்துடன் விளக்கம் அளித்துள்ளார். நான் சுஜா வருணியை 11 ஆண்டுகளாக காதலித்து வருகிறேன். என் இயற்பெயர் சிவக்குமார் என்று வீட்டியுள்ளார். என் அம்மா இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு இறந்துவிட்டார். அவரின் ஆசியுடன் என் பெயரை சிவாஜி தேவில் இருந்து சிவக்குமாராக மாற்றிக் கொண்டேன். இனி இந்த பெயருடன் தான் திரைப்பயணத்தை தொடர்வேன். பிக்பாஸ் வீட்டில் அவர் பேசிய அத்தான் நான் தான் என்று விளக்கம் அளித்துள்ளார் சிவக்குமார்.

# கமலினால் நஷ்டமடைந்தேன்!
## நடிகர் விவேக் தாக்கு



நடிகர் கமல்ஹாசனின் படத்தால் தனது படம் நஷ்டமடைந்தது என நகைச்சுவை நடிகர் விவேக் குற்றஞ்சாட்டியுள்ளார். வையம் மீடியாஸ் சார்பில் வி.பி. விஜி தயாரித்து இயக்கியுள்ள படம் எழுமின். நடிகர் விவேக், நடிகை தேவயானி உள்ளிட்டோர் ஆறு சிறுவர்களுடன் சேர்ந்து நடித்துள்ள இந்த படம், தற்காப்பு கலையை மையமாக வைத்து உருவாகியுள்ளது. இந்த படத்தின் டிரெய்லர் வெளியீட்டு விழா சென்னையில் நடந்தது. விஷால் இதனை கொடியசைத்து துவக்கி வைத்தார். விழாவில் பேசிய விவேக் தான் நடித்த பாலக்காட்டு மாதவன் படத்துக்கு நேர்ந்த கொடுமை பற்றி பரபரப்பாக பேசினார்.

இன்றைக்கு சினிமாவின் நிலை மாறிவிட்டது. யோகிபாபுவுக்கு நயன்தாரா கிடைக்குறாங்க. ஒரு காலத்துல சிம்புக்கு கிடைச்சவங்க. நான் 'வல்லவன்' படத்துல கிடைச்சத பற்றி சொல்றேன். எனது படம் பாலக்காட்டு மாதவன் சூப்பரான காமெடி படம் நல்லா ஓடி இருக்க வேண்டிய படம். ரிலீசுக்கு எல்லாம் தயாராக இருந்தபோது, திடீரென ஒரு பெரிய நடிகரின் படத்தை 15 நாட்களுக்கு முன்கூட்டியே ரிலீஸ் செய்தாங்க. நான் எவ்வளவோ கேட்டும் மறுத்துட்டாங்க. அன்றைக்கு தயாரிப்பாளர் சங்கத்துல சிறு தயாரிப்பாளர்களுக்காக பேச ஆள் இல்லை. அதனால் அந்த படம் நஷ்டம் அடைந்தது. அப்புறம் எப்படி இந்த தயாரிப்பாளர் மீண்டும் படம் எடுக்க வருவார்?

பாலக்காட்டு மாதவன் படம் 2015ம் ஆண்டு ஜூலை 3ம் தேதி ரிலீசானது. அதே நாளில் தான் கமலின் 'பாபநாசம்' படம் வெளியானது. எனவே விவேக் நேரடியாக பெயரை குறிப்பிடாவிட்டாலும், கமலை தான் அவர் நேரடியாக குறிப்பிடுகிறார் என்பது தெரியவந்துள்ளது. நடிகர் விவேக் இவ்வாறு பேசியுள்ளது கோலிவுட்டில் பரபரப்பை ஏற்படுத்தியது.

# சினிமா உலக தேவதை நயன்தாரா!



டயானா மரியம் குரியன்... இதுதான் நயன்தாராவின் இயற்பெயர். வயது 33.

முதல் படம் மலையாளத்தில் வெளியான 'மனசினக்கரெ' (2003).

இரண்டாவது தமிழ்ப் படத்திலேயே சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்துடன் (சந்திரமுகி) ஜோடி சேர்ந்தார்.

நயன்தாரா என்ற பெயருக்கு 'நட்சத்திரக் கண்கள்' என்று அர்த்தம்.

குஜராத், கேரளா, புதுடெல்லி ஆகிய மூன்று மாநிலங்களில் பள்ளிக் கல்வி பெற்றவர்.

சொந்தக் குரலில் பேசி நடித்த முதல் தமிழ்ப் படம் 'நானும் ரவுடிதான்'.

தமிழ், கன்னடம், தெலுங்கு, மலையாளம் ஆகிய மொழிகளில் நடித்து வெளிவந்த திரைப்படங்களின் எண்ணிக்கை 64 (2018 மே வரை)

50-53 கிலோ என்கிற அளவிலேயே தன் எடையைப் பராமரிப்பதில் மிகவும் கவனமாக இருக்கிறார் நயன். உயரம் 5.5 அடி.

இதுவரை 38 விருதுகளைப் பெற்றுள்ளார். இவற்றில் நான்கு பிலிம்ஃபேர் விருதுகள்

'டாடா ஸ்கை' நிறுவனத்துக்கான சமீபத்தில் நான்கு மொழிகளில் நடித்துக் கொடுத்த 50 விநாடி விளம்பரப் படத்துக்கு நயன் பெற்ற சம்பளத் தொகை 5 கோடி ரூபாயாம்!

சிம்பு, பிரபுதேவா, விஷ்ணுசிவன் என்று பகிரங்கமாக காதலித்து 'நெருங்கி' வாழ்ந்த இவர் சினிமா உலகில் தேவதையாகப் பவனி வருகிறார்.

# டி.ராஜேந்தர் படத்தில் வில்லியாக நமீதா!



டி.ராஜேந்தர் இயக்கும் காதல் படத்தில் வில்லியாக நடிக்கிறார் நமீதா. பலகாலம் கழித்து ஒரு படத்தை இயக்கிறார். தனக்குப் பிடித்த ஒரு கதையை கையில் எடுத்துள்ளார். படத்தில் இரு காதல் ஜோடிகள்.

நாயகியாக நடிக்காமல் வில்லியாக நடிப்பாரா நமீதா? டி.ராஜேந்தர் மீது அவர் இனம் தெரியாத மதிப்பு வைத்திருக்கிறார். கதை கேட்டு விட்டுத்தான் முடிவு எடுத்ததாக செய்தி கூறுகிறது. பொறுத்திருந்து பார்ப்போம்!

# 'திருமணமில்லை! நெருக்கம் தான்!' 'சூப்பர் சிங்கர்' பிரகதி கூறுகிறார்



'விஜய்' டிவி சூப்பர் சிங்கர் பிரகதிக்குத் திருமணமா? அப்போது மூன்றாவது இடத்தை அவர் தட்டிக் கொண்டபோது, அவரது பாட்டுப்போலவே கவர்ச்சியாகவும், அழகாகவும் இருந்தார்.

இப்போது 21வயது. வித்தியாசமான படங்களை எடுக்கும் 'பாலா' தனது 'இளம் கொஞ்சும்' படத்தின் நாயகியாக அவரைத் தன்னோடு சேர்த்துக்கொண்டார். பார்த்த மாத்திரத்திலேயே தன் படத்துக்கு ஏற்றவர் என்பதை கண்டுபிடித்து விடும் நிபுணத்துவம் பாலாவிடம் உண்டு. நடிப்பு அனுபவம் இல்லா விட்டாலும் பரவாயில்லை. நடிக்க வைப்பார். பாலாவின் பிரகதி படம் வேலைகள் எந்த அளவில் இருக்கிறது என்று தெரியாவிட்டாலும், பிரகதி தமிழ் சினிமா வட்டாரத்தில் பிரபலம் சூது கவ்வும், 'தி வில்லா' படங்களின் இளம் கதாநாயகன் அசோக்செல்வன் பிரகதியைத் திருமணம் செய்யப்போவதாக காதோடு காதாகப் பேச்சடிபட்டது. "அசோக் செல்வனுடன் நெருங்கிப் பழகுவதால், திருமணம் என்று சொல்லாமா? நான் பள்ளியில் படிக்கிறேன். இப்போது திருமணம் செய்யமாட்டேன்" என்று கூறுகிறார். பிரகதி. என்னவோ, திருமணம் செய்கிற நேரம் வரும் போது சொல்லுங்கள் பிரகதி!

# ஆர்யாவின் அபர்னதி ஜி.வி.பிரகாஷ் காதலி!

'கலர்' தமிழ் தொலைக்காட்சி ஆர்யாவுக்காக நடத்திய எங்க வீட்டு மாப்பிள்ளை நிகழ்ச்சியில் கலந்து கொண்ட அபர்னதி ஜி.வி. பிரகாஷ் படத்தில நடிக்க உள்ளார். ஆர்யாவுக்கு பெண் தேட நடந்த எங்க வீட்டு மாப்பிள்ளை நிகழ்ச்சி மூலம் பிரபலமானவர் அபர்னதி. ஆர்யாவுக்கு சரியான ஜோடி இந்த பொண்ணு தான் என்று அவரின் நண்பர்கள் தெரிவித்தனர். ஆர்யாவும் அபர்னதி மீது அக்கறை காட்டினார். ஆனால் இறுதியில் யாரையும் திருமணம் செய்யவில்லை. ஜி.பி. பிரகாஷ் எங்க வீட்டு மாப்பிள்ளை நிகழ்ச்சியில் பரப்பை ஏற்படுத்திய அபர்னதி காவியத் தலைவன் படத்தை இயக்கிய வசந்தபாலன் இயக்குகிறார். வசந்தபாலன் ஜி.வி. பிரகாஷ், சேர்ந்து பணியாற்றும் இந்தப் படத்தின் படப்பிடிப்பு பூஜையுடன் சென்னையில் துவங்கியது. படத்தில் ராதிகா சரத்குமார், பசங்க படம் புகழ் பாண்டு உள்ளிட்டோர் முக்கிய கதாபாத்திரங்களில் நடிக்கிறார்கள். ஹீரோ வசந்தபாலன் படத்தில் நடிப்பதோடு மட்டும் அல்லாமல் இசையமைக்கவும் செய்கிறார். ஹீரோயின் பிக்பாஸ் நிகழ்ச்சியில் கலந்து கொண்டு பிறகு ஜூலி ஹீரோயின் ஆனார். தற்போது அவர் வழியில் அபர்னதியும் ஹீரோயினாகிறார்.



# மீண்டும் படம் இயக்கும் தனுஷ்! ஹீரோ யார் தெரியுமா



மீண்டும் ஒரு படத்தை இயக்க தயாராகிவிட்டாராம் தனுஷ். நடிகர், தயாரிப்பாளர், பாடல் ஆசிரியர், பாடகராக இருந்த தனுஷ் ப. பாண்டி படம் மூலம் இயக்குனர் ஆனார். ப. பாண்டி படத்தில் ராஜ்கிரண் ஹீரோவாக நடித்தார். தொடை தெரிய வேட்டிக் கட்டி நடித்து வந்த ராஜ்கிரணை ஜீன்ஸ், டி சர்ட் போட்டு மாடர்னாக காட்டியிருந்தார் தனுஷ். ப. பாண்டி படத்தை பார்த்தால் அது தனுஷ் இயக்கிய முதல் படம் என்றே கூற முடியாத அளவுக்கு நன்றாக இருந்தது. 'ரிலாக்ஸ்' செய்ய வேண்டும் என்று நினைக்கும் போது எல்லாம் பார்க்கும்படியான படமாக ப. பாண்டி அமைந்துவிட்டது. தனுஷ் அடுத்த படத்தை இயக்க தயாராகிவிட்டாராம். ப.பாண்டி படத்தில் பிளாஷ்பேக்கில் மட்டுமே வந்த தனுஷ் இந்த படத்தில் ஹீரோவாக நடிக்க முடிவு செய்துள்ளாராம். இந்த படத்தின் படப்பிடிப்பு வரும் ஆகஸ்ட் மாதம் துவங்கும் என்று கூறப்படுகிறது. தனுஷின் படத்தில் யார் ஹீரோயினாக நடிக்கப் போகிறார்களோ தெரியவில்லை. ப. பாண்டியை போன்றே இந்த படமும் நிச்சியம் ஹிட்டாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. ஹாலிவுட் படத்தில் நடித்த தனுஷ், கேன்ஸ் திரைப்பட விழாவில் கலந்து கொண்டு சிவப்புக் கம்பளத்தில் நடந்தார். 'இவன்லாம் ஹீரோவாக நடிக்க வந்துட்டான்' என்று விமர்சனம் எழுந்ததை கேட்டு கண் கலங்கிய அதே தனுஷ் தான் இன்று அசத்தி வருகிறார். வாழ்த்துக்கள் தனுஷ்.

# ஸ்ரீ தேவியின் அழகுத் தேவதைகள்!



மறைந்த அழகு தேவதை பெற்றெடுத்த அழகுத் தேவதைகள்தான் இவர்கள்! தமிழ் சினிமா உலகில் ஆரம்பித்து, இந்தி படவுலகிலும் கொடிகட்டிப் பறந்த நடிகை ஸ்ரீதேவியின் மகள்கள்தான் இந்தக் குமரிகள்!

ஸ்ரீ தேவின் கணவர் போனி கபூரின் தம்பி மகளான நடிகை சோனம் கபூரின் கல்யாண நிகழ்ச்சி சமீபத்தில் மும்பையில் நடைபெற்றது. இதில் ஸ்ரீ தேவியின் மகள்கள் ஜான்வி, குஷி கலந்து கொண்டனர். இருவரும் ஒரே மாதிரியான உடை அணிந்திருந்தனர்.

ஸ்ரீ தேவி இருந்தால் திருமண நிகழ்ச்சிக்கு தனது மகள்களை எப்படி அலங்காரம் செய்து அழைத்துச் செல்வாரோ அதே போன்று அவர்கள் தங்களை அலங்கரித்திருந்தனர்.





# நடிகை சுனைனாவுக்கு படப்பிடிப்பில் படபடப்பு!

பத்தொன்பது திரைப்படங்களில் நடித்துவிட்டாலும், இன்னும் தனக்கு படப்பிடிப்பின் போது நடிக்க சிறிய 'படபடப்பு' இருப்பதாக நடிகை சுனைனா கூறுகிறார். மேலும் பத்து ஆண்டுகளுக்கு முன்பு விஜய் ஆண்டனியை சிறந்த இசை அமைப்பாளராகப் பார்த்ததாகவும், தற்போது அவரைச் சிறந்த நடிகராகவும், தயாரிப்பாளராகவும் பார்ப்பதாக நடிகை சுனைனா கூறியுள்ளார்.

# வடிவேலுவிடம் 9 கோடி நஷ்ட ஈடு! கேட்கிறார் ஷங்கர்

ஒன்பது கோடி ரூபாய் நஷ்டஈடு கொடுக்குமாறு நடிகர் வடிவேலுவிடம் 24ம் புலிகேசி படக்குழு கேட்டுள்ளது. 23ம் புலிகேசி படம் ஹிட்டானதைத் தொடர்ந்து, அதன் 2ம் பாகத்தை '24ம் புலிகேசி' என்ற பெயரில் எடுக்கத் திட்டமிட்டனர். இப்படத்தை சிம்புதேவன் இயக்க இயக்குனர் ஷங்கர் தயாரித்தார்.



முதல் பாகத்தைப் போன்றே 2ம் பாகத்திலும் வடிவேலு ஹீரோவாக நடிக்கத் தொடங்கினார். ஆறு கோடி ரூபாயில் 'செட்' போட்டு படப்பிடிப்பு நடந்தது. பத்து நாட்கள் நடித்த பிறகு வடிவேலுவுக்கும், இயக்குனர் சிமபுதேவனுக்கும் இடையே பிரச்சினை ஏற்பட்டது. இதனை அடுத்து வடிவேலு படத்தில் இருந்து விலகினார். இது பற்றி தயாரிப்பாளர் சங்கத்தில் படக்குழு புகார் அளித்தது. வடிவேலுவிடம் விளக்கம் கேட்டனர். தான் எந்தப் பிரச்சினையும் செய்யவில்லை என்றும், படப்பிடிப்பைத் தொடங்கத் தாமதம் செய்ததால் தனக்கு பொருளாதார இழப்பும், மன உளைச்சலும் ஏற்பட்டதாகவும் அதனால் படத்தில் நடிக்க முடியாது என்றும் தெரிவித்தார். '24ம் புலிகேசி' படப்பிடிப்பும் முடங்கியது. 'செட்டை'யும் பிரித்து விட்டார்கள். தயாரிப்பாளர் சங்கம் வடிவேலுவிடம் பேசியும், அவர் நடிக்க மறுத்துவிட்டார். 24ம் புலிகேசி படத்தைக் கைவிடுவது குறித்து ஆலோசித்து வருகிறார்கள். இந்நிலையில் வடிவேலுடம் இருந்து 9 கோடி நஷ்ட ஈடு வாங்கித் தருமாறு படக்குழு தயாரிப்பாளர் சங்கத்திடம் கேட்டுக் கொண்டுள்ளது.

# விஷால் - வரலட்சுமி திருமணம் உறுதி!



தனக்கு நாடி நரம்பெல்லாம் வரலட்சுமிதான் என்று தெரிவித்துள்ளார் விஷால்.

புதுமுகம் மித்ரன் இயக்கத்தில் விஷால், சமந்தா நடித்த இரும்புத் திரை ரசிகர்களிடையே நல்ல வரவேற்பைப் பெற்றுள்ளது. 'சண்டைக் கோழியை அடுத்து விஷால் நடித்த சிறந்த படம் 'இரும்புத் திரை'.


'இரும்புத் திரை' படம் குறித்து நன்றி தெரிவித்துள்ள விஷால், அதில் நடிகை வரலட்சுமியை தனது வாழ்வின் வரம், பொக்கிஷம் என்று தெரிவித்துள்ளார். வரலட்சுமியை 8 வயதிலிருந்தே விஷாலுக்கு பழக்கமாம். பிரிந்துவிட்டதாக பேசப்பட்ட காதல் ஜோடியிடையே இப்போது காதல் வலுத்துள்ளதாகத் தெரிகிறது.

தயாரிப்பாளர் சங்கத் தலைவரான விஷால், வரலட்சுமியை நடிகர் சங்கக் கட்டடம் கட்டி முடித்த கையோடு, கரம்பற்ற உள்ளார் என்பது இப்போதைய உறுதியான செய்தியாகக் கிசுகிசுக்கப்படுகிறது.

தன்னை எதிர்த்துப் போட்டியிட்ட சரத்குமாருடன் பிரச்சினையாக இருந்தாலும் அவரின் மகள் வரலட்சுமி மீது பாசமாகவே உள்ளார் விஷால்!

# ரஜினியின் 'காலா' வெளியான புதிய தகவல்

பா. ரஞ்சித் இயக்கத்தில் சூப்பர்ஸ்டார் ரஜினிகாந்த் இரண்டாவது முறையாக நடித்திருக்கும் 'காலா' திரைப்படம் வரும் ஜூன் 7-ம் தேதி ரிலீஸ் ஆக இருக்கிறது. இப்படத்தின் ரன்னிங் டைம் 2மணி நேரம் 44 நிமிடங்கள் எனும் தகவல் வெளியாகியிருக்கிறது. ரஜினிகாந்த், ஈஸ்வரி ராவ், ஹூமா குரேஷி உள்ளிட்ட பலர் நடித்திருக்கும் 'காலா' படத்திற்கு சென்சார் போர்டு 'யு/ஏ' சான்றிதழ் அளித்துள்ளது. ஏப்ரல் 27-ம் தேதியே வெளியாகும் எனக் கூறப்பட்ட நிலையில் தற்போது ஜூன் 7 ரிலீஸ் உறுதி செய்யப்பட்டுள்ளது. ரஜினி படங்கள் நிச்சயமாக இரண்டே முக்கால் மணி நேரத்திற்கு குறைவாக இருக்காது என்பது ரசிகர்கள் எதிர்பார்த்ததுதான். 'கபாலி' படத்திற்கு 2 மணி நேரம் 52 நிமிடம் ரன்னிங் டைமாக இருந்தது. 'காலா' படம் அதைவிடச் சில நிமிடங்கள் குறைவாகவே ஓடவிருக்கிறது. ரஜினி படத்தில் ரசிகர்களுக்கு நேரம் போவதே தெரியாமல் என்கேஜ் செய்ய நிறைய விஷயங்கள் இருக்கும். அதனால், இரண்டே முக்கால் மணி நேரம் என்பது நீளமாகத் தெரியாது. ரஜினியின் மாஸ் என்ட்ரியையும், ஸ்டைலான வசனங்களையும் கேட்க ரசிகர்கள் இப்போதே ரெடியாகி வருகிறார்கள். 'காலா' படத்தின் இந்திவெர்சனுக்கான போஸ்டர் சமீபத்தில் வெளியிடப்பட்டது. இதில் நானா படேகரும் முன்னிலைப்படுத்தப் பட்டுள்ளார். கரிகாலன் எனும் டைட்டிலில் சிக்கல் நீடிக்கும் நிலையில், 'கரிகாலன்' டேக் லைன் இந்தியிலும் பயன்படுத்தப்பட்டுள்ளது.





# வாழ்க்கை ஒரு முறைதான்! சிம்புவின் தத்துவம்!

தனது வாழ்க்கையை தனது விருப்பப்படி வாழ நினைப்பதாகவும், படப்பிடிப்பிற்கு காலதாமதம் இல்லாமல் சென்று வருவதாகவும் நடிகர் சிம்பு தெரிவித்துள்ளார். வையம் மீடியாஸ் சார்பில் வி.பி.விஜி தயாரித்து இயக்கியுள்ள படம் 'எழுமின்'. படத்தின் டிரெய்லர் வெளியீட்டு விழா சென்னையில் சமீபத்தில் நடந்தது. நடிகர்கள் சிம்பு, விஷால், கார்த்தி, விவேக், உதயா, நடிகை தேவயானி, இயக்குனர் விஜி உள்ளிட்டோர் இந்த விழாவில் கலந்துகொண்டனர். டிரெய்லரை வெளியிட்ட சிம்பு விழா மேடையில் பேசியதாவது: "ரசிகர்களுக்காக வருடத்துக்கு மூன்று படங்களாவது பண்ண வேண்டும் என்று அனைவரும் அறிவுரை கூறுகிறார்கள். எனக்கும் அது தெரியும். ஆனால், என் விருப்பப்படி வருடத்துக்கு ஒரு படம் கொடுத்தாலே போதும் என நினைக்கிறேன். நான் யாரையும் கஷ்டப்படுத்த மாட்டேன். யாருக்காகவும் என் சந்தோஷத்தையும் இழக்க மாட்டேன். இருப்பது ஒரு வாழ்க்கை. அதை என் விருப்பப்படி வாழ நினைக்கிறேன். இனி நான் படப்பிடிப்புக்கு 'லேட்டாக' வர மாட்டேன். இப்போதும் லேட்டாக போவதில்லை என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்." நடிகர் சங்கத் தேர்தலின் போது விஷாலை நான் கடுமையாக விமர்சித்தேன். ஆனால், அதை மனதில் வைத்துக் கொள்ளலாம் கட்டிட அடிக்கல் நாட்டுவிழாவுக்கு என்னை அவர் அழைத்தார். நானும் சென்றேன். எப்போதும் எல்லோரும் தவறு செய்வார்கள் என் மனதில் பட்டதை நான் பேசுகிறேன். இவ்வாறு நடிகர் சிம்பு தெரிவித்தார். நடிகர் விவேக், நடிகை தேவயானி உள்ளிட்டோர் ஆறு சிறுவர்களுடன் சேர்ந்து நடித்துள்ள இந்தப் படம், தற்காப்புக் கலையை மையமாக வைத்து உருவாகியுள்ளது.

மனம் திறந்து பேசுகிறார் ஹோமியோபதி வைத்திய நிபுணர் **ஆர்.தியாகராஜன்**



# ஆண் தாயுமானவன்

மே மாதத்தில் சூரியன் ஒளிவீசிய இரண்டாம் நாள். (SUN SHINE DAY)

லண்டன் ஈஸ்ற்ஹாம் முருகன் கோயிலுக்கு நண்பகலில் வழிபடச் செல்லும் நல்வாய்ப்புக் கிட்டியது. அந்த சுபவேளையில் அங்கே பிரதம குரு கயிலை சிவஸ்ரீ நாகநாத சிவம் அவர்களிடம் என்னை உடன் வந்திருந்த 'புதினம்' ஆசிரியர் அறிமுகப்படுத்தி வைத்தபோது, சிவாச்சாரியார், "புதினம் பத்திரிகையில் உங்கள் கட்டுரைகளைத் தொடர்ந்து படித்து வருகின்றேன். அனைவருக்கும் பயனுள்ள விஷயங்களை எழுதி வருகிறீர்கள்; வாழ்த்துக்கள்" என்று ஆசி கூறி, முருகன் சந்நிதியில் பிரசாதங்களும், மதிய உணவும் அவரது நேரடி பார்வையில், வழங்கியதை 'புதினம்' வாசகர்கள் அனைவருக்கும் சமர்ப்பிக்கின்றேன்.

'புதினம்' இதழில் தொடர்ந்து எழுதி வரும் 'மனம் திறந்து பேசுகின்றேன்' கட்டுரைக்கு கிடைத்த மிகப்பெரும் விருதாக மேற்கண்ட நிகழ்வினை போற்றுகின்றேன். தாயுமானவராக இருந்து தனது குடும்பத்திற்கும், லண்டன் தமிழர்களுக்கும் ஆன்மீகத்துக்கும் அரும்பணி ஆற்றிவரும் நாகநாதசிவம் ஐயா அவர்களுக்கும், இந்தத் தொடரைத் தொடர்ந்து வெளியிட்டு வரும் லண்டன் தமிழ் மக்களின் அபிமான 'புதினம்' பத்திரிகையின் ஆசிரியர் அவர்களுக்கும், இத்தொடரை வாசித்து கருத்துக்களும், ஆலோசனைகளும் வழங்கி தொடர்ந்து ஆதரவு அளித்து வரும் வாசகப் பெருமக்கள் அனைவருக்கும் நெஞ்சம் நிறைந்த நன்றி மலர்களைச் சமர்ப்பிக்கிறேன்.

திருச்சி மலைக்கோட்டை உச்சியில் பிள்ளையார் இருந்தாலும், அங்கு குடிகொண்டிருக்கும் தாயுமானவன் என்ற நாமம் பெற்ற சிவபெருமான் சந்நிதி இருப்பது அறிந்ததே. தன்னிடம் பெரும் பக்தி கொண்ட செட்டிப் பெண்ணுக்கு அவளது தாயாக உருவெடுத்து அருகில் இருந்து சுகப்பிரசவம் நடைபெற அருள் புரிந்த சிவனே தாயுமானவன் என்பதே வரலாறு. எல்லா ஆண்களும் இவ்வாறு இருக்கவே விரும்புகிறார்கள். சிலருக்கு மட்டுமே நடைமுறை வாழ்க்கையில் இது கிட்டுகின்றது. பெரும்பாலோருக்கு எட்டாக்கனியாகவே உள்ளது.

நீண்ட காலமாகவே ஆண்கள் வீரர்களாகவும், தீரர்களாகவும், அதேசமயம் இரக்கமற்றவர்களாகவும், கோபம் கொள்பவர்களாகவும் உருவகப்படுத்தப்பட்டு வருகிறார்கள். உண்மை அதுவல்ல.

அமைதியாக இருக்கும் அப்பாவைப் பார்த்து குழந்தைகளிடம் தாய், "அப்பா கோபமாக இருக்கிறார். சத்தம் போடாதீர்கள்" என்று மிகைப்படுத்தப்பட்டுச் சித்தரிக்கப்படுவதை நாளாந்தம் ஊர்தோறும் கண்டு கொண்டே இருக்கிறோம்.

அமைதியை விரும்பும் ஆண்கள் கோபக்காரர்களாகவும், சமாதானத்தை விரும்பும் ஆண்கள் சண்டைக்காரர்களாகவும், வீரம் நிறைந்தவர்களாகவும் குடும்பத்தாராலும், சமூகத்தினாலும் வார்த்தெடுக்கப்படுகிறார்கள்.

குழந்தைப் பருவத்திலிருந்தே ஆண் குழந்தைகள் பெண் குழந்தைகளை விடக் கூடுதல் செல்லமும், சலுகையும் கொடுத்து, கட்டுப்பாடு இன்றி அதீத சுதந்திரத்துடன் வளர்க்கப்படுகிறார்கள். ஆண் குழந்தைகளும் தங்களை வீரர்களாக, பலசாலிகளாக எண்ணிக்கொண்டே வளர்கிறார்கள்.

பதின்ம வயதுவரை உற்சாகமாக, எந்தப் பொறுப்புமின்றி வாழ்க்கை இவர்களுக்கு இன்பமாகக் கழிகின்றது. இந்தக் காலகட்டத்தில், சிலவேளை தவறான நட்பு அமைந்துவிட்டால், இவர்களது எதிர்கால வாழ்க்கை பெரும் பிரச்சினையாக மாறிவிடுகின்றது.


படிக்க வேண்டிய வயதில் தீய பழக்கவழக்கங்களுக்கும், போதைப் பொருட்களுக்கும் அடிமையாகி இளைய சமுதாயம் பெரும் அவதியுற்று வருகிறது. கட்டுப்பாட்டுடன் வளர்க்கப்படும் பெண் பிள்ளைகளுக்கு தவறு செய்யும் வாய்ப்புக்கள் ஒப்பீட்டளவில் குறைவாகவே கிடைக்கின்றது.

ஆண் குழந்தைகள் வளர்ப்பில் புதிய அணுகுமுறைகள் தேவை. உலகமெங்கும் பாலியல் வன்முறைகள் பெருகிவரும் இந்தக் காலகட்டத்தில் ஆண் குழந்தைகளை - சக மனிதர்களை, குறிப்பாகப் பெண்களை மதித்து நடக்கும் பண்போடு வளர்க்க வேண்டியது அவசியம். அவர்களது செயல்பாடுகள் சமூக பாதுகாப்பை மேம்படுத்துவதாக அமைய வேண்டும்.

இரண்டாயிரம் ஆண்டுக்குப் பின்னால் கடந்த 20 வருடங்களில் ஆண்கள் திருமணம் செய்யும் வயது படிப்படியாக அதிகரித்து 40 வயதிலும்கூட திருமணம் ஆகாத, தன்னம்பிக்கையற்ற இளைஞர்களை எங்கும் காணக்கூடியதாக இந்த உலகம் இருக்கின்றது.

தடைகளை மீறி நடக்கும் திருமணங்களும், அர்ப்பணிப்பு உணர்வின்றி, பரஸ்பரம் நம்பிக்கையற்று விட்டுக்கொடுக்கும் மனநிலை குறைபாட்டினால் ஏராளமான திருமண முறிவுகளை (DஜVORCE) சந்திக்கின்றன.

கணவன் - மனைவியிடையே ஊடலும் கூடலும் இறுதிவரை பயணம் செய்யும். முரண்பாடுகளும், பிணக்குகளும் ஏற்படும்போது, பெற்றோரும், உறவினரும் இடையில் புகுந்து எரியும் நெருப்பில் எண்ணெய் வார்க்காமல் விலகியிருந்தால், பிரச்சினை தானே தீரும்.



ஆண் பிள்ளைகளின் வாழ்க்கை குறித்த தவறான புரிதலும் தன்னம்பிக்கையற்ற தன்மையும் தற்போதைய ஆண்களின் திருமண தாமதங்களுக்கு முக்கிய காரணியாகும். 30 வயதைத் தாண்டிய இளைஞர்கள் கூட இன்னும் கொஞ்சம் *Settle* ஆகிவிட்டு கல்யாணம் முடிக்கலாம் என்ற எண்ணத்தோடு வாழ்கின்றனர்.

ஆண்களும் பெண்களும் வாலிபப் பருவத்தைத் தவறவிட்டு குழந்தைப் பேறுக்காக மருத்துவமனைகளில் தவமிருக்கும் நவீன காலம் இது. இதனைக் கருத்தில் கொண்டே செயற்கைக் கருத்தரிப்பு மையங்கள், *IVF* போன்ற சிகிச்சை நடைமுறைகள் உலகெங்கும் வாரி வழங்குகின்றன.

இயற்கையாகக் கிடைக்க வேண்டிய பல நல்ல விஷயங்களை, காலம் கடந்து தாமதமாகச் செயல்படுவதால், பெரும் பொருட் செலவு செய்து அடைய வேண்டியுள்ளது.

ஆண்களுக்கு வயது கூடிக்கொண்டேபோக, தாம்பத்திய வீரியமும், உயிர் அணுக்கள் எண்ணிக்கையும் குறைந்துகொண்டே போகும் என்பதே இயற்கையின் நியதி.

வீரியம் மிக்க மருந்துகளை உட்கொண்டு நிவாரணம் தேடினால் பாரிய பின் விளைவுகளைச் சந்திக்க நேரிடும்.

பக்க விளைவுகளற்ற ஹோமியோபதி மருத்துவம் இந்தப் பிரச்சினைகளுக்கு சீரிய முறையில் தீர்வுகளைத் தரவல்லது. எது நல்லது? எது கெட்டது? முடிவு உங்கள் கையில்!

தாத்தாவாக வேண்டிய வயதில் அப்பா ஆவதால், தாமதமாகக் குழந்தை பெற்று தந்தை, தாய், மூவருக்குமே மனதளவில் தோன்றும் நெருக்கடிகள் ஏராளம். 'பருவத்தில் பயிர் செய்' என்ற முன்னோர் குழந்தை வாக்கை கடைப்பிடிப்பதால் மட்டுமே வாழ்க்கையை முழுமையாக வாழ முடியும்.

நடைமுறைகளையும் (*Life Style*), மரபணுக்களையும் (*Genetic Modification*) நம் தேவைக்கேற்ப மாற்றி அமைப்பதாலேயே பெருவாரியானோர் உடலின் 'உயிரியல் சமநிலை' (*Biological Balance*) சீர்கெட்டு, *Auto Immune Disorder* ஏற்பட்டு, அதன் விளைவாக, டயபட்டிஸ், புற்றுநோய் போன்ற வருத்தங்களாக மாறி நவீன மருத்துவ உலகுக்குப் பெரும் சவாலாக விஸ்வரூபம் எடுத்துள்ளது.

சென்ற இதழில் பெண்களின் பிரச்சினைகளை விரிவாக அறிந்தோம். இந்த இதழில் ஆண்களின் தற்காலப் பிரச்சினை கண்டறிந்தோம்.

ஆண் - பெண் இருவரது கூட்டுப் பிரச்சினையே சமூகப் பிரச்சினையாக மாறிவிட்டது. இதற்கு என்ன தீர்வு? தீர்வு யார் கையில்? அது பெற்றோர்கள் கையில்தான் உள்ளது.

'பிள்ளைகள் பெற்றோர்களின் அறிவுரைகளை உடனடியாகக் கேட்பதில்லை! ஆனால், கால அவகாசம் கொடுத்தால் தாங்களே சிந்தித்து உணருவார்கள். அறிவுரைகளை மீண்டும் மீண்டும் சொல்லிக்கொண்டிருப்பதில் பலனில்லை. கோபம் போன்ற எதிர்விளைவுகளே அதனால் உண்டாகும். ஆனால், பெரும்பாலான குழந்தைகள் பெற்றோர்களை தங்கள் முன்மாதிரியாக (*Roll Model*) பார்க்கின்றார்கள் என்பதே உண்மை.

இந்த உண்மையை உணர்ந்து, பணம் சம்பாதிக்கும் யந்திரமாக மாறிவிட்ட தற்கால பெற்றோர்கள் தங்கள் நடவடிக்கைகளை மாற்றி அமைத்து, விலைமதிப்பற்ற நேரத்தை தங்கள் குடும்பத்தினருடனும், குழந்தைகளுடனும் செலவழித்தால், நோய் நொடியற்ற, ஆரோக்கியமாக மகிழ்வுடன் வாழும் எதிர்கால சமுதாயத்தை உருவாக்கலாம். தற்போதைய நடைமுறையில் உள்ள மன - உடல் பிரச்சினைகள் அனைத்துக்கும் ஹோமியோபதி வைத்தியம் சீரிய தீர்வினைக் கொடுக்கும். ■

**மேலும் ஆலோசனைகளுக்கு**
**0208 1441553**

# டயபட்டிஸ் சலன்ஜ்

## ஹோமியோபதி மருத்துவம் + உங்கள் ஒத்துழைப்பு



## 100% கட்டுபடுத்தலாம்

### சிறப்பு சிகிச்சைகள்

- **உயர் இரத்த அழுத்தம்** (B.P/Hyper Tension)
- **கொலஸ்ட்ரால்** (Cholesterol)
- **சிறுநீரக கோளாறுகள்** (Kidney Diseases)
- **மூட்டு வலி** (Arthritis)
- **தோல் வியாதிகள்** (Skin Diseases)
- **ஹார்மோன் பிரச்சனைகள்** (Hormone Disorders)
- **மாதவிடாய் கோளாறுகள்** (Menses Disorders)
- **செக்ஸ் பிரச்சனைகள்** (Sex Disorders)
- **குழந்தையின்மை** (Infertility)
- **டயபட்டிஸ்** (Diabetes)

டயபட்டிஸ் குறித்த பயமும், அறியாமையும், பீதியுமே ஒரு டயபட்டிஸ் நோயாளியின் வாழ்க்கையில் ஏற்படும் முதல் முடிச்சாக அமைகின்றது. இந்த முடிச்சே மேலும் பல முடிச்சுகளை ஏற்படுத்தி, தீராத பிரச்சினைகளாக மாறிவிடுகிறது.

சவால்களைச் சமாளித்து, ஆரோக்கியமாக வாழ ஹோமியோபதி மருத்துவம் பக்க விளைவுகளின்றி உறுதுணையாக இருக்கும்.

எத்தனை வயதில் டயபட்டிஸ் வந்தாலும், மேலும் நாற்பது, ஐம்பது வருட காலம் தாராளமாக உயிர் வாழலாம்

உயர்தர மருத்துவம் → பாதுகாப்பான மருந்துகள் → விரைவான சேவை

**HOMOEO CARE**

30 வருட சிறந்த அனுபவம் மற்றும் நிபுணத்துவம்

**இலவச மருத்துவ ஆலோசனைக்கு**
**0208 144 1553**

Viber: 0044 7833341693 skype: homoeocare வெப்சைட்: www.homoeocare.com இமெயில்: homoeocare@rediffmail.com

உ

சிவமயம்







# உயர்வாசற்குன்று முருகன் கோயில்

## BRITTANIA HINDU (SAIVA) TEMPLE TRUST

Registered Charity No: 269067

200A Archway Road, London N6 5BA | Tel:0208 348 9835 |Fax: 0208 482 6508

Email: Secretary@highgatehillmurugan.com |Web: www.highgatehillmurugan.org

மூன்றாவது புனராவர்த்தன மஹா கும்பாபிஷேகத்தின் ஒன்பதாவது மகோற்சவ விழா

## பிரம்மோற்சவ விஞ்ஞாபனம் - 2018

முருகப்பெருமான் அடியார்களே!

இலண்டன் மாநகரில் மூத்த கோயிலாக அமைந்து விளங்கும் உயர்வாசற்குன்றினிலே கோயில் கொண்டருள்புரியும் வள்ளி தேவசேனா சமேத முருகப்பெருமானின் கருணையினால் மேற்படி கோயிலின் மகோற்சவ விழா நிகழும் விளம்பி ஆண்டு வைகாசி மாதம் 28ம் நாள் (11.06.2018) திங்கட்கிழமை காலை பரணி நட்சத்திரமும் திரயோதசி திதியும் சித்தயோகமும் கூடிய நன்னாளிலே கொடியேற்ற வைபவ விழாவுடன் தொடங்கி 14ம் நாள் (24.06.2018) ஞாயிற்றுக்கிழமை காலையிலே தேர்த்திருவிழாவும், 15ம் நாள் (25.06.2018) திங்கட்கிழமை தீர்த்த உற்சவமும் மாலை கொடி இறக்கமும் நடைபெற்று செவ்வாய்க்கிழமை (26.06.2018) திருக்கல்யாண உற்சவத்துடன் நிறைவுறத் திருவருள் கூடியுள்ளது.

### 12.06.2018 செவ்வாய்க்கிழமை தொடக்கம் 23.06.2018 சனிக்கிழமை வரை

| | |
|---|---|
| காலை 08.15 மணி : | சங்கல்பம் |
| காலை 08.30 மணி : | அபிசேகம் |
| காலை 09.45 மணி : | பூஜை |
| காலை 10.30 மணி : | கொடித்தம்பப்பூஜை |
| காலை 11.15 மணி : | வசந்தமண்டபப்பூஜை தொடர்ந்து திருவீதியுலா |
| பகல் 12.30 மணி : | மகா பிரசாதம் |
| மாலை 05.45 மணி : | சாயரட்சைப்பூஜை |
| மாலை 06.45 மணி : | கொடித்தம்பப்பூஜை |
| மாலை 07.15 மணி : | வசந்தமண்டபப்பூஜை தொடர்ந்து திருவீதியுலா |
| இரவு 09.30 மணி : | மகாபிரசாதம் |

### மகோற்சவ நிகழ்வுகள்

| | | | |
|---|---|---|---|
| 10.06.2018 | ஞாயிறு | காலை 09.30 மணி | - கணபதி கோமம் மாலை பூர்வாங்கக் கிரிகைகள் |
| 11.06.2018 | திங்கள் | காலை 11.30 மணி | - கொடியேற்ற வைபவம் மாலை 7.00 மணி திருவிழா |
| 18.06.2018 | திங்கள் | மாலை 07.45 மணி | - கைலாய வாகனம் புறப்பாடு |
| 19.06.2018 | செவ்வாய் | மாலை 07.00 மணி | - மாம்பழத்திருவிழா |
| 20.06.2018 | புதன் | காலை 05.00 மணி | - ஆனி உத்தரம் |
| 20.06.2018 | புதன் | மாலை 07.45 மணி | - மஞ்சம் புறப்பாடு |
| 22.06.2018 | வெள்ளி | மாலை 06.00 மணி | - வேட்டைத்திருவிழா |
| 23.06.2018 | சனி | மாலை 07.45 மணி | - சப்பறம் புறப்பாடு |
| 24.06.2018 | ஞாயிறு | காலை 11.00 மணி | - சுவாமி தேர் ஏறி வீதி உலா வருதல் |
| 25.06.2108 | திங்கள் | காலை 10.00 மணி | - தீர்த்தத் திருவிழா 7.30 மணி கொடி இறக்கம் |
| 26.06.2018 | செவ்வாய் | மாலை 07.00 மணி | - திருக்கல்யாண விழா - பொது உபயம் |
| 27.06.2018 | புதன் | மாலை 07.00 மணி | - வைரவர் மடை |

அடியார்கள் அனைவரும் ஆலயத்திற்கு ஆசாரசீலர்களாய் வருகை தந்து, ஆலய நடைமுறைகளுக்கு அமைவாக வழிபாட்டிற் கலந்து கொண்டு புண்ணியப்பேறு பெறுவதுடன் தாயகத்தில் நிலையான சாந்தியும், சமாதானமும், அமைதியும் ஏற்படவும் எல்லோரும் செல்வங்கள் அனைத்தும் பெற்று நல்வாழ்வு வாழவும் வழிபாடு செய்வோமாக.

**குறிப்பு: இம்மகோற்சவ விசேட நாட்களில் பூஜை நேரத்தில் மாற்றம் ஏற்படலாம்.**

மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்

ஆலய நிர்வாகம்



# ஸ்ரோன்லி ஸ்ரீ இராஜராஜேஸ்வரி அம்மன் கோவில்

**4, Dell lane, Stoneleigh, Surrey KT17 2NE Tel: 020 8393 8047**

# தேர்த்திருவிழா

## வாகனத்தரிப்பு ஒழுங்குகள்

ஸ்ரோன்லி ஸ்ரீ இராஜராஜேஸ்வரி அம்மன் கோவிலின் 19வது ஆண்டு தேர்த்திருவிழா 03.06.2018 (3 June 2018) ஞாயிற்றுக்கிழமை நடைபெறவிருக்கிறது. அத்தருணம் ஆலயத்தைச் சூழவுள்ள வீதிகளில் வாகனங்களை நிறுத்தி வைக்கக்கூடாது என்ற உள்ளூராட்சி சபை அதிகாரிகளின் கண்டிப்பான வேண்டுதலின் பேரில், ஆலய நிர்வாகம் ஒழுங்கு செய்துள்ள இலவச வாகன தரிப்பிடங்களை மட்டும் அன்று முழுநாளும் பாவிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். கடந்த ஆண்டு தேர்த்திருவிழா முதல் இந்த ஒழுங்குமுறை கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது.

20.05.2018 அன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து திருவிழாக்கள் நடைபெற்று வருகின்றன. 01.06.2018 வெள்ளிக்கிழமை திருவிளக்குப் பூசையும், 2ம் திகதி சனிக்கிழமை வேட்டைத் திருவிழாவும், சப்பறத் திருவிழாவும், 3ம் திகதி ஞாயிறு தேர்த்திருவிழாவும், 4ம் திகதி திங்கள் தீர்த்தமும், 5ம் திகதி செவ்வாய் பூங்காவனமும், 6ம் திகதி வைரவர்மடையும் நடைபெறும்.

3ம் திகதி ஞாயிறு தேர்த்திருவிழாவின் போது, அடியார்கள் வசதிக்காக ஆலய நிர்வாகசபை அன்று முழுவதும் வாகனத் தரிப்பிடங்களை தமது செலவில் ஏற்பாடு செய்துள்ளார்கள். (இது பற்றிய விபரங்கள் விவரமாக இப்பக்கத்தில் உள்ளது.) எனவே, அம்பாள் அடியார்கள், ஆலய நிர்வாகத்துடனும், தொண்டர்களுடனும், உள்ளூராட்சி சபை போக்குவரத்து அதிகாரிகளுடனும் ஒத்துழைத்து, மிகுந்த பொறுப்புடன் நடந்து கொள்வது அடியார்கள் அனைவரதும் தலையாய கடமையாகும், மேலதிக விபரங்களுக்கு:

# Sri Raja Rajeswary Amman Temple, Stoneleigh

## PARKING RESTRICTIONS:

## Chariot Festival, Sunday 3rd June

**SEVERE parking restrictions will be imposed on Sunday 3rd June 2018.**

**The Temple has hired car parks for devotees to park ALL DAY (see map on other side).**

**Nonsuch Primary School**
Chadacre Road,
Epsom KT17 2HG
(3 min walk)

**Meadow Primary School**
Sparrow Farm Road,
Epsom KT17 2LW
(3 min walk)

- Parking is also available at **Nonsuch Park** and **Cuddington Recreation Ground.**
- **Parking enforcement officers will tow cars away** which have been parked irresponsibly.
- Use **Public Transport (Stoneleigh Rail Station, 406 bus)** or car-share with friends and family.




The roads marked in red MUST be kept clear at all times
**NO PARKING IS ALLOWED**







# லண்டன் இருநாள் சைவ மாநாடு

# அற்புதத் தமிழ் திருவிழா!

அருளுரைகள், ஆய்வுரைகள், மாணவர் கலை நிகழ்ச்சிகள், மலர் வெளியீடு, இளைய சந்ததியின் ஆன்மீகப் பங்களிப்பு, விருந்தளிப்பு, விவாத அரங்கு, கவியரங்கு, அமுத கான மழை என லண்டனில் இரு முழு நாட்களும் நடந்த பிரித்தானிய சைவத் திருக்கோயில் ஒன்றியத்தின 19வது சைவ மாநாடு அனைவரையும் ஈர்த்த அற்புதத் திருவிழாவாக சைவத் தமிழ் மக்களை பெருமைப்படுத்தியது.

இம்மாநாட்டினை லண்டன் மாநகரில் கடந்த மே 5 மற்றும் 6 தேதிகளில் பிரித்தானிய சைவத் திருக்கோயில் ஒன்றியம் சிறப்பாக நடத்தியது.

பல்வேறு நாடுகளிலிருந்து பிரதிநிதிகள் வருகையும், பல்வேறு நிகழ்ச்சிகளும் மாநாட்டினை பெருமைக்குரியதாக்கின. மே5ம் தேதி முதல் நாள் நிகழ்ச்சிகள் லண்டன் ஈலிங் கனகதுர்க்கை அம்மன் ஆலயத்திலும், மே 6ம் தேதி இரண்டாம் நாள் நிகழ்ச்சிகள் லண்டன் லூசியம் சிவன் ஆலயத்திலும், காலை 9 மணி முதல் இரவு 10 மணி வரை நடைபெற்றன. யாழ்ப்பாணம் நல்லூர் ஆதீனகர்த்தர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர சுவாமிகள், ஹவாய் தீவிலிருந்து ஸ்ரீலஸ்ரீ போதிநாத வேலன் சுவாமிகள், தமிழ் நாட்டிலிருந்து கலாநிதி வே. சங்கரநாராயணன், இவர்களோடு தமிழகத்தின் பிரபல இசைவாணி பத்மஸ்ரீ நித்யஸ்ரீ மகாதேவன் அவர்களும் இருநாட்கள் நிகழ்ச்சிகளிலும் பங்கேற்றுச் சிறப்பித்தனர்.


நல்லூர் ஆதீனம்


தமிழக அறிஞர்


சிவன் கோயில் தலைவர்

“சைவ சித்தாந்தமும் வாழ்வியலும்” என்ற தலைப்பில் மாநாட்டு நிகழ்வுகள் நடைபெற்றன. முதல் நாள் நிகழ்ச்சிகள் மங்கள வாழ்த்துக்களோடும், நந்திக்கொடி ஏற்றத்தோடும் விழா தொடங்கியது. லண்டன் கனக துர்க்கை அம்மன் ஆலய மாணவ, மாணவியரின் பண்ணிசையைத் தொடர்ந்து கனக துர்க்கை அம்மன் அறங்காவல் சபைத் தலைவர் எஸ். அபயலிங்கம் வரவேற்புரை நிகழ்த்தினார்.


கனக துர்க்கை அம்மன் ஆலயத்தலைவரும், சைவத்திருக்கோயில் ஒன்றியத்தின் தலைவருமான த.யோகநாதன், செயலாளர் கனகசுந்தரம், சித்தி விநாயகர் ஆலயத்தை சார்ந்த குமாரதாசன், ஈஸ்வரதாஸ், சர்வதேச இளைஞர் மன்றத் தலைவர் மாதங்கி, என்பீல்ட் நாகபூசணி அம்மன் ஆலய சிவஸ்ரீ கமலநாத குருக்கள், ஆய்வாளர் பற்றிமாகரன், கவிஞர் ராஜமனோகரன் ஆகியோர் சைவ சித்தாந்த வாழ்வியல் குறித்து உரைகள் நிகழ்த்தினர். தொடர்ந்து மாநாட்டு மலரை வெளியிட்டு நல்லை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர சுவாமிகள் அருளுரை நிகழ்த்தினார். சைவமுன்னேற்ற சங்கத்தின் தலைவர் ஆனந்த தியாகர் மலர் குறித்த ஆய்வுரை நிகழ்த்தினார். மத்திய நிகழ்ச்சிகளில் ஹவாய் ஆதீனம் சத்குரு ஸ்ரீலஸ்ரீ போதிநாத வேலன் சுவாமிகள் அருளுரை நிகழ்த்தினார்.

ஈழபதீஸ்வரர் ஆலயத் தலைவர் ஜெயதேவன் தலைமையில் இளையவர்களுக்கான நிகழ்ச்சிகளும், பரிசளிப்பும் நடைபெற்றது. திருமுறைப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களின் பேச்சு, பாடல்கள் அவையை மகிழ்வித்தன. குறொய்டன் மெற்றோ பொலிட்டன் கல்லூரி அதிபர் பத்மமோன், சைவ முன்னேற்றச் சங்க பொருளாளர் நிரஞ்சன் ஆகியோர் ஒருங்கிணைப்பாளர்கள்.

தமிழ்நாட்டிலிருந்து வருகை தந்திருந்த ஞானத் தமிழ்ச் செல்வர் டாக்டர் வே. சங்கரநாராயணனின் நகைச்சுவையும், கருத்தாழமும் மிக்க உரை அவையை கலகலப்பாக்கியது. அவர் தனது உரையில் ‘‘நான் அண்மையில் சுவிற்சர்லாந்து சென்றிருக்கையில் ஒரு ஈழத்தமிழர் பிராப்த வினையைத் தீர்ப்பதற்காகத்தான் பிறவி அமைகிறது என்றால் ஞான சம்பந்தரும், அப்பரடிகளும் கூட அப்படிப் பிறந்தவர்கள் தானா என்று என்னிடம் கேட்டார். நான் அவரிடம் சொன்னேன் - அப்பரும், சம்பந்தரும் வினைகளை அனுபவிப்பதற்காக பூமிக்கு வந்தவர்களல்ல.. ஏற்கனவே, பல பிறவிகளைக் கடந்து சிவ அனுபூதி நிலையை அடைந்தவர்கள். அவர்களுக்கு பிறவி கிடையாது. இருப்பினும் ஒரு புனிதமான கடமைக்காக பூமிக்கு சிவபெருமானால் அனுப்பப்பட்டவர்கள். தமிழகத்தை புறச்சமய இருளில் இருந்து மீட்டெடுப்பதற்காக இறைவன் அவர்களை அனுப்பி வைத்தான். எப்படி உலகம் முழுக்கப் பரந்திருக்கும் தமிழர்களை ஒருங்கிணைப்பதற்காக ஈழத்து மண்ணில் பிரபாகரன் அவதாரம் எடுத்தாரோ அதைப்போல அவதரித்தவர்கள். என்னைப் பொறுத்தவரையில் பிரபாகரனும் ஒரு அவதார புருஷன்தான். தமிழரின் உரிமைகளை நிலைநாட்டவும், உலகத் தமிழர்களை ஒருங்கிணைக்கவும் ஆண்டவனால் அனுப்பப்பட்ட ஒரு அவதார புருஷன்தான் பிரபாகரன் என்பதில் எந்த ஐயப்பாடும் எனக்கு இல்லை” என்றார்.

டாக்டர் கந்தையா சிவக்குமார் விம்பிள்டன் பிள்ளையார் கோயில் திருமதி. கீதா மகேஸ்வரன், ஆதவன் தொலைக்காட்சி குணா, கனக துர்க்கை அம்மன் ஆலய அறங்காவலர் ச. ஸ்ரீரங்கன் ஆகியோரது கருத்துரைகளும் அவையை மகிழ்வாக்கின.

மாலையில் தேசிய இந்து இளைஞர் மன்ற நிறுவனர் கணேஷ்குமார் தலைமையில் விவாத அரங்கம் நடைபெற்றது. ஈலின் கனக துர்க்கை அம்மன் ஆலயச் செயலர் ராமச்சந்திரன் நன்றியுரை நிகழ்த்தினார். நாட்டிய கேந்திரா பள்ளி மாணவ, மாணவியரின் “ஞானக் குழந்தை சம்பந்தர்” என்ற நாட்டிய நாடகம், மேட்டன் தமிழ்ப் பள்ளி மாணவர்களின் “பட்டினத்தடிகள்” என்ற நாடகம் ஆகியவை பார்ப்போரைப் பரவசப்படுத்தின.


வேலன் சுவாமிகள்


ஒன்றியத்தலைவர்

இரவு பிரபல இசைவாணி பத்மஸ்ரீ நித்யஸ்ரீ மகாதேவன் நிகழ்த்திய அமுத கான இசைமழை அனைவரையும் மகிழ்ச்சி வெள்ளத்தில் ஆழ்த்தியது.

இரண்டாம் நாள் லண்டன் லூசியம் சிவன் ஆலயக் கலையரங்கில் மங்கள வாழ்த்துக்களோடும், நந்திக்கொடியேற்றத்துடனும், நிகழ்ச்சிகள் தொடங்கின. லூசியம் சிவன் கோயில் ஆலயத்தலைவர் டாக்டர் சிறிஸ்கந்தராஜா வரவேற்புரை நிகழ்த்தினார். நல்லூர் ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர சுவாமிகள், ஹவாய் ஆதீனகர்த்தர் ஸ்ரீலஸ்ரீ போதிநாதவேலன் சுவாமிகள் அருளுரைகள் நிகழ்த்தினர். தொடர்ந்து திரு. சபா மகேஸ்வர குருக்கள், குமரன் சிறிஸ்கந்தராஜா, டாக்டர் ரமணி சந்திரபாலா, டாக்டர் வத்சலன் சந்திரபாலா, சைவமுன்னேற்றச்சங்க செயலாளர் மா. இந்துசேகரன், ஹைகேட் முருகன் கோவில் தலைவர் வைரவமூர்த்தி, டாக்டர் சங்கரநாராயணன், டென்மார்க் சைவத் தமிழ் பண்பாட்டுப் பேரவை நிறுவனர் திரு.பொன்னண்ணா தியாகராஜா, சிவஸ்ரீபா. வசந்தன் குருக்கள், திருமதி ரீட்டா பற்றிமாகரன், முத்துக்குமாரசுவாமி குருக்கள், டாக்டர் கருணா ரத்ன ராஜா ஆகியோர் சைவப் பேருரை நிகழ்த்தினர். மாலையில் விருது வழங்கும் விழா நடைபெற்றது. இளைய தம்பி சுந்தரலிங்கம், திருமதி குணவதி ரெங்கநாதன், துரையப்பா தேவராஜன், பத்மநாபன் ஸ்ரீதரன், சின்னத்துரை செந்திலிங்கம் ஆகியோருக்கு “சமூக சீலர்” என்ற பட்டமும், டாக்டர் மயூரன் சண்முகநாதனுக்கு “சைவ வளரொளி” என்ற பட்டமும் வழங்கப்பட்டன. லண்டன் சிவன் கோயில் மற்றும் பிரித்தானிய சைவத்திருக்கோயில்கள் ஒன்றியத்தின் முன்னாள் செயலாளர் கணேசமூர்த்தி இந்த விருத்தளிப்பு விழாவினைத் தொகுத்து வழங்கினார். சைவத்திருக்கோயில் ஒன்றியத் தலைவர் தா.யோகநாதன் தலைமை வகித்தார். இரவு நிகழ்ச்சியில் தலா பள்ளி மாணவர்களின் “இரண்டும் ஒன்று” என்ற நாடகமும், மாணவ, மாணவியரின் பல்வேறு கலை நிகழ்ச்சிகளும் அவையை கலகலப்பாக்கின. தொடர்ந்து இரண்டாம் நாளாகவும் பத்மஸ்ரீ நித்யஸ்ரீ மகாதேவனின் அமுத கான இசைமழை அரங்கை நிறைவித்தது. ■










டாக்டர் ஸ்ரீதரன்

# பதினாறும் பெற்ற பனங்காட்டு நரிகள்



இலண்டனில் இலவசமாக விநியோகமாகும் ‘Metro’ என்ற ஆங்கிலப் பத்திரிகையில் வெளியான - “மனமகிழ்ச்சியின் இரகசியம் பௌத்தர்களிடம் உள்ளது” - என்ற ஒரு செய்தியின் சுருக்கம் கீழே தரப்படுகிறது.

“ஒரு மனிதனுக்கு வாழ்க்கையில் மகிழ்ச்சி எப்படி ஏற்படுகிறது? - என்பதை அறிந்து கொள்வதற்காக - சமீபத்தில் Wisconsin பல்கலைக்கழகத்தில் மேற்கொள்ளப்பட்ட விஞ்ஞான ஆராய்ச்சிக்குப் பொறுப்பாகவிருந்த பேராசிரியர் Richard Davidson - ஆராய்ச்சியின் முடிவில் பின்வருமாறு கூறியுள்ளார்:

“தங்களைத் தாங்களே அறிந்து கொள்ள வேண்டுமென்பதற்காக - தங்கள் வாழ்க்கையின் பெரும் பகுதியை ஆழ்ந்த தியானத்தில் செலவிடுபவர்கள் - நான் நடாத்திய விஞ்ஞானப் பரிசோதனையில் தினசரி தியானம் புரியும் பலர் ஆராய்ச்சிக்குப் பயன்படுத்தப்பட்டார்கள். ஆராய்ச்சியின் முடிவுகள் அதிசயிக்க வைக்கும் முடிவுகளைத் தருவதாக அமைந்துள்ளன.

ஒரு மனிதனின் மகிழ்ச்சி - அவனுக்குள்ளேயே - அவனின் நெற்றியின் பின்னாலேயே இருக்கிறது. இடது மூளையின் ஒரு குறிப்பிட்ட சோணையே அவனின் மகிழ்ச்சியை நிர்ணயிக்கிறது. ஒரு மனிதனின் மனமகிழ்ச்சியை நிர்ணயிக்கும் இடது மூளையின் அந்தக் குறிப்பிட்ட சோணை - ஆழ்ந்த தியானம் செய்யும் பௌத்தர்களின் மூளையில் நன்கு விருத்தியடைந்துள்ளது. மேலும் - அது எந்நேரமும் சுறுசுறுப்பாக வேலை செய்த படியும் உள்ளது.

பௌத்த குரு தலாய் லாமா போன்றவர்களின் வழியைப் பின்பற்றும் பலர் உண்மையிலேயே மகிழ்ச்சியாகத்தான் இருக்கிறார்கள் என்று இப்பொழுது விஞ்ஞான பூர்வமாக என்னால் கூற முடியும். அது மட்டுமல்ல, இந்த மகிழ்ச்சி அவர்களது பரம்பரை இயல்புகளால் ஏற்பட்டதல்ல. மாறாக அவர்களின் தியானத்தாலேயே அது உருவாகிறது.

அதே சமயம் - சாதாரண மக்களைப் பாதிக்கும் - கோபம் - ஆத்திரம் - போன்ற எதிர்மறையான உணர்வுகள் தியானம் செய்பவர்களைப் பாதிப்பதில்லை. விஞ்ஞானம் இதுவரை கண்டுபிடித்துள்ள எந்த மருந்தாலும் மனிதனுக்கு மகிழ்ச்சியை ஏற்படுத்த முடியாது அது தியானத்தால் மட்டுமே சாத்தியமாகும்”

இலண்டன் வாசகர்களிடையே பரபரப்பை ஏற்படுத்திய இந்தச் செய்தியின் ஒரு பரிமாணத்தை அலசுகிறது இந்தக் கட்டுரை.

“ஒரு மனிதனின் மகிழ்ச்சி - அவனுக்குள்ளேயே - அவனின் நெற்றியின் பின்னாலேயே இருக்கிறது. இடது மூளையின் ஒரு குறிப்பிட்ட சோணையை ஒரு மனிதனின் மகிழ்ச்சியை நிர்ணயிக்கிறது.” என்று விஞ்ஞான பூர்வமாக இப்பொழுது நிரூபிக்கப்பட்டுள்ளது.

இதை வேறொரு விதமாகக் கூறுவதானால் - மனிதன் தேடும் மகிழ்ச்சி என்பது வெளியிலிருந்து அவனுக்குக் கிடைப்பதில்லை. மாறாக - அவனுக்குள்ளேயே - அவனது மூளையின் ஒரு பாகத்தாலேயே அது அவனுக்கு அளிக்கப்படுகிறது.

அதாவது - பல பல வருடங்களாகப் படித்து - ஆராய்ச்சிகள் பல பல செய்து - பல பல நூல்களை எழுதி - பேராசிரியர் என்று பட்டம் வாங்கிய ஒருவர் - விஞ்ஞானி - அறிவாளி என்று சமூகத்தில் பலராலும் இங்கு மதிக்கப்படும் ஒருவர் - அதி சிறந்த பதவியில் அமர்ந்து - அதிகம் சம்பாதிக்கும் ஒருவர்- எவ்வளவோ பணத்தை செலவு செய்து - யார் யாருடைய நேரத்தையோவெல்லாம் உபயோகித்து - ஒரு மிகப் பெரிய ஆராய்ச்சியை வடிவமைத்து - நடாத்தி-இறுதியில் அதன் முடிவுகளை உலகிற்குச் சொல்லியிருக்கிறார்.

அது என்னவெனில் - இங்கு மனிதன் தேடும் மகிழ்ச்சி என்பது வெளியிலிருந்து அவனுக்குக் கிடைப்பதில்லை. மாறாக- அவனுக்குள்ளேயே - அவனது மூளையின் ஒரு பாகத்தாலேயே அது அவனுக்கு அளிக்கப்படுகிறது.



அபாரமான கண்டுபிடிப்பு! அற்புதமான கண்டுபிடிப்பு! அதிசயமான கண்டுபிடிப்பு! என்று இதைப் பலரும் பாராட்டிக் கொண்டிருக்கும் அதே வேளையில் - நம்மில் பலரின் மனதில் தவிர்க்க முடியாமல் மிதந்து வரும் அந்தக் கிராமத்திய முதுமொழியையும் நாம் அலட்சியம் செய்து விட முடியாது.

“பத்துப் பிள்ளைகளைப் பெற்றெடுத்த தாயொருவளைப் பார்த்து ஒரே ஒரு பிள்ளையை மட்டும் பெற்றவள் ஒருவள் முனகிக் காட்டினாளாம்”

எதற்காக இப்பொழுது இந்த முதுமொழி?

அந்தப் பேராசிரியரின் கண்டுபிடிப்புகளைப் போல- ஒன்றல்ல-இரண்டல்ல-பத்துக்கோடிக்கும் மேலான கண்டுபிடிப்புகளை உள்ளடக்கிய ஒரு மாபெரும் மெஞ்ஞானத்தை-மதத்தை- அத்திவாரமாகப் பெற்ற நமக்கு - விஞ்ஞானியான அந்தப் பேராசிரியரின் முனகலைக் கேட்கச் சகிக்கவில்லை.

இங்கு மனிதன் தேடும் மகிழ்ச்சி என்பது வெளியிலிருந்து அவனுக்குக் கிடைப்பதில்லை. மாறாக - அவனுக்குள்ளேயே- அவனின் நெற்றியின் பின்னாலேயே அது இருக்கிறது என்ற விடயத்தை நமக்கு இங்கு யார் யாரோவெல்லாம் - கல் தோன்று முன்னரே - மண் தோன்று முன்னரே - மிகவும் சாதாரணமாகவும்- மிகவும் தத்ரூபமாகவும் கூறிவைத்து விட்டுச் சென்று விட்டார்கள்

உதாரணமாக - ஆனந்தம் வெளியேயில்லை - அது நமக்குள்ளேயே இருக்கிறது என்பதை தாயுமானவர் இவ்வாறு கூறுகிறார்:

**தன்னிலையே நில்லு! தானே**
**தனிச் சச்சிதானந்தம் ஆம்!**

ஒருவனுக்குள்ளேயே சுகம் இருப்பதை மறைமுகமாக விளக்குகிறார் பாரதியார்:

**தன்னை யறிந்தின்பமுற வெண்ணிலாவே-ஒரு**
**தந்திரம் நீ சொல்ல வேண்டும் வெண்ணிலாவே.**

உயர்ந்த தியானத்தின் போது - நான் என்ற உணர்வு அடங்கி - இந்திரியங்கள் செயல்படாது - உள்ளத்தில் ஓங்கார ஒளிமயம் தோன்றுவதை பாடுகிறார் திருமூலர்:

**ஊமை யெழுத்தோடு பேசும் எழுத்துறில்**
**ஆமை யகத்தனில் அஞ்சும் அடங்கிடும்**
**ஓமய மற்றது வுள்ளொளி பெற்றது**
**நாமய மற்றது நாமறியோமே**

சுகம் என்று நாம் நம்பும் எந்தச் சுகமும் - நாம் தேடி அனுபவிக்கும் எந்தச் சுகமும் - நமது மனதின் ஒரு குறுகிய கால சலனமற்ற நிலையே தவிர - நாம் தேடி அடைந்த பொருட்களிலிருந்து வருவதல்ல. சுகம் என்பது மனித மனதின் - நமது மனதின் ஒரு நிலை - ஒரு பரிமாணம். அது நமக்குள்ளேயே இருந்தது- நம்மிலிருந்தே வருகிறது. வெளியேயிருந்து வரும் பொருட்களிலிருந்து வருவதல்ல - வர முடியாது.

அடுத்தவன் வாங்கி விட்டான் என்பதற்காக - அடுத்தவனுக்குக் காட்ட வேண்டும் என்பதற்காக - அடுத்தவனை விட நாம் பெரியவனென்று நிரூபிப்பதற்காக - அடுத்தவனுக்குப் பாடம் படிப்பிப்பதற்காக - இவற்றிலிருந்தெல்லாம் சுகம் வேறு கிடைக்கிறது என்று நம்பி எத்தனை எத்தனை தேவையற்ற குப்பைகள் நமது வீட்டில்! எத்தனை நாட்கள் சுகம் தந்தன இவை எல்லாம்? இவற்றிற்கும் - நமது சுகத்திற்கும் ஒரு வித தொடர்பும் கிடையாது.

ஒரு நாளைக்கு ஒரு தடவையாவது - அறைக்கதவைத் தாளிட்டு - சுகாசனத்தில் அமர்ந்து - கண்களை மூடி - உள்ளே செல்லும் மூச்சையும் வெளியே வரும் மூச்சையும் நிதானமாக அவதானித்து - அந்த அவதானிப்பிலேயே மனதை மறந்து - ஒரு நிமிடம் மறந்து - ஒரு மணித்தியாலம் மறந்து - இருபத்தி நாலு மணி நேரமும் மறந்திருக்கத் தெரியும் போது - அந்த மறப்பில் நம்மை நாமே தரிசிக்கும் போது - அந்த ஆனந்தத்தில் திளைக்கும்போது - பரமனால் கூட தடுக்க முடியாது நமது முக்தியை, காரணம் -அப்பொழுது நாம் பூரணம்.

மனிதர்களின் பிரச்சனைகளை - துன்பங்களை விஞ்ஞானம் என்றுமே தீர்த்ததில்லை - தீர்க்கவும் முடியாது. பணமில்லாதவர்கள் பண்டமாற்றுச் செய்வதைப் போல-ஒரு பிரச்சனையை இன்னோரு பிரச்சனையாக மாற்ற முடியுமே தவிர - பழைய பிரச்சனைக்குப் பதிலாக புதிதாக ஒரு பிரச்சனையை உருவாக்க முடியுமே தவிர - பிரச்சனைகளே இல்லாத உலகத்தை விஞ்ஞானத்தால் உருவாக்க முடியாது. ஒரு சமூகத்திற்கு - ஒரு நாட்டிற்கு- நாம் வாழும் உலகிற்கு விமோசனம் அளிப்பவர்கள் மெய்ஞானிகள் - விஞ்ஞானிகளல்ல.

போர்வைகளற்ற நிர்வாணம் இந்த அவதானம்.

அகத்தே மாசில்லாதவனுக்கு நிர்வாணம் ஒரு புனிதம்.

அது ஒரு சத்தியம். ■



சறோஜினி சந்திரகோபால்






# தமிழ் கல்விக் கூடம்

## High Wycombe, Buckinghamshire

“மொழி என்பது வெறும் தொடர்புக்கான ஊடகம் மட்டுமன்று. அது ஒரு இனத்தின் வரலாற்று அடையாளம். கலாச்சாரத்தின் வெளிப்பாடு. சிந்தனையின் திறவுகோல்.” அழகான இந்த வரிகளை, ஆணித்தரமாக முன்வைத்துப் புலத்தமிழ்ப் பூங்காவின், 36வது இதழில் முழுமதியாக மலர்கின்றது *High Wycombe* தமிழ் கல்விக்கூடம். 2006ம் ஆண்டு சித்திரைத் திங்களில், *High Wycombe* இல் உள்ள *Green Street Community Hall* இல் 3 ஆசிரியர்களுடனும், 23 மாணவ மாணவிகளுடனும் இக்கல்விக் கூடத்தினை அங்குரார்ப்பணம் செய்து வைத்த பெருமைக்குரியவர், ஐவன் என்று அழைக்கப்படும் திரு. தெய்வேந்திரன்.

காலப்போக்கில், மாணவர் எண்ணிக்கை அதிகரித்து வர, 2010ம் ஆண்டு ஐப்பசித்திங்களில், இக்கல்விக்கூடம் *Bucks New University, Queen Alexandra Road, High Wycombe, HP11 2JZ* எனும் முகவரிக்கு இடம் மாறி, இன்று 7 தமிழ்மொழி ஆசிரியர்கள், 5 நுண்கலை ஆசிரியர்கள் மற்றும் 80க்கும் மேற்பட்ட மாணவ மாணவிகள் எனப் பெருவிருட்சமாகி, பிரதி ஞாயிற்றுக் கிழமை தோறும், மதியம் ஒரு மணி முதல் 5 மணிவரை, *High wycombe* வாழ் தமிழ் சமூகத்தினரின், முக்கியமாக இளந்தலைமுறையினரின் தாய்மொழி வளர்ச்சிக்குப் பெருந் தொண்டாற்றி வருகிறது.

தமிழ் கல்விக் கூடத்தின் ஆரம்பகர்த்தாவான திரு. ஐவன் அவர்கள், இக்கழக ஆரம்ப வரலாறு பற்றிப் பேசுகையில், “எங்கள் கல்விக் கூட வலைத்தளத்தில் நாம் கூறியுள்ளவாறு, பல்வேறு இனங்கள் ஒன்று கூடி வாழும் அயலகச் சூழலில், எம் தமிழ் சிறார்கள் தம் தாய்மொழியினை, வேர்களை, அதன் தொன்மையினை அறிந்தவர்களாக வாழவேண்டும் என்ற ஒரே நோக்கத்துடன் *High Wycombe* பகுதியில் வாழும் மொழி ஆர்வலர்கள், தமிழ் அன்பர்கள் ஒரு சிலரை ஒன்றிணைத்து, பரஸ்பரம் உரையாடியதன் அறுவடைதான் ‘*High Wycombe* தமிழ் கல்விக் கூடம்’ எனப் பெருமிதத்துடன் கூறினார். தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவையினரின் பாடத்திட்டத்தினைப் பின்பற்றி, மழலையர் நிலை, பாலர் நிலை, மற்றும் வளர்நிலை ஒன்று முதல் பத்து வரையிலான வகுப்புக்களை நடாத்திவரும் ஒரு உயர்நிலையில் இக்கல்விக் கூடம் வளர்ந்து வெற்றி நடை பயில்வதற்கு, 2008ம் ஆண்டு முதல் எம் கழகத்தோடு இணைந்து செயல்படுபவரும், தமிழ் மொழிப் பிரிவிற்குத் தலைமைப் பொறுப்பேற்று வழி நடத்துபவருமான திருமதி அருந்ததி இரட்னராஜ் அவர்களது ஆளுமைத் திறனும் அவரோடு இணைந்து செயல்படும் சக ஆசிரியைகளான மரியா ஜெனோவா இருதயநாதன், கனிமதி பாலச்சந்திரன், செந்தாமரைச் செல்வி, ஹனுஷா ரவிதரன் ஆகியோரது தன்னலமற்ற அர்ப்பணிப்புமே காரணமென்று மிக மகிழ்வுடன் விபரித்தார் திரு. ஐவன் அவர்கள்.



தொடர்ந்து பேசிய திரு. ஐவன், கழகத்தின் நுண்கலைப் பிரிவில் மாணவர்கள் மேன்மேலும் முன்னேற மூலதனமாக இருப்பது, கலாவித்தகர் திருமதி. சிவனுா ஜெயசேகரம் (வயலின்), ஸ்ரீசெல்வநாயகம் கேசவன் (*Key Board*), சாந்தி தர்மேந்திரன் (நடனம்), தரன் சிவகுருநாதன் (மிருதங்கம்), திருமதி உஜாயினி குமரக்குன்றன் (வாய்ப்பாட்டு) ஆகிய கலை ஆசிரியர்களது கடின உழைப்பும், சேவை மனப்பான்மையுடனான கலைகள் மீதுள்ள பற்றுமே என்று புகழ்மாலை சூட்டினார்.

இங்கு பயிலும் மாணவர்கள் தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவையினரின், வளர்நிலை அனைத்துத் தேர்வுகட்கும், மற்றும் திருக்குறள், பேச்சு, இலக்கியப் போட்டிகளுக்கும் சளைக்காது தோற்றி, மெச்சத்தக்க பெறுபேறுகளைப் பெற்று, கழகத்திற்குப் பெருமை சேர்க்கின்றனர். அதே வேளையில் நுண்கலைப் பிரிவில் இருந்து, ‘*offal*’ தேர்வு நிலையத்தினர் நடாத்தும் வாய்ப்பாட்டு, மிருதங்கம், வயலின், நடனம், கிட்டார் பாடத் தேர்வுகட்கும், *Trinity College (London)* மற்றும் *London College of Music (The University of west London)* நிலையத்தினரின் *Key Board, Guitar* பாடத் தேர்வுகட்கும் தோற்றும் மாணவ மாணவிகள் ஒவ்வொரு தரத்திலும் படிப்படியாக முன்னேறி வெற்றி மீது வெற்றியீட்டி வருவது, அவர்களைப் பயிற்றுவிக்கும் ஆசான்களது சாமர்த்தியத்திற்கான சான்றுகளே.

இக்கல்விக் கூடத்தின் நிர்வாக உறுப்பினர்களில் ஒருவரான திரு. அப்துல் ஹக்கீம் அவர்கள், கழகத்துடனான தன் அனுபவங்களைப் பகிர்ந்து - கொள்கையில், தமிழ்மொழி, இலக்கிய இலக்கண வரலாற்று அடிப்படை கொண்ட மிகப் பழைமையான மொழி. அந்நிய நாட்டில் பிறந்து வளரும் குழந்தைகளுக்கும், இளைய தமிழ்ச் சமூகத்தினருக்கும் தாய்மொழியைக் கற்றுத் தருவதோடு, இசை, நடனம், நாடகம், ஓவியம் வரைதல் போன்ற எம் பண்பாட்டோடு ஒத்த கலாச்சார விழுமியங்களையும் அவர்களுக்கு அறிமுகப்படுத்த வேண்டும். என்பதே எம் கழகத்தின் முக்கிய குறிக்கோள் என்று மிக உறுதியாகப் பேசினார். அத்துடன் கழகம் நடாத்தி வரும் தமிழர் திருநாள், கழக ஆண்டு விழா, நத்தார் கொண்டாட்டம் பற்றியும் விளக்கினார்.

“தைத்திருநாளாம் உழவர் திருநாளை நாம் உணவுத் திருநாள்” எனும் பெயரில் கொண்டாடுகின்றோம். நிர்வாகத்தினர். ஆசிரியர்கள், பெற்றோர்கள் அனைவரும் தத்தம் இல்லங்களில் எமது அன்றாட உணவுப் பண்டங்களோடு, எம் முன்னோரின் பாரம்பரிய உணவுகளான ஆடிக்கூழ், கம்பங்கூழ், அதிரசம், களி போன்ற உணவுகளையும் தயாரித்து, மண்டபத்தில் வரிசைப்படுத்தி, இளையவர்களுக்கும் அவை பற்றி எடுத்துரைத்து அனைவரும் உண்டு மகிழ்வார்கள். கழக ஆண்டு விழாவின் போது, நடனம், நாடகம் வாய்ப்பாட்டு, வாத்திய இசை, பேச்சு போன்ற ஆசிரியர்களால் நெறியாழ்கை செய்யப்பட்ட நிகழ்ச்சிகள் அரங்கேற்றப்படும். நத்தார் பண்டிகையின் போது, மாணவர்கள் தாம் கற்றுக் கொண்ட மொழி, கலை, அறிவினை மையப்படுத்தி, தாமே நிகழ்ச்சிகளைத் தயார் செய்து தனியாகவோ, குழுவாகவோ மேடையில் தமது திறமைகளை வெளிக்காட்டும் வாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுத்து அவர்களை ஊக்குவிக்கின்றோம்.

உற்சாகமாக உரையாடிய திரு. அப்துல் ஹக்கீம் அவர்களிடம் *High Wycombe* தமிழ் கல்விக் கூடத்தின் “தனித்துவம்” பற்றி வினா எழுப்பியபோது “மிகக்குறைவான தமிழ் மக்கள் வாழும் *Hye wycombe* பகுதியில், தாய்மொழி கற்பதன் அவசியம், மொழியுடன் இணைந்த பாரம்பரிய கலைகளைப் பாதுகாக்க வேண்டிய எமது கடமை போன்ற விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தி, குறைந்த கட்டணத்தில் அவற்றை கற்க வழி சமைத்துள்ளோம். பிள்ளைகளைக் கூட்டிவரும் பெற்றோர், கழக வாசலுடன் திரும்பி விடாது. ஒன்றாக அமர்ந்து ஒருவரோடொருவர் உரையாடி நட்பினை வளர்த்து, தமது எண்ணங்களைப் பரிமாறி மகிழும் அரிய நோக்கத்தினை மனதிற்கொண்டு. அவர்களுக்கென ஒரு தனி அறை ஒதுக்கி உள்ளோம். இந்த அறை எம் பெற்றோர்களது நட்பினுக்காக உறவுப் பாலமாக உள்ளது. இவை எமது கழகத்தின் தனிச்சிறப்பு தனித்துவம் என்றார்.

இக்கல்விக் கூடத்தின் மொழி பயிற்றுவிக்கும் ஆசிரியைகளில் ஒருவரான, ஜெனோவா இருதயநாதன் தமிழ்மொழி வளர்ச்சி பற்றிய தன் மன ஆதங்கத்தை தானாகவே விளக்கினார். “மொழி வளர்ச்சியில் கல்வி நிலையங்கள், ஆசிரியர்கள் பங்களிப்போடு பெற்றோரது ஒத்துழைப்பு மிகவும் முக்கியம். வீட்டில் குழந்தைகளுடனும், இளையோருடனும் தமிழில் பேசவேண்டும். இது முக்கியம். அடுத்ததாக, பல அன்றாட நடைமுறைச் சிக்கல்களுக்கு முகம் கொடுத்த போதும், மிக அர்ப்பணிப்போடுதான் எல்லாத் தமிழ் பாடசாலைகளிலும் ஆசிரியர்கள் கற்பிக்கின்றார்கள். ஆனால், பல்கலைக்கழக அனுபவத்துடன், தமிழ்மொழி பற்றிய சிந்தனையும் இளையோரிடம் இருந்து விடைபெறுகின்றது. இந்த நிலை மாற வேண்டும். இந்நாட்டிலுள்ள தமிழ்ப் பள்ளிகள், கல்விக் கூடங்கள், கழகங்களில் தமிழ்மொழி நுண்கலை பயிலும் மாணவர்களுக்கென ஒரு “பழைய மாணவர் சங்கம்” அமைக்கப்பட வேண்டும். அச்சங்கம் மூலம் இளையோர் இணைந்து செயல்பட வேண்டும். இதனை யாராவது முன்னெடுத்து நடைமுறைப்படுத்துவார்களா”? ஆசிரியை ஜெனோவாவின் ஆதங்கம் நியாயமானது மட்டுமல்ல. இன்றைய காலகட்டத்தில் நடைமுறைப்படுத்த வேண்டிய முக்கியமான செயலும் இதுவாகத்தான் இருக்க முடியும்.

பெற்றோர்களது ஈடுபாடுபற்றி அப்துல் ஹக்கீம் அவர்கள் விபரித்தார். இக்கழகத்தின் வளர்ச்சியில், ஒவ்வொரு தேவைகளையும் குறிப்பறிந்து தீர்வு காணும் பெற்றோர்களது சேவை பாராட்டப்பட வேண்டிய ஒன்று. எம் கல்விக் கூடத்தின் உயிர்நாடியான நிர்வாகத்தினர், முதுகெலும்பாகச் செயல்படும் ஆசிரியப் பெருமக்கள், பிள்ளைகளோடு சேர்ந்து தாமும் கடினமாக உழைத்து, கழகத்தைத் தாங்கி நிற்கும் பெற்றோர்கள் அனைவருக்கும் பாராட்டும், நன்றி கூறினார்.

பல தரப்பட்ட அன்றாட வாழ்க்கைச் சிக்கல்கள் மத்தியிலும், தாம் பிறந்த மண்ணை, மொழியை நேசித்து வளர்க்கப் பாடுபடும் நிர்வாகத்தினர், ஆசிரியர், பெற்றோர் அனைவரையும் போற்றி, *High Wycombe* தமிழ் கல்விக்கூடம் நீண்ட ஆயுளுடன் தமிழன்னைக்கு சேவை செய்ய வாழ்த்தி நிற்கின்றது புலத்தமிழ் பூங்கா. ■

# வீடு வளவு ஊர் உறவுகள் உல்லாசமான ஆனந்த நாட்கள்...

அதிகாலையிலேயே விடியலின் ஆரம்பம். காலை இளம் கதிர்கள் கண்ணாடி யன்னலோடு இல்லத்தின் உள் ஒளிரும் கோடை. அடுத்த வீட்டில் ஆரவாரம். எட்டிப்பார்த்தேன். ஓ... புதிதாக பக்கத்து வீட்டை வாங்கியவர்கள் குடிவருகிறார்கள். பெரிய வாகனம் ஓசை எழுப்பியபடி நிற்கிறது. பொருட்கள் ஒவ்வொன்றாக உள்நுழைகின்றன.

எண்ணிப்பார்க்கிறேன். ஒரே கூரைக்குள் நடுவில் சுவர் பிரிக்கும் இந்த இல்லத்தை வாங்கி இருபது வருடங்கள். இடையே அயல்வீடு நாலு கைகளில் மாறிவிட்டது. யார் அவர் என்று எவருமே ஒட்டி உறவாடிய அயல்கள் அல்ல. காலை, மாலை வெளியில் காணும்போது ஒரு வணக்கம், அவ்வளவுதான்.

என்னுடைய நினைவு எம் தாயக வீட்டை நோக்கி நீண்டது. தெல்லிப்பழை பிரதேசம். பண்ணாலை






கிராமம். பேருந்து ஓடும் வீதி ஓரம். இருபது பரப்பில் இடையில் அமைந்தது. நாற்சார் வீடு. நடுவில் முற்றம். சுற்றிலும் ஐம்பதிற்கு மேலான தென்னைகள். நாலு பனைகள். வேப்பமரம். மாமரங்கள், கோடை எலுமிச்சை, மாதுளை, பதினைந்துக்கு மேலான கமுகு எனப்படும் பாக்கு மரங்கள். எல்லாமே பயன் மரங்கள். அம்மம்மாவின் வழி சீதன வீடு. அயல் தோறும் மாமி, சித்தப்பா, பெரியப்பா வீடுகள். நடுவில் பெரும்பனை வளவு. 1924ம் ஆண்டு எழுப்பப்பட்ட வீடு. 1940இல் மாற்றங்களுடன் எழில் கண்டது. 1967இல் நாம் அறிய நடுக்கூரை கொண்ட தலைவாசல். ஓட்டுக்கூரை கொண்ட அறைகளுடன் சீர்பீறியது. அம்மாவுக்கும் சித்திக்கும் அரை, அரை பங்கு. ஒரே கூரை வாழ்வு. ஒரே பானை சோறு.

போர் சீரழிக்கும் வரை, ஐந்து பரம்பரைகளின் பிறப்பை கண்ட மனை. இருட்டிலும் அம்மம்மா தெளிவாக நடமாடுவார். எது எது எங்கே? எல்லாமும் பரிட்சயம். முற்றத்தில் ஒரு மல்லிகைப்பந்தல். அடுத்தடுத்து பருத்த இரு முள்முருக்கை. அம்மா, அம்மம்மா திருமணங்களைக் கண்ட கன்னிக்கால் மரங்களாம். வாசல்வரை நீண்ட குரோட்டன்கள். பல இன சிதம்பரத்தம் மரங்கள். வாழைகள். மாட்டுக்கொட்டில் ஒருபுறம். அம்மப்பாவின் பயண சொத்தான கூடார வண்டிலும் அந்த கொட்டிலுள் கிடக்கும். ஒரு காலம்வரை ஓரிரு மாடு. தொடராக செவியன் ஆடுகள், துள்ளித்திரியும் குட்டிகள்.

வெளிமுற்றத்தில் கிணற்றடி பாதை ஓரம், உரல், உலக்கை, கல்லுரல் கிடக்கும். மழைக்காலங்களில் அவை மாட்டு கொட்டிலுக்கு மாறும். நனையப் போட்டு அரிசி இடிப்பது, வறுப்பது, மிளகாய் செத்தலை பெரிய இரும்பு சட்டியில் வாட்டி இடிப்பது என்று அயல் வீட்டார் உதவியுடன் முற்றம் அடிக்கடி ஆரவாரம் காணும். உரல், உலக்கையில் ஒட்டிய மாவை உண்ண அணில்கள் அணிவகுக்கும். புலுனி பறவைகளும் சின்னஞ்சிறு சிறகைகளை விரித்து, கீச்சு ஒலி எழுப்பி இரை பொறுக்க இருந்து எழும்பும். செண்பகப் பறவை என்னும் ஒன்று. காகத்தின் அளவு. எட்டத்தில் ஒரு கொப்பில் இருக்கும். எத்தி திரியும் காகங்கள், வீட்டில் குஞ்சாகி கோழியாகி பரம்பரையாய் தொடரும் கோழிகள், சேவல்கள் எல்லாமே வளவுக்கு அழகு தருவனதான்.

இடைப்பழம் பழுத்தால் வெட்டி சரிக்கப்படும் வாழைக்குலை களஞ்சிய அறையில் கட்டி தொங்கும். போட்டி போட்டு பிடுங்கி உண்ணுவோம். அம்மம்மாவின் கைவண்ணத்தில் பனம்பிளாட்டு பனை வளவு பனங்கிழங்கு பாத்தியில் விளைந்த பனங்கிழங்கு, பனங்கொட்டை பூரான், கிழங்கு துவையல், ஒடியல், பனக்கொடியல், வேப்பம்பூ வடகம், எலுமிச்ச ஊர்காய், மாங்காய் வத்தல் என குறையாத பண்ட வளங்களை வீடு கொண்டிருக்கும்.

வீட்டு வெளி விறாந்தை அன்றாடம் அம்மம்மா, அம்மாவிடம் வரும் உறவு, நட்பு கூட்டம் குந்திஇருந்து கதை பேசும் கூட்டம். தேங்காய், பாக்கு, புளியம் பழம் போன்ற தேவைக்கு மிஞ்சிய வளவு விளைவுகளை வாங்கிப்போக வரும் வாடிக்கையாளர்களான அயலவர்க்கும் அதுதான் கூடம். பாய் இருக்க, பாக்குரல், வெற்றிலை பாக்கு தட்டம் வாய் பாக்கு வெற்றிலை சுவைக்க என்றும் விறாந்தையில் இடம் பிடிக்கும்.

சூது வாது அற்ற பரம்பரை பரம்பரையாக தெரிந்த உறவுகள், அயல்கள். உற்ற துயருக்கு ஒருவருக்கு ஒருவர் கைகொடுக்கும் பாச உணர்வு. பெரியோரான மூத்தவர் வார்த்தைக்கு பணிவு, எங்கும் எவரிடமும் ஒளிவீசும் பண்பு எல்லாமே எம் தாயக கிராமங்களின் இருதயத்தின் இருப்புகள்தான்.

குசினி என்ற சமையல் அறையோடு ஒட்டிய பக்க விறாந்தையில் நடுமுற்றத்தை ஒட்டி ஆட்டுக்கல். வாரம் ஒருமுறையேனும் ஊறப்போட்டு கோது நீக்கிய உளுந்து அதற்குள் ஆட்டம் காணும். மறுகாலை உணவு தோசை, குண்டுத் தோசை அல்லது அப்பம் என்பது இந்த அரைப்புக்கான அர்த்தம். திருகை என்ற கல்லாலான வட்ட வடிவ கை அரைப்பு காணும் ஒன்றும் நீண்ட காலம் இருந்தது. குர்க்கன், சாமி, உளுத்தம்பருப்பு என்பன இதன் நடுப்புற பள்ளத்தில் விழ, கைசுற்றி அரைக்க அவை வட்டவடிவாக சுற்றிலும் மாவாகி சொரியும். கடின வேலைதான். ஆனாலும் இது போன்ற வீட்டு வேலைகள் தான் அம்மம்மாவை கட்டுடலோடு நோய் நொடி இன்றி தொன்னூறு வயதுக்கு வாழ வைத்தது எனலாம்.

குசினிக்குள் அம்மி. அன்றாடம் காலை உணவாகும் இடியப்பம், பிட்டுக்கு சம்பல் அரைத்து தள்ளுவது அம்மிதான். மூன்று அடுப்பு. மேலே புகைக்கூடு. அடுப்புக்கு கீழே விறகு அடுக்கு. சுவர்சுற்று அலுமாரிகளில் சீனி, கோப்பி, தேயிலை, வெந்தயம், சீரகம் என்று பேணி தகரங்களில் பேணி வைக்கப்படும் தினிக்கான பலதும் அடுக்காக இருக்கும். கை செலவுக்கான அம்மாவின் சில்லறைகள், சில நோட்டுக்களும் இந்த பேணிகளில் ஒன்றில்தான் இருக்கும். பானைகள், சட்டிகள் மட்பாண்டங்கள்தான். காலப்போக்கில் சில்வர்களாகின. தயிர்பானை, உறி ஒரு மூலையில் தொங்கும். காலைதோறும் மத்தில் தயிர் கடையும் சத்தம் அம்மம்மா குசினிக்குள் என்று அதன் அர்த்தம்.

பப்பாசி, மாம்பழம், வாழைப்பழம், மாதுளை,



கொய்யா, முட்டை இடையிடையே இறைச்சியாகும் சேவல், சித்தியின் பிள்ளைப் பேறுகாலம் சத்துணவாகிய விடலை கோழி குஞ்சுகள் என எங்கள் வளவின் விளைவுகள் எத்தனை? எத்தனை?

கிணற்றடி சவற்காரத்தில் ஊற வைத்து கிணற்று கல்லில் அடிபட்டு, தண்ணீர் அலம்பலில் அழுக்கு கழுவுண்டு வெளி கயிற்று கொடியில் பளிச்சென்று ஒளிரும் எம் உடுப்புக்கள்; இடையிடையே ஒரு காலம் வரை, துணிகளை எடுத்துப்போய், வெளுத்துக் கொண்டு வரும் செல்லன் கட்டாடி, தென்னையடி மேட்டில் மாதாமாதம் எம்மை குந்த வைத்து தலைமயிரை வெட்டி அழகுபடுத்த வந்துபோன கிட்டுண்ணு பரியாரி எல்லாமும் எல்லோரும் அந்தக்கால வாழ்வு முறையில் எங்கள் வளவிலும் வீட்டிலும் ஐக்கியமான முக்கிய உறவுகள்தான்.

வீடு, வளவு, அயல், சொந்தம், ஊர், பட்டினம் என்று அறிமுக உறவுகள், பண்ட பரிமாற்று, பரம்பரைகள் பிறப்பு இறப்பு காண நிரந்தரமாக நீடித்து நிலை பெற்ற பரம்பரை வீடுகள், உள்ளம் ஒட்டிய வாழ்வு. உல்லாசமான ஆனந்த நாட்கள், எல்லாமே பறிபோன, சிதறி தூர உறவாகிப்போன சொந்த பந்தம்.

எம் இல்லத்தில் எம் நால்வரில் மூத்த அண்ணா குடும்பம் கனடா வாழ்வு. அடுத்தவர் மட்டும் ஊரோடு. மூன்றாம் அண்ணா கிங்ஸ்ரன் மேயரான தயாளனும் நானும் பிரித்தானியா வாசிகள். சித்தி வழி தம்பி தங்கை குடும்பம் அவுஸ்ரேலியா. இளையர் இங்கு.

நினைத்தால் நெஞ்சு கனக்கிறது. போர்க்கால இழப்பில் இந்த பிரிவுகளுக்கு என்ன பெறுமதி ஈடு செய்யும்? இதய ஏக்கங்கள் எதுதான் போக்கும்? ■



தாயகத்தில் பிரிட்டிஷ் கவுன்சிலின் பயிற்சி பெற்ற நமது ஆங்கில ஆசிரியர்கள்.

# EDUCATIONAL DEVELOPMENT FORUM FOR SRI LANKA- UK

# தாயகத்தில் ஆங்கில மொழிக்கல்வியை வளர்க்க உதவுங்கள்!

## இலங்கை கல்வி அபிவிருத்தி அரங்கு (Uk) வேண்டுகோள்

30 ஆண்டு போரும், இயற்கை அனர்த்தங்களும் வடக்கு, கிழக்கு மாணவர்களின் கல்வியை மிகவும் பாதித்ததால் அவர்கள் நாட்டின் ஏனைய மாணவர்களை விட மிகவும் பின் தங்கியுள்ளனர்.

நாட்டின் பொருளாதார அபிவிருத்தியில் பாதிப்பும், வெளிநாட்டுக் கடன்களுக்கான கொடுப்பனவு அதிகரித்தும் செல்வதால் அரசு உள்நாட்டு அபிவிருத்திக்கு மிகச் சிறிய தொகையையே ஒதுக்குகிறது. இதனால் கல்விக்கு மேலும் சிறிய தொகையே கிடைக்கிறது. இந் நிலையில் போரினால் பாதிக்கப்பட்ட தமிழர் பிரதேசத்திற்குக் கிடைக்கும் தொகை இன்னும் சிறிய தொகையாகும். இதனால் தமிழர் பிரதேச கல்வி நிலையைக் குறைந்த பட்சம் போரிற்கு முன்னதான நிலைக்கு உயர்த்துவது மிகவும் கடினமானதாகும்.

தற்போது கல்வி வளர்ச்சிக்கு ஆங்கிலக் கல்வி முக்கியமானதாக உள்ளது. இக் கல்வியே இளைஞர், யுவதிகளின் அறிவுத் திறனை வளர்ப்பதற்கான பல வாய்ப்புகளை உருவாக்கவும், குறிப்பாக புதிய வேலை முறைகள் ஆங்கில மொழிசார்ந்த அறிவை அவசியப்படுத்தியுள்ளன. தமிழ் மாணவர்கள் பலர் கணிதம், விஞ்ஞானம், தொழில்நுட்பம் போன்ற பாடங்களில் வளர்ச்சி அடைய வேண்டுமெனில் ஆங்கில மொழி அறிவு அவசியமாக உள்ளது. இம் மொழி அறிவை ஊட்டுவதற்கு கணிசமான அளவு ஆங்கில ஆசிரியர்களின் தேவை உள்ளது. ஆனால், போதிய ஆங்கில ஆசிரியர்களின் பற்றாக்குறை ஒரு புறமும், மறு புறத்தில் தற்போது ஆங்கில மொழி போதிக்கும் ஆசிரியர்கள் அதற்குரிய ஏற்ற தராதரத்தை அல்லது பயிற்சியைக் கொண்டிருக்கவில்லை என்பது இன்னொரு பிரச்சனையாக உள்ளது.

தற்போது வட பகுதியில் மட்டும் 800 ஆங்கிலக் கல்வி போதிக்கும் ஆசிரியர்கள் உள்ளனர். இத் தொகை போதுமானதல்ல. அது மட்டுமல்ல இந்த ஆசிரியர்களில் பலர் நகர்ப்புறங்களில் உள்ள பாடசாலைகளிலேயே அதிகளவு போதிக்கின்றனர். இதனால் கிராமப்புற பாடசாலைகள் பாதிக்கப்பட்டுள்ளன. இதனால் நகர்ப்புற, கிராமப்புற கல்வியில் பாரிய ஏற்றத் தாழ்வு உள்ளது. இவை மேலும் சமூக வளர்ச்சியைப் பாதிக்கின்றன. இதற்கான மாற்று ஏற்பாடுகள் என்பது அரசினால் மட்டுமே மேற்கொள்ள முடியும். இதில் எமது பங்கு மிகவும் சிறியது. தற்போது ஆங்கிலக் கல்வி போதிக்கும் ஆசிரியர்களுக்கு மேலும் பயிற்சிகளை வழங்கி அவர்களே புதிய ஆசிரியர்களுக்கு பயிற்சிகளை வழங்கும் விதத்தில் ஊக்குவிப்பை வழங்கினால் அவை மேலும் நிலமைகளைச் சீராக்க உதவும் என நம்புகிறோம். இதன் அடிப்படையில் நாம் எடுத்த சில முயற்சிகள் வெற்றியை அளித்துள்ளன என்பதைத் தெரிவிக்க விரும்புகிறோம்.

புலம்பெயர் மக்களாகிய எம்மால் இயலுமான உதவியைச் செய்வதாயின் இத்தனை ஆசிரியர்களின் தராதரத்தையும் உயர்த்தினால் குறிப்பிடத்தக்க மாற்றத்தை ஏற்படுத்த முடியும். இம் முயற்சியில் நாம் ஈடுபட்டுள்ளோம். அதாவது இருபது ஆசிரியர்களைத் தொகுதியாகக் கொண்டு இரண்டு தொகுதி ஆசிரியர்களுக்கு யாழ்ப்பாணத்தில் இயங்கும் பிரிட்டிஷ் கவுன்சில் என்ற கல்வி நிறுவனத்தின் உதவியுடன் 2015ம் ஆண்டில் ஒரு தொகுதியினரும், 2016 இல் இரண்டாவது தொகுதியினருமாக 40 ஆங்கில ஆசிரியர்கள் பயிற்சி அளிக்கப்பட்டார்கள். இப் பயிற்சியின் பின்னர் அந்த ஆசிரியர்கள் பயிற்றுவிக்கும் பாடசாலைகளின் பரீட்சை முடிவுகள் மகிழ்ச்சியைத் தந்துள்ளன.

இம் முயற்சிகளுக்கு அதிக பணம் செலவாகிறது என்பதையும் கூற விரும்புகிறோம். ஆனாலும் ஒப்பீட்டு அளவில் மிகச் சிறிய தொகையாகும்.. நாம் தற்போது எடுத்துள்ள முயற்சிக்கு அதாவது புதிய பயிற்சி நெறிக்கு 43,000 ஸ்ரேர்லிங் பவுண்கள் செலவாகுமெனக் கணக்கிடப்பட்டுள்ளது. புலம்பெயர் கனவான்கள் சமூகத்தின் எதிர்காலத்தைக் கவனத்தில் கொள்வார்களாயின் 'சிறு துளி பெரு வெள்ளம்' என்பது போல நாம் திரட்ட முடியும். இத் திட்டத்தினை நாம் புலம்பெயர் தேசங்களில் செயற்படும் சமூக நிறுவனங்களிடம் தெரிவித்தோம். அதன் காரணமாக ஸ்கொட்( *Standing Committee of Tamil Speaking People-SCOT)* என்ற அமைப்பினர் தமது நிறுவனத்தின் சார்பில் 10,000 ஸ்ரேர்லிங் பவுண்களை வழங்க முன்வந்துள்ளனர். அதே போன்று இன்னொரு தரப்பினர்3,000 பவுண் வழங்கச் சம்மதித்துள்ளனர். எமக்கு இன்னமும் 30,000 பவுண்கள் மேலும் தேவைப்படுகின்றன.

இப்பணக் கொடுப்பனவுகள் மிகவும் வெளிப்படையானவை. புலம்பெயர் மக்களின் இந்த உதவிகள் நேரடியாகவே யாழ்ப்பாணத்திலுள்ள பிரித்தானிய கவுன்சிலிடம் ஒப்படைக்கப்படும். இம் முயற்சிகள் யாவும் வட மாகாணசபையின் கல்வி அமைச்சின் அனுசரணையுடன் நடத்தப்படுவதால் அப் பணத்தின் பயன்பாடு மேலும் உறுதி செய்யப்படுகிறது. 'இலங்கை கல்வி அபிவிருத்தி அரங்கு' என்ற பெயரில் இயங்கும் எமது அமைப்பு ஆரம்பிக்கப்பட்டு மூன்று வருடங்களே ஆகிய போதிலும் முயற்சிகள் பலராலும் பாராட்டப்பட்டுள்ளன.

இதற்குப் பிரதான காரணம் புலம்பெயர் மக்களின் நன்கொடைகள் சரியான தேவைக்குப் பயன்படுத்தப்படுவது, வெளிப்படையானது, அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களினூடாகவே திட்டங்கள் செயற்படுத்தப்படுகின்றன என்பனவாகும். அத்துடன் அம் முயற்சிகளின் பெறுபேறுகளை அடையாளம் காணக்கூடியதாகவும் உள்ளது.

எமது தாயகத்து மக்களின் வாழ்வில் சிறிய பங்கையாவது புலம்பெயர் மக்கள் நிறைவேற்ற வேண்டுமாயின் அவர்களின் கல்வித் தேவையை உயர்த்துவதே பொருத்தமானது ஆகும். கல்வி என்பது மனிதர்களை முழுமைப்படுத்துகிறது.

எனவே ஆங்கிலக் கல்வியின் முழுமையான நலனை அனுபவிக்கும் எமது புலம்பெயர்ந்த மக்கள் அம் மகிழ்ச்சியின் சிறிய துளியையாவது எமது தாயக மக்களுடனும் பகிர்ந்து கொள்வதற்கு இது நல்ல வாய்ப்பு ஆகும். தாராளமாக உதவ முன்வருமாறு வேண்டுகிறோம்.

உங்கள் நன்கொடைகளை வழங்குவதற்கான விபரங்கள் கீழே தரப்படுகிறது.

standing committee of the Tamil Speaking People

**Event Account Sort Code: 60 04 02**

**Account: 84462612 Ref: English**



தாயகத்தில் ஆங்கிலக் கல்வி வளர்ச்சி குறித்து யாழ்ப்பாணத்தின் பிரிட்டிஷ் கவுன்சில் அதிகாரி Rebecca Rawnson அவர்களுடன் லண்டனில் நடந்த ஆலோசனைக்கு கூட்டத்தில் இலங்கை கல்வி அபிவிருத்தி அரங்கு (UK) தலைவர் என். சச்சிதானந்தன் தலைமையில் தமிழ் பிரமுகர்கள் கலந்து கொண்டனர்.

# அர்ச்சகருக்கான வெற்றிடங்கள்



# PRIEST VACANCY

## இலண்டன் உயர்வாசற்குன்று முருகன் ஆலயத்தில் அர்சகர் பதவிக்கான வெற்றிடங்கள்.

- இப்பதவிக்கு விண்ணப்பிக்கும் அர்ச்சகர்கள் முறையாக ஆகமம் பயின்று குருக்கள் பட்டம் பெற்றவராக இருத்த வேண்டும்.
- கோயில் பூசை, ஓமம், விவாகம் முதலியன செய்யக் கூடியவராகவும், ஆலயத்தில் பதினைந்து ஆண்டுகளிற்கும் குறையாமல் பணியாற்றியவராகவும் தேகாரோக்கியம் உள்ளவராகவும் சுவாமிக்கு நெய்வேத்தியம், அலங்காரம் செய்யக்கூடியவராகவும் இருத்தல் வேண்டும்.
- ஆகக் கூடியது 24 மாதங்கள் பணிபுரியலாம். இரண்டு விடுமுறைகள் உண்டு.
- சம்பளம் நேரில் முடிவு செய்யப்படும்.
- தங்குவதற்கு ஆலயத்தில் தனியார் இருப்பிட வசதியும் செய்து கொடுக்கப்படும். இதனைத் தவிர வேறு ஊதியங்களும் கிடைக்கும். குடும்பத்தை அழைக்க அனுமதிக்கப்பட மாட்டார்கள்.

விண்ணப்பப் படிவத்துடன் ஆகமம் பயின்ற இடம், பணிபுரிந்த இடங்களில் இருந்து பெற்ற சான்றிதழ்களையும் சேர்த்து முழுப் புகைப்படத்தையும் இணைத்து கீழ் குறிப்பிட முகவரிக்கு 14.06.2018க்கு முன்பாக அனுப்புதல் வேண்டும்.

**Secretary, Highgate Hill Murugan Temple**
**200A Archway Road, London N6 5BA**

# ENGINE TEC MOTORS

we offer Facilities for

- Servicing
- Clutches
- Brakes
- Overhauls
- Car Electricals
- Pre - MOT Checks
- ALL Types of Repair & Body Work
- Insurance Work Undertaken

**என்ஜின் ரெக் மோட்டர்ஸ் உங்கள் கார் திருத்த வேலைகளுக்கு நம்பிக்கையான நிறுவனம்**

Ask for Vel or Rajan
Tel: 020 8640 8000
020 8640 1230
Mob: 0786 0226 476
07860 770 945

Email: vel@etmluk.com
rajan 339c@gmail.com
www.etmluk.com



Unit 5,339 London Road, Mitcham, Surrey CR4 4BE

**தமிழிலேயே பேசி உங்கள் கார் பிரச்சனையைத் தீர்த்துக் கொள்ளலாம்.**



இணுவை ச.சிறீரங்கன்



# இசை உலகில் ஒளிவீசும் மாணிக்கம்

ஈழத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட ஒருவர், இன்று லன்டனில் மட்டுமல்ல, ஏனைய ஐரோப்பிய நாடுகளிலும், பல உலகநாடுகளிலும், குறிப்பாகத் தமிழ் நாட்டிலும் ஒளிவீசிப் பிரகாசிக்கிறார், அவர்தான் இசைச் செல்வன் மாணிக்கம் யோகேஸ்வரன். தமிழ்நாட்டில் அதிககாலம் வாழ்ந்த இந்த ஈழத்தவரை, தமிழ்நாட்டு மண்வாசனை அப்படியே கல்விப்பிடித்துக் கொண்டுவிட்டது. அந்த அளவுக்கு, பல சங்கதிகளை இவர் குரல் வெளிக்கொணர்கிறது. சென்னையைச் சேர்ந்த திரு. முத்துக்குமாரசாமியிடம் ஆரம்ப, சங்கீத அரிச்சுவடியையும், பின்னர் சங்கீதபூஷணம் திரு. பாலசிங்கம் அவர்களிடம் சங்கீதத்தேர்ச்சி பெற்றார். சென்னை பிரபல சங்கீத விற்பன்னர் பத்மபூஷன் T.V. கோபால கிருஷ்ணன் அவர்களைக் குருவாகக் கொண்டு சங்கீத அறிவுக்கு இவர் பட்டை தீட்டி, மிளிரத் தொடங்கினார். சங்கீத வாய்ப்பாடு, மிருதங்கம் ஆகிய கலைத்துறைகளில் ஈடுபட்ட இவர், கஞ்சிரா வாசித்தல், புல்லாங்குழல் இசைத்தல் என்பவற்றையும் 'ஒரு பிடி' பிடித்து, தேர்ச்சி பெற்றுள்ளார். ஈழத்துச் சீர்காழி என்று இவர் லண்டனில் பலராலும் அழைக்கப்படுகிறார்.

1985ம் ஆண்டு, சென்னை, பெசண்ட் நகரில், இவரது சங்கீத அரங்கேற்றம் நடைபெற்றது. அதைத் தொடர்ந்து, மளமளவென்று, யோகேஸ் மேடைகளை ஆக்கிரமிப்புச் செய்யத் தொடங்கினார். 86ல், மைலாப்பூர் தியாகராஜ உற்சவத்தில், கச்சேரி செய்த இவரை பலர் அடையாளம் கண்டு கொண்டனர். இதன் பின்னர் வாய்ப்புகள் பல, இவரைத் தேடி வந்தன. கனடா, நோர்வே, சென்னை, அமெரிக்கா, பிரான்ஸ், ஜெர்மனி, மொஸ்கோ என்று, ஒவ்வொரு வருடமும் பலப்பல அழைப்புகள் இவரைத் தேடி வந்து மொய்த்தன; வந்து கொண்டு இருக்கின்றன. பூ விரிந்து வாசம் பரவி மூக்கைத் துளைப்பது போல இவரது சங்கீதப் பாட்டின் திறமை, மெல்ல மெல்ல, வெளிப்பட்டு, தமிழ்நாட்டில், பலரின் காதுகளில் இசை பாடியது. அதன் விளைவாக யோகேஸ்வரனுக்கு, சென்னை இசைவிழா அழைப்பு வந்தது. விடுவாரா இவர்? 94ம் ஆண்டில், முதல்முறை கிடைத்த சந்தர்ப்பத்தை, இசைவிழாவில் பயன்படுத்தினார். பாராட்டுகள் குவிந்தன. இவர் உயர்ந்தார். இவர் உயர, ஈழத் தமிழர் கௌரவம் சென்னை 'இசைவிழாவில்' துலங்கியது. தாய் கற்ற கலைக்கு, தங்க முலாம் பூசி, தன்னை அதில் மிளிரவைத்து, யாழ்ப்பாணத்துக்குப் புகழ் சேர்த்த இவர் திறமையை எப்படிச் சொல்வது? தை மாதம் 1995ல் வெளிவந்த, சென்னை (Hindu) இந்து பத்திரிகை, இவரை "எழுச்சி பெறும் ஓர் தாரகை" (Rising Star) என்று கட்டியம் கூறியது. சங்கீத சாகரத்தில், நீண்ட பயணத்தைக் கடந்த இவர் இப்போது சர்வதேச சங்கீத இசைத்துறையில் துலாம்பரமாக இடம் பெறுகிறார் என்று 'அடையாறு Times, இவருக்கு, புகழாரம் சூட்டியுள்ளது. சங்கீத விமர்சகர்களில் தனிக்காட்டு ராஜாவாகத் திகழ்ந்து பிரபல விமர்சகரான சுப்புடு யோகேஸ்வரனை மனம்திறந்து, பாராட்டியிருக்கிறார் "யோகேஸ்வரனின் பொன்னான குரலானது, இரண்டு தம்புராக்கள் பின்னிப்பிணைந்து நாதம் எழுப்புவது போல் ரீங்காரமிடுகின்றது" என்று அவர் குறிப்பிட்டுள்ளார். இப்பாராட்டு, பழம் நழுவி, பாலில் விழுந்து வாயில் விழுந்தது போலல்லவா இருக்கிறது? தர்மப்பணிகளுக்கு நிதி சேகரிப்பதற்காக, இவர் பல கச்சேரிகள் மூலமாக உதவி செய்திருக்கிறார். ஜேர்மனியில் Disney தொலைக்காட்சி வாயிலாக, இவரது இன்னிசைக்கச்சேரி அறிமுகம் செய்து வைக்கப்பட்டுள்ளது. சென்னையில், காலம் சென்ற இசைக்கலைஞர் தண்டபாணி தேசிகர் ஞாபகார்த்த கச்சேரியில் இவர் பாடியிருக்கிறார். 'பாரிஸ்' நகரில். 'யுனெஸ்கோ' நிறுவனத்தின் 50வது நிறைவு விழாவில் பங்குபற்றி, இசையை வாரி வழங்கியிருக்கிறார். பரதநாட்டிய அரங்கேற்றங்களுக்கும் பாடி வருகிறார். மேற்கத்திய ஆங்கில இசைத்துறையுடன் இணைந்து, கீழைத்தேய இசையை இணைத்து, லண்டனில் எலிசபெத் அரசி மண்டபத்தில் பாராட்டுதல்களைப் பெற்றுள்ளார். கனடாவில் தமிழ்ப் பண்பாட்டுக் கழக விழாவில் இசைபொழிந்த, இவர் பலரின் மனங்களை தன்பால் ஈர்த்துள்ளார். 1990ல் லண்டனில் தயாரான, ஆங்கிலத் தொலைக்காட்சிச் சேவையொன்றின் 'SERENDIPITY' என்ற ஆங்கிலத் திரைப்படத்துக்கு, பின்னணி வழங்கி, இந்த முன்னணிக் கலைஞர் பலரின் மனங்களைக் கொள்ளை கொண்டார். 1994ம் ஆண்டில், ஷோபனா ஜெயசிங் அவர்கள் தயாரிப்பில் உருவான பி.பி. சி நடன நிகழ்ச்சியொன்றுக்கு சங்கீத கான சாகரத்தை இவர் பாடியிருக்கிறார். பல C.D, ஓடியோ நாடாக்களை இவர் வெளியிட்டுள்ளார். "மாரியம்மன் பாமாலை," "விம்பிள்டன் கணபதி," "திருத்தல தேனமுதம்," திருமுறைகள்," "யோகர் - சுவாமி பாடல்கள்," "திருக்குறள்" என்பன அவற்றுள் மிகவும் பிரபல்யமானவை. பத்ம ஸ்ரீ எம்.எல்.வசந்தகுமாரி, காயத்ரி ஆகிய இசைமேதைகள், லண்டனில் பாரதீய பவன் நிலையத்தில் இசைவிருந்தளித்த வேளையில், அவர்களுக்கு பக்கத்துணையாய் இருந்து, கஞ்சிரா, வாசித்ததை, பெரும் பேறாக எண்ணி, மகிழ்கின்றார்.

லண்டன் பல்கலைக் கழகத்தின் 'கோல்ட் சிமித்' கல்லூரியில், சங்கீத விரிவுரையாளராக (VISITING LECTURER IN INDIAN MUSIC) இவர் பணி செய்துள்ளார். 85ம் ஆண்டிலிருந்து, இளைய தலைமுறைக்காக, "ASIAN SCHOOL OF ARTS" என்ற கலைக்கழகத்தை நடாத்தி வருகிறார். இவருக்கு, 'கலைமாமணி' என்ற பட்டத்தை லண்டன் ஸ்ரீமுருகன் ஆலயமும், "சுர நய தேவன்" என்ற பட்டத்தினை ஒஸ்லோ சங்கீதக் கழகமும் அளித்துள்ளன. "இசை வள்ளல்" என்ற சிறப்புப் பெயரை கனடா தமிழ்ப் பண்பாட்டுக் கழகமும், "தமிழ் இசை இளவரசு" என்ற பட்டத்தை, தமிழ்நாட்டிலுள்ள சர்வதேச சங்கீத ஆராய்ச்சிக் கழகமும் வழங்கியுள்ளன. மாணிக்கம், இவர் பெயரில் மட்டும் இல்லை. இவரது இசையிலும் அது ஒளிவீசுகிறது!

தமிழகத்தின் பழம் பெரும் பத்திரிகையான 'கல்கி' வார (03.01.99) இதழில் இந்த இசை வித்தகரைப் பற்றி பதினெட்டு ஆண்டுகளுக்கு முன்னாள் எழுதிய குறிப்பை உங்களுடன் பகிர்ந்து கொள்கிறேன்.

"லண்டனில் பல்கலைக்கழகமென்றில் இந்திய இசை கற்பிக்கும் யோகேஸ்வரன், டி.வி.ஜியின் சிஷ்யர். வயது முப்பத்தொன்பது. ஸ்ரீலங்காவில் பிறந்தவர். படித்தது சி.ஏ. பிராக்டீஸ் பண்ணாமல். இசை கற்பிக்கப் போய் விட்டார். நாலு வருஷங்களாக சென்னையில் டிசம்பர் சீசனில் ஆஜராகி விடுகிறார். ஜெர்மனியைச் சேர்ந்த ஒரு ஃப்யூஷன் இசைக் குழுவிலும் இடம் பெற்றிருக்கிறார். நூறு நிகழ்ச்சிகளுக்கு மேல் வழங்கிய அனுபவம் உண்டு. இந்த வருஷம் மூன்று கச்சேரிகளுக்கு வாய்ப்புக் கிடைத்திருக்கிறது. போன வருஷம் 'ஹிந்து' விமர்சனத்தில் இவரை 'ரைசிங் ஸ்டார்' என்று குறிப்பிட்டதைச் சொல்கிறபோது. இவர் முகத்தில் சந்தோஷ சர்ஃப் அல்ட்ரா!"

ஈழத்தில் பிறந்து உலக நாடுகள் எங்கும் இசைப்பயணங்கள் மேற்கொண்ட இவரை, இப்போது ஜேர்மனி காந்தம் போல் இழுத்துப் படித்துக்கொண்டது. ஆமாம்! இவரின் வாழ்க்கைத் துணைவியார் ஜேர்மன் நாட்டைச்சேர்ந்த, ஜேர்மானிய இசைக்கலைஞராவார். இருவருமாக இணைந்து, பாடல்களை பாடிவருவதை நாங்கள் தொலைக்காட்சியூடாகக் கண்டு, களித்தோம். தொலைக்காட்சிப்பேட்டியில் ஜேர்மன் தனது இரண்டாவது நாடு என்று கூறும் பிரித்தானியக் குடியுரிமைபெற்ற இவர். பிரித்தானியாவை தற்போது மூன்றாவது நாடாகத் தள்ளியிருக்கின்றார். அரபிக், ஆங்கில மொழிகளிலும் இவர் பாடியிருக்கிறார். லண்டனில் நடைபெறும் தனது இசை நிகழ்வுகளுக்கு முன்பதாக, பெற்ற தாயைக் கரம் பிடித்து வந்து, பார்வையாளர் வரிசையில் அமரச்செய்யும் இவரது தாய்ப்பாசத்தை எப்படிக் குறிப்பிவது? 'ஈன்ற பொழுதினும் பெரிதுவக்கும் தன் மகனைச் சான்றோன் எனக்கேட்ட, தாய் என்ற வள்ளுவன் வாக்கைக் குறிப்பறிந்து செயற்படும் இவரை எப்படிப் பாராட்டுவது? இவர் பல்லாண்டு வாழ்க என்று வாழ்த்துகிறோம். ◆

# லண்டன் புதிய தமிழ் கவுன்சிலர்கள்

இங்கிலாந்திலுள்ள அனைத்து கவுன்சில்களுக்கான தேர்தல் கடந்த மே மாதம் 3ம் திகதி நடைபெற்றது. லண்டன் கவுன்சில்களுக்கான தேர்தலில் ஈழத்தமிழர்கள் போட்டியிட்டனர். கடந்த காலத்தில் போட்டியிட்டு கவுன்சிலர்களாகவும், மேயர்களாகவும் தெரிவானவர்களும் இந்தத் தடவையும் போட்டியிட்டார்கள். இவர்கள் பெரும்பாலோர் Labour, Liberal Democrat, Conservative கட்சி மூலம் போட்டியிட்டவர்களாவர். வெற்றி பெற்று கவுன்சிலராகத் தெரிவானவர்களில் ஒருவர் மேயராகவும் பதவி ஏற்றுள்ளார். வெற்றி பெற்ற லண்டன் தமிழ் கவுன்சிலர்கள் தொகுப்பு.

## கிங்ஸ்ரன் நகர மேயர் கவுன்சிலர் தயாளன்




கிங்ஸ்ரன் (Kingston upon Thanmes) மாநகரத்தின் புதிய மேயராக வைத்தீஸ்வரன் தயாளன் பதவி ஏற்றார். கடந்த 22ம் திகதி கிங்ஸ்ரன் கவுன்சிலில் நடந்த சிறப்பு வைபவத்தில் லிபரல் (Liberal Democrat) கட்சியைச் சேர்ந்த இவர், நகர பிதாவாக தெரிவு செய்யப்பட்டார். 2014ம் ஆண்டு முதல் தடவையாக கவுன்சிலராக வெற்றி பெற்றார். இது 2வது தடவைப் பதவிக்காலமாகும்.

ஈழத்தில் தெல்லிப்பழை மகாஜனா கல்லூரி பழைய மாணவரான இவர் 1970ம் ஆண்டு லண்டன் வந்து எலொக்ரோனிக் என்ஜினியராகப் பட்டம் பெற்று, 40 வருடங்கள் கணனித் துறையில் பொறுப்பான பதவி வகித்துள்ளார்.

கடந்த பல ஆண்டுகளாக தர்மஸ்தாபன அமைப்புகள் மூலம் தன் சமூக சேவையை பங்களித்து வருகிறார். 1986ம் ஆண்டு முதல் கிங்ஸ்ரன் தமிழ் பாடசாலையை உருவாக்கியவர்களில் ஒருவர். மகாஜனா பழைய மாணவர் சங்கம் 1987 ஆரம்பம் முதல் இவர் முக்கியமானவர். முக்கிய பதவிகளை வகிக்கும் இவர் போஷகர்களில் ஒருவர். TSSA என்ற தமிழ் பாடசாலைகள் விளையாட்டுச் சங்கத்திலும் முக்கியமான உறுப்பினர். தமிழரசுக் கட்சியின் ஆரம்பகால நிர்வாகச் செயலாளர் ரி.எம். சி.வைத்தீஸ்வரனின் புதல்வரான இவர், மனைவி லதா தயாளன். ஒரே மகள் மீரா மருத்துவ டாக்டர்.

ஈழத்துக்கு லண்டனில் பெருமை சேர்ப்பவர் தயாளன் என்று பெருமைப்படலாம். ◆

## கிங்ஸ்ரன் கவுன்சிலர் யோகன் யோகநாதன்



கிங்ஸ்ரன் கவுன்சிலராக ஐந்தாவது தடவையாக லிபரல் (LIBERAL DEMOCRAT) கட்சியிலிருந்து வெற்றி பெற்றுள்ள யோகன் யோகநாதன் (MBE) கடந்த 47 ஆண்டுகளாக வாழ்ந்து வருபவர். இங்கு வாழும் சகல இன மக்களின் அன்பைப் பெற்றவர். கிங்ஸ்ரன் கவுன்சிலராகவும், சமூக சேவையாளருமாக தன்னை அடையாளப்படுத்திக் கொண்டதற்கும் மதிப்பளிக்குமுகமாக மகாராணி யார் 2010ம் ஆண்டு டிசம்பர் 31ம்திகதி MBE பட்டமளித்துக் கௌரவித்தார். கிங்ஸ்ரன் நகர மேயராகவும் இவர் இருந்திருக்கிறார். இனிமையாகவும் இதமாகவும் பழகுகின்ற மனிதர் யோகன்.

## Southwark கவுன்சிலர் எலிஷா மான்



ஐந்தாவது தடவையாக சவுத்வோர்க் கவுன்சிலராக லிபரல் கட்சியிலிருந்து (Liberal Democrat) தெரிவு செய்யப்பட்டுள்ள மிஸ் மான் தாயகத்து தமிழ் உறவுகளையும் உயிராக நேசிப்பவர். Southwark நகரத்தின் மேயராகவும் ஒரு தடவை இருந்திருக்கிறார். Freeman of the city of London கௌரவத்தைப் பெற்ற (2009 முதல்) தமிழர் என்ற பெருமையும் இவருக்கு உண்டு. குறிப்பிடக்கூடிய விருதுகளையும் பெற்றிருக்கிறார். அமைதியாக சேவை செய்வது இவருக்குப் பிடித்தது.

## ஹறோ கவுன்சிலர்கள் லண்டன் பாபா - சசி தம்பதிகள்



'லண்டன் பாபா' சுரேஷ் கிருஷ்ணா - சசிகலா தம்பதிகள் ஹறோ கவுன்சிலர்களாக தொழிற் கட்சி (Labour) மூலம் மீண்டும் வெற்றி பெற்றுள்ளார்கள். 3வது தடவையாக சுரேஷும், 4வது தடவையாக சசியும் தெரிவாகியுள்ளார்கள். ஹறோ நகர மக்களுக்கு இன பாகுபாடற்ற முறையில் அவர்கள் இருவரது சேவையே தொடர்ந்து கவுன்சிலர்களாக வெற்றி பெறுவதன் ரகசியம். சுரேஷ் மேயராக பதவி வகித்து, தனித்துவமானவராக வலம் வந்து, ஈழத் தமிழருக்குப் பெருமை சேர்த்தார். இம்முறை சமூக ஒற்றுமை, குற்றவியல் துறை அமைச்சராக நியமிக்கப்பட்டிருக்கிறார். லண்டனில் பிரித்தானிய Labour கட்சி அரசியல் நீரோட்டத்தில் கலந்து இவர்கள் இயங்கினாலும், ஈழத் தமிழ் உணர்வோடும் உயிர்ப்போடும் பயணிப்பவர்கள். தாயக உறவை நெஞ்சோடு சுமப்பவர்கள்.

## Sutton கவுன்சிலர் பரமலிங்கம் விவேகானந்தா



சட்டன் (Sutton) கவுன்சிலுக்கு முதல் முறையாகத் தமிழர் ஒருவர் தெரிவு செய்யப்பட்டுள்ளார். கன்சர்வேட்டிக் (Conservative) கட்சியின் சார்பில் பரமலிங்கம் விவேகானந்தா (பரம் நந்தா) இந்தப் பெருமையைப் பெற்றுள்ளார்.

முன்னாள் பிரதமர் பிரேமதாசாவின் ஆலோசகர்களான பஞ்சலிங்கங்களில் ஒரு லிங்கமாகத் திகழ்ந்து, தற்போதைய மேல் மாகாண பொதுச் சேவை ஆணைக்குழு உறுப்பினரான பரமலிங்கத்தின் சிரேஷ்ட புதல்வரே கவுன்சிலர் நந்தா. யாழ். இந்துக்கல்லூரி பழைய மாணவரான இவர், லண்டன் M.B.A., பட்டதாரி. பிரசித்தி பெற்ற நயினாதீவு நாகபூஷணி அம்மன் ஆலயத்தின் தர்மகர்த்தாக்களில் ஒருவர் என்பது குறிப்பிடத்தக்கது.

## Red Bridge கவுன்சிலர் தவத்துரை ஜெயரஞ்சன்



Red Bridge கவுன்சிலுக்கு மூன்றாவது தடவையாக தவத்துரை ஜெயரஞ்சன் தெரிவு செய்யப்பட்டார். இரண்டாவது தடவை அவர் கவுன்சிலராகத் தெரிவு செய்யப்பட்ட பின்னர், அவர் துணை மேயராக, 2015 மே 14ம் திகதியில் பதவி ஏற்று, பொறுப்புகளை பொறுப்புடன் கவனித்தார். தான் சார்ந்த தொழிற்கட்சியின் (Labour) சார்பில் வட்டார முன்னேற்றத்துக்கு உழைத்து வருகிறார்.

## Brent கவுன்சிலர் கண நகீரதன்



கண நகீரதன் மூன்றாவது தடவையாக பிறென்ற் கவுன்சிலராக வெற்றி பெற்றுள்ளார். தொழிற்கட்சியைச் (Labour) சேர்ந்த இவர் ஒரு தடவை மேயராகவும் இருந்திருக்கிறார். தனது வட்டாரத்தில் உள்ள பிரச்சினைகளை அணுகி, அவற்றைத் தீர்த்து வைப்பதில் அக்கறையுள்ளவராகச் செயல்பட்டு வருகிறார்.

## லண்டனில் விழா கோலத்தில் நடைபெற்ற

# ‘இலண்டனில் தமிழர் திருமணங்கள்’


மங்கள விளக்கேற்றிய திருமதிகள்


பொன்.பாலா தம்பதிக்கு சித்தா தம்பதி கௌரவம்


மக்கள் கரகோஷத்துடன் நூலாசிரியர் ஏற்புரை

இலங்கை பத்திரிகை உலகில் நீண்டகாலம் பணியாற்றிய மூத்த பத்திரிகையாளர் கலாநிதி பொன் பாலசுந்தரம் அவர்களின், இலண்டனில் தமிழர் திருமணங்கள் நூல் வெளியீட்டு விழா சமீபத்தில் லண்டன் வூட்கேற் உயர் பாடசாலை மண்டபத்தில், பேர்மிங்ஹாம் பாலாஜி ஆலய தலைவர் டாக்டர் கே. சோமந்தரராஜா தலைமையில் நடைபெற்றது.

லண்டனில் தமிழர் திருமணமென்றால், எப்படி இருக்குமோ அப்படி திருமணத்தைப் பற்றிய இந்நூல் வெளியீட்டு விழா மண்டபமும் தமிழ் பெண்களும், ஆண்களும் நிறைந்த அழகு மண்டபமாக ஜொலித்தது.


‘ஆதவன்’ தொலைக்காட்சி ஒளிப்பரப்பாளர் எஸ்.கே. குணாவின் கணீரென்ற குரல் நிகழ்ச்சிகளை பார்க்கும் ஆவலைத் தூண்டுவதாக அமைந்தது. ஒன்பது ‘திருமதி’கள் வரிசையாக வந்து மங்கள விளக்கேற்றியது ஆனந்தக்காட்சி. தமிழ்த்தாய் வணக்கத்துடன் உரைகள் தொடர்ந்தன. என்.சச்சிதானந்தன் வரவேற்புரை நிகழ்த்தினார். பிரபல ஊடகவியலாளர் இளையதம்பி தயானந்தாவின் ஆய்வுரை சபையோரை மிகவும் கவர்ந்தது. நூலாசிரியரின் எண்ணங்களை மிக அழகாக தனக்கே உரிய பாணியில் எடுத்துக் கூறினார். ‘நாழிகை’ ஆசிரியர் மாலி மகாலிங்க சிவம் நூலாசிரியரின் பத்திரிகை துறை அனுபவத்தை புகழ்ந்துரைத்தார். எழுத்தாளரும், தொழிற்சங்கவாதியும், பத்திரிகையாளருமான ஐ.தி. சம்பந்தன் நூலாசிரியருக்கும் தனக்குமிடையிலான நட்பையும் பழைய நினைவுகளையும் மீட்டார். சட்டத்தரணி சிதம்பரப்பிள்ளை நூல் ஆசிரியரைப் பாராட்டிப் பேசினார். எழுத்தாளர் ச.சிறீரங்கன், ‘புதினம்’ ஆசிரியர் ராஜகோபால் உட்பட மற்றும் பலரும் பேசினார்கள்.


நூற்றுக்கணக்கானவர்கள் வரிசையாக மேடைக்குச் சென்று ஆசிரியரிடமிருந்து நூலைப் பெற்றுக் கொண்டனர்.

நிறைவான வாழ்வு வாழும் பொன் பாலசுந்தரம் இராஜேஸ்வரி தம்பதிக்கு மேடையில் அருகருகே அமர்த்தி அளிக்கப்பட்ட கௌரவம் கண்கொள்ளாக் காட்சி.

‘நாட்டியாலயா’ நடன ஆசிரியை ஷர்மினி கண்ணனின் மாணவிகள் நடனம் நல்ல விருந்து.


நூலாசிரியரின் ஏற்புரை அவர் எழுத்துப் போலவே இதமாக இருந்தது. கணக்காளர் கிருபானந்தன் நன்றி கூறினார். இரவு விருந்துடன் விழா நிறைவுபெற்றது. ■


ஐ.ரி. சம்பந்தன்


கிருபானந்தன் நன்றி



என். சச்சிதானந்தன்


ச. சிறீரங்கன்


திருமதி.பொன்பாலாவுக்கு Dr. கிரிஜா கௌரவம்


இளைய தம்பி தயானந்தா


முதல் பிரதிபெறும் குகபாலா



ஆங்கிலத்தில் கோகுலன்


கௌரவம்


சோமசுந்தராஜா


நூலாசிரியர்


வசந்தக்குருக்கள்



மகாலிங்கசிவம்


‘நாட்டியாலயா’ ஷர்மினி கண்ணன் மாணவிகளுக்கு உமா கிருபானந்தம் கௌவரம்


ஆயகி தவராஜகுமாரன்


சுஜீவன் கனகேஸ்வரனுக்கு கௌரவம்


கமலநாதக்குருக்கள்


கௌரவம்


கௌரவம்


மேடையில் பேச்சாளர்கள்


பார்வையாளர்கள்

# SRIKARPAHA VINAYAGAR TEMPLE

**2-4 Bedford Road, London E17 4PX, Tel:0208 527 3819, Email :katpakav@gmail.com**

## TEMPLE VACANCY

**Post Date:30/05/2018**
**Job Title: Religious Worker-Priest**
**Job Summary**
**Duties ,includes**

1. 1.keeping the deities housing and its drainage neat and tidy
2. 2.Making garlands
3. 3.Decorating the deities and making Pirasatham for the deities
4. 4.Actively involved in all Temple Festivals, Devotees wedding ceremonies

Remembrance ceremonies ,all conducted special emphasis on Saivaism(Tamil Naadu,Srilanka)

### Education And Experience

Properly qualified from a Veda Ahama School in India or Srilanka
Experience in a responsible capacity in reputed Temples
Working Knowledge of Hinduism with emphasis on Saivaism
Track record of participating in the planning and carrying out temple rituals
Homam ,Hindu weddings
Skills and competence required
Ability to build relationship and to work with religious workers from diverse backrounds
Ability to address on religious topics to devotees
Enthusiastic and positive attitude towards helping Devotees in needs
Hours:8AM to 2PM and 5PM to 930PM -6days in a week

**Remuneration: Negotiable: According to experience and qualification**

2 Year contract with 4 weeks paid annual leave per calendar year
Please send your CV to the above email
Job Title: Religious worker-NATHASWARAM & THAVIL MUSICIAN
Hours:8AM to 2PM and 5PM to 930 PM with 1day off in a week
Job Description: Perform Nathaswaram music during Hindu worship services every day
Perform nathaswaram music for Temple rituals and ceremonies ,provide assistance and
Engage in all religious activities of the temple
Perform Nathaswaram Music Kacheri (long Hours) during the Festival time and Chariot Festival
Perform Nathaswaram Music for Devotees wedding and other ceremonies

**Requirements:** Well Trained in Nathaswaram and Thavil Music
Certified From well known Musicians or Classical Music institutes
Experience in reputed Temples
Tamil speaking and Practicing Hinduism

**Salary: Negotiable but in line with U.K. Minimum Wages**
**Contract :2 Years with 4 Weeks paid Annual Leave**
Please send your CV to the above email
Katpakapathy.com




# மூன்றாவது தடவையாக கை புத்தக வடிவில் வருகின்றது

# வியாபாரம் 2018

**+ 44 7496 700 985**

| ஜெர்மனி | சுவிட்சர்லாந்து | பிரான்ஸ் | பிரித்தானியா |
|---|---|---|---|
| 0699 675 8134 | 044 508 7251 | 017 061 5703 | 0207 060 2077 |

ஜெர்மனியில் கடந்த இரண்டு வருடங்களாக தமிழர் நிறுவனங்கள், கோயில்கள், கலைஞர்கள், வியாபார நிலையங்கள், என்பவற்றின் தகவல்களைத் தாங்கி வந்த எமது "வியாபாரம்" கோர்வையானது இம்முறை ஜெர்மனி, சுவிட்சர்லாந்து, பிரான்ஸ், பிரித்தானியா ஆகிய நாடுகளை உள்ளடக்கி "வியாபாரம் 2018" ஆக 23.06.2018 இல் வெளிவரவுள்ளது என்பதை எமது மக்களுக்கு மகிழ்வுடன் அறியத்தருகிறோம்.

"வியாபாரம் 2018" தகவல் தொகுப்பு கோவையினை நீங்கள் இலவசமாக 24.06.2018 ஆம் திகதியன்று ஹம் காமாட்சி அம்பாள் ஆலய தேர்த்திருவிழாவன்றும் அதனைத்தொடர்ந்து வரும் நாட்களிலும் ஹம் காமாட்சி அம்பாள் ஆலயத்தில் பெற்றுக் கொள்ளலாம்.மேலும், தொடர்ந்து வரும் நாட்களில் பிரசித்தி பெற்ற ஆலயங்களிலும் வியாபார தாபனங்களிலும் பெற்றுக் கொள்ளலாம்.

**Tamildirectory.com** **admin@tamildirectory.com**

லண்டன் ராஜாத்தி



# கண்ணால் காண்பதும் பொய் காதால் கேட்பதும் பொய்...

**அது என்னவோ தெரியாது நமக்கு நம் மீது உள்ள குறைகள் ஒருபோதும் குறைகளாகவே தெரிவது இல்லை.**

கண்ணால் காண்பதும் பொய் காதால் கேட்பதும் பொய் தீர விசாரிப்பதே மெய் என்ற கூற்றை நாம் அனைவரும் அடிக்கடி கேட்டிருக்கிறோம். இதில் சந்தேகமே இல்லை. ஆனால், இதன் அர்த்தத்தை எப்போதாவது உணர்ந்து அதை நம் வாழ்க்கையில் அப்பியாசித்து இருக்கிறோமா?

ஊர் விட்டு ஊர் வந்தாலும் நாங்கள் எங்களின் கலாச்சாரம் மற்றும் பழக்க வழக்கங்களை விட்டுக் கொடுக்காமல் வாழ்கிறோம். தேடித் தேடி நமெக்கென்று தமிழ் உறவுகளையும் நட்புக்களையும் வளர்த்துக் கொள்கிறோம். ஆனால், இந்த உறவுகளிலும் நட்புகளிலும் தூய்மை மற்றும் உண்மை என்பது எவ்வளவு தூரம் உள்ளது. இந்தக் கேள்விக்கு என்ன காரணம்?

என் வேலையிலும் சரி வெளியே செய்யும் மற்ற காரியங்களிலும் சரி அடிக்கடி தமிழ் மக்களை சந்திக்கும் சந்தர்ப்பம் ஏற்படும். அவர்களோடு உரையாடும் வேளைகளில் அவர்கள் எல்லோரும் கூறும் ஒரு விடயம் - "எங்கட வீட்டுப் பிரச்சனைகளை நாங்க எங்கட தமிழ் சொந்தபந்தங்களோட மட்டும் பேச முடியாது அவ்வளவுதான். உள்ளுக்குள்ள எதையோ வைச்சுக்கொண்டு வெளிய ஒருமாதிரி கதைப்பார்கள்"

நாம் நம் பிரச்சனைகளை கூறினால் அவர்கள் அதை ரகசியமாய் வைத்திருக்க மாட்டார்கள். மற்றவர்களோடு உடனே அதை பகிர்வார்கள். அதுமட்டும் இல்லாது பிரச்சனை என்னவென்று முழுமையாக அறியாமலே அதற்கு காது மூக்கு வைத்து ஊரெல்லாம் பரப்பி திரிவார்கள். ஒன்றும் தெரியாமலே எங்களை நியாயம் தீர்த்து விடுகிறார்கள். இப்படிப்பட்டவர்களை நம்பி எப்படி நாம் கதைப்பது?

இவர்கள் கூறிய இந்தக் காரணங்கள் எல்லாமே யோசிக்க வேண்டியவைகள். நம் தமிழ் மக்களுக்கு புரிந்துணர்வு என்பது எவ்வளவு தூரத்துக்கு உள்ளது? நானும் நீங்களும் மற்றவர்களை வெகு சுலபமாய் நியாயம் தீர்த்து விடுகிறோமா?

அப்படியென்றால் நம்மை சுற்றி இருக்கும் உறவுகள் எல்லாம் நிஜம் இல்லையா? ஒவ்வொரு சனி ஞாயிறும் ஏதாவது ஒரு'பார்ட்டி', நிகழ்ச்சி, கொண்டாட்டம் என்று எல்லோருமே கூடி ஒன்றாக நேரம் செலவிடுகிறார்கள். இதில் கொஞ்சம்கூட சந்தேகமே இல்லை. ஆனால், வீட்டில் ஒரு சிக்கல் ஏற்பட்டு விட்டால் யாரோடு இதைப்பற்றி பேசலாம், பேசலாமா அல்லதுமறைத்து விடுவோமா என்றெல்லாம் யோசிக்கிறார்கள் நம் மக்கள். தினமும் உறவாடும் உறவுகளோடு பகிருவதற்கே இந்தத்தயக்கம் என்றால் அது யோசிக்க வேண்டிய ஒரு விடயம் அல்லவா?

ஒரு ரயில் பயணம் - ஒரு அப்பாவும் 15 வயது மகனும் ரயிலில் ஏறி அமர்ந்தார்கள். மிகவும் பிஸியான நேரம் அது. கூட்டம் கொஞ்சம் அதிகமாகவே இருந்தது. இவர்களுக்கு வசதியான இடம் கிடைத்து விட்டது. மகன் ஜன்னல் பக்கத்தில்



உட்காரவும் அப்பா அவனுக்கு பக்கத்தில் அமர்ந்து கொண்டார். அப்பாவின் முகத்தில் ஒரு வித களைப்பு தென்பட்டது. பயணிகளை ஏற்றிக் கொண்டு ரயில் மெதுவாய் ஊர்ந்து செல்லத் தொடங்கியது.

ரயில் சத்தமிட்டபடியே வேகம் கட்டி ஓடத் தொடங்கியதும் அந்த மகனுக்கு மிகவும் மகிழ்ச்சி. ஒரே ஆரவாரத்தோடு ஜன்னலுக்கு வெளியே பார்த்து ரசித்தான். கையை நீட்டி வானத்தில் கடந்து சென்ற ஒரு விமானத்தை காட்டி "அப்பா பிளேன்" என்று கூறினான். பின்னர் மரங்கள் எல்லாம் பின்னோக்கி செல்வதை கண்டு - "அப்பா மரங்கள் எல்லாம் எங்களுக்கு பின்னாலே செல்கிறது" என்று கூறினான். ஒரு பாலத்தை கண்டு "அப்பா இது எவ்வளவு பெரிய பாலம்" என்று சத்தமாகவே கூறினான். நீல நிற வானத்தை பார்த்து "அப்பா வானம் நீல நேரம்" என்று கூறினான். பறவைகளையும் விலங்குகளையும் பூத்துக் குலுங்கும் பூக்களையும் பார்த்து அதிசயப்பட்டான்.

இந்த தந்தைக்கும் மகனுக்கும் முன்னால் இருந்த ஆசனத்தில் ஒரு தம்பதியினர் அமர்ந்து இருந்தார்கள். இந்தப் பையன் சத்தமாய் பேச பேச ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள்.

அப்போது மழை பெய்யத் தொடங்கியது. அந்த மழைத் துளிகள் அந்த இளம் வாலிபனின் கையில் பட்டதும் அவனுக்கு அவ்வளவு சந்தோசம். அப்பா மழை பெய்கிறது என்று கூக்குரலிட்டான். அப்பாவோ அவனைப் பார்த்து ரசித்தபடியே மௌனமாய் கண்களை மூடிக் கொண்டார்.

முன்னால் அமர்ந்து இருந்த தம்பதிகள் மெதுவாய் அந்த தந்தையின் தோளை தட்டினார்கள். நாங்களும் இந்த ரயிலில் ஏறியதில் இருந்து பார்க்கிறோம். உங்களின் மகன் ஒரு சிறு குழந்தைபோல் நடந்து கொண்டு இருக்கிறாரே. அவரை ஒரு நல்ல டாக்டரிடம் கொண்டு சென்று சிகிச்சை பெறக்கூடாதா என்று கேட்டார்கள்.

அந்த தந்தை ஒரு சில வினாடிகள் தயங்கினார். பின்னர் சிரிப்போடு அவர்களைப் பார்த்து கூறினார் "ஆம் நாங்கள் இப்போது மருத்துவமனையில் இருந்துதான் வீடு நோக்கி செல்கிறோம். பிறவியிலேயே குருடாய்ப் பிறந்த என் மகனுக்கு இன்றுதான் வாழ்க்கையில் முதல் முறையாக கண்பார்வை கிடைத்தது" என்றார். அவன் வானத்தையும் மரம் செடி கொடிகளையும் பூக்களையும் இன்றுதான் முதன் முறையாய் பார்க்கிறான் என்றார்.

இந்தக் கதை இத்தோடு முற்றுப் பெற்றது.

இந்தக் கதையின் மூலம் என்ன கற்றுக் கொள்ளலாம்? நீங்கள் அனைத்து உண்மைகளையும் தெரிந்து அறியும் வரை முடிவுகளுக்கு வராதீர்கள்.

நாம் வெகு சீக்கிரத்தில் மற்றவர்களில் உள்ள குறைகளை கண்டு அவற்றை பெரிதுபடுத்தி அதை மற்றவர்களிடம் பரப்பி -இப்படியா நாம் வாழ்கிறோம்? நாம் ஒவ்வொருவரும் நம்மை நாமே கேட்டுக்கொள்ள வேண்டிய கேள்வி இது. அவர் இப்படி இவர் இப்படி, அந்தக் குடும்பம் இப்படி.... இப்படியே எத்தனை காலம்தான் நாம் மற்றவர்களை பற்றி பேசிக்கொண்டிருக்கப்போகிறோம்?

அது என்னவோ தெரியாது நமக்கு நம் மீது உள்ள குறைகள் ஒருபோதும் குறைகளாகவே தெரிவது இல்லை.

ஒருவரை பற்றி அவதூறாய்ப் பேச முதலில் சற்று யோசியுங்கள். ஒரு நாணயத்துக்கு இரண்டு பக்கம் உண்டு என்று சொல்வார்களே. அதை கொஞ்சம் நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். கண்ணால் காண்பதும் பொய் காதால் கேட்பதும் பொய் தீர விசாரித்து அறிவதே மெய் - அதையும் கொஞ்சம் நினைவில் வைத்துக் கொள்ளுங்கள்.

ஒவ்வொருவரும் வாழ்க்கையில் ஏதாவது ஒரு சுமையை சுமந்து கொண்டு தான் வாழ்கிறார்கள். அப்படியிருக்க நாம் ஏன் மற்றவர்களை கொஞ்சம் புரிந்து கொள்ளக் கூடாது? ஏன் எல்லாவற்றையுமே தவறான கண்ணோட்டத்தோடு நோக்க வேண்டும்? சற்றே மாறுபட்டு சிந்தித்தால் என்ன?

இறுதியாக உள்ளத்தில் எழுந்த வார்த்தைகள்
இவைகளே - உண்மையுள்ளவைகளெவைகளோ,
ஒழுக்கமுள்ளவைகளெவைகளோ,
நீதியுள்ளவைகளெவைகளோ,
அன்புள்ளவைகளெவைகளோ,
நற்கீர்த்தியுள்ளவைகளெவைகளோ, புண்ணியம்
எதுவோ, உதவி எதுவோ அவைகளையே
சிந்தித்துக்கொண்டிருங்கள்.

# போகிற போக்கில்...



ஏ.ஜே.ஞானேந்திரன்

## கிழிசல் நாகரீகம்



உங்கள் கைவசம் 123 பவுண்ட்ஸ்-அதாவது நம் பணத்தில் சொல்வதானால் சுமாராக 25,000 ரூபா செலவிடத் தயாராக இருந்தால், நீங்களும் இந்த ஜீன்ஸ் அணிந்து , நவநகாரீக யுவதிகளில் ஒருத்தியாக, தெருக்களில் வலம் வரலாம்.

வெட்கம் கெட்டதுகள் என்று தொடங்கி, வேறு பல பொல்லாத வார்த்தைகளால் எவராவது திட்டி, காறித் துப்பினால் அதற்கு நாங்கள் பொறுப்பாளி அல்ல.

இதற்கு எக்ஸ்ட்றீம் கட் அவுட் ஜீன்ஸ் *Extreme Cut Out Jeans* என்றொரு பெயரும் வைத்திருக்கிறார்கள். முன்பெல்லாம் கிழிசல் ஜீன்ஸ் அணிந்து திரிந்த பிச்சைக்கார நாகரீகம், இப்பொழுது இப்படியொரு ‘அழகான‘ நிலைக்கு மாறியிருக்கிறது.

எரிக்கும் வெயிலுக்கு குளிர்மை தேடுகிறார்கள் போலும்......

## நீட்டுப் பாவாடையிலிருந்து குட்டைப் பாவாடையா?



“மைக்ரோ அவன்” நமக்கு புதிதான ஒன்றல்ல. ஆனால், மைக்ரோ மாளிகைகள் பற்றி அறிந்திருக்கிறீர்களா? பணத்தில் புரள்பவர்கள் பிரமாண்டமான மாளிகைகளைக் கட்டியெழுப்புவது, ஊரறிந்த சங்கதி. ஹாலிவுட் நடிகர்கள், பொப்பிசைப் பாடகர்கள் என்று பலர் அமெரிக்காவில் பணத்தில் புரள்பவர்கள். இவர்கள் வீடுகளைப் பராமரிக்கவே பல வேலைக்காரர்கள் தேவைப்படும்.

இபபொழுது இந்தப் பணக்கார்களின் மோகம் மைக்ரோ பங்களாக்களில் திரும்பியிருப்பதாகச் செய்திகள் வெளிவந்திருக்கின்றன. வீடு கட்டுதலில் இந்தப் பெயர் புதிதல்ல. 400 சதுர அடிக் காணிக்குள் அடங்கக் கூடியதாக , மைக்ரோ அப்பார்ட்மென்டுகள் கட்டப்பட்டிருக்கின்றன.

இப்பொழுது புதிதாகக் கிளம்பியுள்ள செய்தி ஒன்றின்படி, 4042 சதுர அடி விஸ்தீரணத்திற்குள், அமெரிக்காவின் புளோரிடா நகர் பாம் பீச்சிலிருந்து 30 நிமிட கார் ஓட்டத்தில் வந்தடையக்கூடிய இடத்தில் அதிஆடம்பர மைக்ரோ மாளிகையொன்று கட்டும் வேலை நடந்து வருகிறதாம். 10 மில்லியன் டொலர் முதலிடக்கூடிய , குறைந்த ஆள் வசதியுடன் நிர்வகிக்கக் கூடிய ஒரு ஆடம்பர வீட்டைத்தான் இப்பொழுது கட்டிக் கொண்டிருக்கிறார் பிராங் மக்கினி என்பவர்.

முன்பெல்லாம் பல மில்லியன் டொலர் தொகையை வாரியிறைத்து சமுத்திரங்களை எதிர்த்தாற்போல பிரமாண்டமான வீடுகளைக் கட்டியவர்கள் இப்பொழுது மியாமியில் மாடிக்குடியிருப்புகளை ஒரு சதுர அடிக்கு 2000 அல்லது 3000 டொலர்கள் என்ற விலையில் வாங்கி வருகிறார்கள். இவர்கள் மியாமி பீச்சிலிருந்து பாம் பீச்சுக்கு வந்தால் , இப்படியான வீடுகளை வாங்க முடியும் என்கிறார்

இவை சிறியன என்ற பெயரோடு அறிமுகமானாலும், ஆடம்பரத்துக்கு இங்கே பஞ்சம் இராது. மூன்று படுக்கை அறை, நான்கு குளியல் அறை, இதைவிட வெளிக் குளியலுக்காக , மரங்கள் வளர்க்கப்பட்ட இரண்டாம் மாடிக் குளியலறை இது தான் இவரது மைக்ரோ மாளிகை.

இனிவரும் காலங்களில், இவர்தான் பணக்காரர்களின் பிரியமானவராக இருப்பாரோ?

## இந்த வான்கோழி மயிலாகுமா?



இங்கே ஒரு 8 வயதுப் பையன், தினசரி 4 மணி நேரம் தன்னைக் கடும் பயிற்சிக்கு உட்படுத்தி வருகிறான். ஏன் தெரியுமா? தானும் உலகறிந்த இன்னொரு புரூஸ் லீ ஆக வேண்டும் என்ற ஆசை இவனுக்கு! இவனும் வான்கோழியா?

அப்படிச் சொல்ல முடியவில்லை. இவனது கடும்பயிற்சி இவனுடலை அடியோடு மாற்றியமைத்துள்ளது. இரண்டு மகாத்மா காந்திகள் இருக்க முடியாது. ஆனால், இன்னொரு கோட்சேயாக இருக்காமல், நான் காந்தி போலாக வேண்டும் என்ற உயர்ந்த நோக்குடன் அவர் வாழ்முறையைப் பின்பற்றுவதில் என்ன தவறு இருக்கின்றது?

இந்தச் சிறுவன் பெயர் இமாய். ஜப்பானின் நாறா என்னும் பிரதேசத்தைச் சேர்ந்தவன். 1972இல் வெளியாகிய புரூஸ் லீயின் திரைப்படம் ஒன்றைப் பார்த்து விட்டு, 3 வருடங்களுக்கு முன்பு, தானும் ஒரு புரூஸ் லீ ஆக வேண்டுமென்ற ஆசையை தன் மனதில் விதைத்தவன்!

இவனை இப்பொழுது உலகம் அடையாளம் கண்டு கொண்டிருக்கின்றது. தொலைக்காட்சி நிகழ்ச்சிகளில் பங்குபற்றி, இவன் அதீத திறமைக்கு அங்கீகாரமும் கிடைத்திருக்கின்றது. இந்தப் புகழின் போதை தலைக்கேறாமல், தன் அபிமான புரூஸ் லீ தேர்ச்சி பெற்ற மார்ஷல் கலையில் போதிய பயிற்சி பெறுவதில் முனைப்பாக இருக்கிறான் இந்த 8 வயதுச் சிறுவன்.

தினமும் பாடசாலைக்குச் செல்வதன் முன்பாக 6 மணிக்கு படுக்கையிலிருந்து, எழுந்து , ஒன்றரை மணி நேரப் பயிற்சியில் ஈடுபடுவதாக இந்தச் சிறுவனின் தந்தை கூறுகிறார். பாடசாலையிலிருந்து திரும்பி வந்ததும், ஒரு மணி நேரம் ஓட்டப் பயிற்சி!

முகநூலில் இவனைச் சுற்றி 2,90,000 ஆதரவாளர்கள் வட்டமடிக்கிறார்களாம். இதன் பிறகு கால்களை, கைகளை அசைத்து ,ஆட்டி 2 மணி நேரம் “அடிகளுக்கான” பயிற்சி. மொத்தம் நான்கரை மணிநேரப் பயிற்சி!

முளையிலே தெரிகின்றது விளையும் பயிர்!!!!!! ■

## நாடகமன்றோ நடக்குது...

சில நிகழ்வுகள் எப்படி இது சாத்தியப்பட்டது என்று நம்மைப் பெரிதாக வியக்க வைப்பதுண்டு. அப்படி ஒரு நிகழ்வுதான் இந்த “டாக்டர் நாடகம்” . இந்த நாடகத்தை அரங்கேற்றியது ஒரு 19 வயது இளைஞன் என்று அறியவரும்போது, நாம் பிரமிப்பின் எல்லைக்குப் போய்விடுகிறோம். கழுத்தில் ஒரு ஸ்டெதெஸ்கோப்பை மாட்டிக் கொண்டு, வெள்ளை அங்கியையும் அணிந்து கொண்டு, டாக்டர்களோடு ஒரு டாக்டராக ஒருவன் 5 மாதகாலம், நாடகமாடி இருக்கிறான் என்பது நம்மை அதிர வைக்கின்றது.

இவனுக்கோ எந்தவித மருத்துவப் பயிற்சியும் கிடையாது. இந்தியாவிலேயே மிக மதிப்புள்ள கௌரவமான மருத்துவ நிலையங்களில் ஒன்றான இங்கு, தேர்ச்சி பெற்ற மருத்துவர்கள், தாதிகள் நடுவில், தானும் ஒரு மருத்துவனாக 5 மாத காலத்தை இவனால் எப்படி ஓட்ட முடிந்துள்ளது?

புதுடில்லியிலுள்ள அகில இந்திய மருத்துவ விஞ்ஞான நிலையம் மருத்துவ சேவையில் ஒரு முன்னணி நிலையமாகத் திகழ்கின்றது. டொக்டர் அட்னான் குராம் என்ற பெயர் கொண்ட இவன் எந்தவித மருத்துவப் பயிற்சியோ அல்லது கல்வித் தகைமையோ இல்லாதவன். ஊழியர்களின் சம்பளப் பட்டியலிலும் இவன் பெயர் இல்லை. இன்ஸ்டாகிராமில் தன்னை டொக்டர் அட்னான் குராம் என்று வெளிப்படுத்திக் கொண்டு, மருத்துவர்களுக்கிடையே அடிக்கடி இடம்பெறும் பல்வேறு நிகழ்வுகளில் இவன் கலந்து கொண்டிருக்கிறான்.

மருத்துவமனை தங்குநர் மருத்துவர்கள் அமைப்பின் தலைவரான ஹர்ஜித் சிங் , ஹிந்துஸ்தான் ரைம்ஸ் பத்திரிகைக்கு அளித்த பேட்டியொன்றில் சம்பந்தப்பட்ட இளைஞன் அங்குள்ள மருத்துவர்களிடம் தன்னை வெவ்வேறு விதங்களில் அறிமுகப்படுத்தியிருக்கிறான் என்று கூறியிருக்கிறார். எப்படி இவன் எல்லா மருத்துவர்கள் கூட்டத்திலும் சமூகமளிக்கிறான், எப்படி இவனுக்கு நேரம் கிடைக்கிறது என்று தாம் வியந்ததாகக் கூறியிருக்கிறார்.



ஆள்மாறாட்டக் குற்றச்சாட்டு செய்தவன் என்று பொலிஸாரிடம் கைதாகி இருக்கும் இவன் , விசாரணைகளின் போது கதைகளைத் திரித்து, நேரத்துக்கு ஒரு கதை சொல்லி வருவதாகக் கூறப்படுகின்றது.

உனக்கு ஏன் இந்தத் தேவையற்ற வேலை என்று கேட்கப்பட்டபோது, தான் விரும்பியே அதைச் செய்ததாகவும், ஒருநாள் நான் ஒரு டொக்டராவேன் என்றும் இந்த இளைஞன், விசாரணையில் கூறியிருக்கிறான்.

பொலிஸார் இவன் மருத்துவ அறிவால் அதிர்ந்து போயிருக்கிறார்கள்..

இன்றைய நாடகம் இவனுக்கு நாளைய நிஜமாகுமா?

காகம் அன்னநடை நடக்கப் போய் தன் நடையும் இழந்ததாம் என்று கேலியாகச் சொல்வார்கள். “கான மயிலாடக் கண்டிருந்த வான்கோழி தானும் அதுவாகப் பாவித்துத் தானுந்தன் பொல்லாச் சிறகை விரித்தாடினார் போலுமே கல்லாதான் கற்ற கவி ” என்ற மூதுரை கவி வரிகள் இதையே அழகாகச் சொல்கின்றன. ■




ஈழத்தின் தமிழ் மகள் ரவீனா என்ற 14வயது சிறுமியின் ஆற்றல் நம்மை எல்லாம் பெருமைப்பட வைக்கிறது. லண்டனில் லூயிஷியம் பகுதியில் வாழும் ரவிராஜ் தம்பதியின் புதல்வி இவர்.

பிரிட்டனில் நடைபெற்ற Disney Auditionல் 500 பேர் பங்கு கொண்ட போட்டியில், பாட்டு, நடிப்பு ஆகிய இரண்டிற்கும் தெரிவானார். இதன்மூலம் அமெரிக்காவுக்குச் சென்று 1500 பேர் பங்கு கொண்ட இளம் திறனாளிகள் போட்டியிலும் வென்றார்.

உலகத்தின் பல பாகங்களிலும் இருந்து வந்த முகவர்களின் தெரிவுப் போட்டியில் ஆறு வேறுபட்ட முகவர்களினால் ரவீனா பாடலுக்கும் நடிப்புக்கும் தேர்ந்து எடுக்கப்பட்டார். இதில் ஒரு முகவரின் அழைப்பில் மீண்டும் அமெரிக்கா சென்று, தனது முதலாவது தனி ஆங்கிலப் பாடலான 'சுப்பர் ஸ்டார்' வெளியிட்டார். உலகப் புகழ் இசை அமைப்பாளர் Andrew Lane இன் இசை அமைப்பில் பாடி, பதிவாக்கி, புகழ் பெற்றவர்.

ஆறு வருடங்களுக்கு முன் இங்கிலாந்தில் நடந்த ஒலிம்பிக் போட்டி விழாவில் குட்டியாக ரவீனா இருந்த போது, Cycle Song பாடிய மாணவர்களில் ரவீனாவும் ஒருவர். அவரது பாடல்கள் Raveena - Sing 03, Raveena Ravi youtube Link இல் வெளிவரவுள்ளன. சபாஷ் ரவீனா!

*- வி. கணேசமூர்த்தி*

# லண்டனில் தமிழ் பட்டதாரி பரீட்சை
# தமிழக பேராசிரியர் பயிற்சி



தமிழ்நாட்டில் உள்ள கோயம்புத்தூர் பாரதியார் பல்கலைக்கழகம், தஞ்சாவூர் தமிழ் பல்கலைக்கழகம் மூலமாக பி.ஏ., எம்.ஏ., தமிழ் பட்டப்படிப்புகளை இங்கிலாந்திலுள்ள தமிழர்கள், லண்டன் மாநகரில் உள்ள நிலையங்களில் சேர்ந்து படித்து இங்கேயே தேர்வினை எழுதி பட்டங்களைப் பெறக் கூடிய வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இதுவரை 50க்கு மேற்பட்டோர் பி.ஏ., எம்.ஏ., தமிழ் பட்டதாரிகள் என்ற தகுதியைப் பெற்றுள்ளனர். இத்தகைய பாடக்கல்வி பாடங்களை எழுதக்கூடிய தேர்வர்களுக்கு வருடத்தில் இரண்டுமுறை (மே மற்றும் நவம்பர்) தொடர்பு வகுப்புகளை லண்டனிலும், மற்றும் தமிழ்நாட்டிலிருந்து வருகைதரும் பேராசிரியர் கலாநிதி. இரா. சந்திரசேகரன் உரியமுறையில் ஐயங்களை நிவர்த்தி செய்து பயிற்சி அளித்து வருகிறார். இவர் தமிழ்கல்வியைப் போதிப்பதில் 18 ஆண்டுகள் அனுபவம் பெற்றவர். இவர் தமிழ் இலக்கியத்தில் முதுகலை, எம்.ஃபில்., மற்றும் இரண்டு கலாநிதி பட்டங்களோடு, முதுகலை வரலாறு, சமூகவியல், சமயம், அரசியல் ஆகிய பட்டங்களையும் பெற்றுள்ளார்.

மேலும் இங்கு பயிலும் பட்டதாரிகளுக்கு ஏற்படும் ஐயங்கள் விளக்கங்கள் ஆகியவற்றை தமிழகத்திலிருந்தே கற்பித்து வருவது கூடுதல் சிறப்பாகும்.

லண்டனில் கடந்த மே மாதம் பேராசிரியர் சந்திரசேகரன் இந்தப் பணியை முடித்துக் கொண்டு தமிழ்நாடு திரும்பினார். இனிவரும் நவம்பரில் லண்டன் திரும்புகிறார்.

தாயகத்தை விட்டு இங்கிலாந்து மற்றும் ஐரோப்பிய நாடுகளில் புலம்பெயர்ந்து வாழ்ந்து வரும் தமிழர்கள் தங்களின் மொழி, இலக்கியத்தைக் கற்பதற்கு பெரும் இடைவெளி ஏற்பட்டிருப்பதை அறிவார்கள். வார இறுதி நாள்களில் தமிழ்ப் பாடசாலைகள் மூலம் அடிப்படை தமிழ்மொழி அறிவினையும், கலைகளையும் குழந்தைகளுக்கு கற்றுக் கொடுத்து வருகின்றனர். ஆனால், தாயகத்தில் தமிழ்க்கல்வியை இடையில் விட்டு வந்தவர்களின் கனவினை நிறைவேற்றவும், மற்றவர்களின் உயர்கல்வி பயில வேண்டும் என்ற எண்ணத்தை நிறைவேற்றிடவும் உரிய வாய்ப்புகள் இங்கு இல்லை. இத்தகைய நிலையைப் போக்கி, லண்டன் ஐரோப்பிய நாடுகளில் வாழ்ந்து கொண்டே தமிழ் இலக்கியத்தில் பி.ஏ., எம்.ஏ., போன்ற பட்டங்களைப் பயில வழிவகையினை 2010 ஆம் ஆண்டு தொடங்கி இன்றுவரை நிகழ்த்தி வருகின்றனர். தமிழ்நாட்டில் உள்ள கோயம்புத்தூர் பாரதியார் பல்கலைக்கழகம், தஞ்சாவூர் தமிழ்ப்பல்கலைக்கழகம் மூலமாக பி.ஏ., எம்.ஏ., தமிழ் பட்டப்படிப்புகளை ஐரோப்பிய நாடுகளில் உள்ள தமிழர்கள் இலண்டன் மாநகரில் உள்ள படிப்பு மையங்களில் சேர்ந்து படித்து இங்கேயே தேர்வினை எழுதி பட்டங்களைப் பெற்றுள்ளார்.

இதுவரை 50க்கு மேற்பட்டோர் பி.ஏ., எம்.ஏ., தமிழ் பட்டதாரிகள் என்ற தகுதியைப் பெற்றுள்ளனர். மேலும் 50க்கு மேற்பட்டோர் தற்போது பயின்றும் வருகின்றனர். தேர்வர்களுக்குத் தேவையான பாடநூல்கள் மற்றும் அனைத்து பிற தொடர்பு நூல்களையும் அளிக்கின்றனர். வருங்காலத்தில் ஐரோப்பிய நாடுகளில் ஏராளமான தமிழ்ப்பட்டதாரிகளை உருவாக்க வேண்டும். இவ்வாறு உருவாகும் பட்டதாரிகள் வருங்காலத்தில் இளம்சிறார்களுக்கு தமிழ்மொழி இலக்கியங்களை முறையாக கற்பிப்பதற்கான வழிகளை ஏற்படுத்தித்தருவார்கள் என்று நம்பலாம்.

**தொடர்பு: 07958 408280**

***Email: joseph.vilvaraj@gmail.com***

**7ம் பக்கத்தின் தொடர்ச்சி**



கூட்டம். ஏதோ ஓர் இடத்தில் அவர்களை முடக்குகிறார்கள். எங்கே அடி விழுகிறது, எத்தனை பேர் அடிக்கிறார்கள் என்ற கணக்கெல்லாம் இல்லாத காட்டு மிராண்டித்தனமான தாக்குதல். ஓர் இடத்தில் 16 வயது சிறுவனைச் சூழ்ந்துகொண்டு 10 காவலர்கள் தாக்குகிறார்கள். இந்தச் சூழல் சற்றும் புரியாமல் அப்பாவித்தனமாகத் தன் வாகனத்தில் அந்தச் சாலையைக் கடக்கும் ஒருவரை இழுத்துப் போட்டு அடிக்கிறார்கள். திடீரெனத் துப்பாக்கி சுடும் சத்தம் கேட்கிறது.

ஒரு காவல்துறை உயரதிகாரி வந்து, “யார் மீதோ இருக்கும் கோபத்தை ஏன் சிறுவனிடம் காட்டுகிறீர்கள்?” என்று கோபத்துடன் அந்தக் காவலர்களிடம் சொல்லிவிட்டு நகர்கிறார். அந்தச் சிறுவனை அடித்துக்கொண்டிருந்த காவலர் கூட்டம் அதன்பிறகே ஓய்ந்து நகர்கிறது. அடித்த அடியில் ரத்தம் ஒழுக, ரோட்டோரத்தில் நகர முடியாமல் சுருண்டு கிடக்கிறான் அந்தச் சிறுவன்.

இந்தச் சம்பவம் நடந்து ஒரு மணி நேரத்துக்குள்ளாகவே, அரசு மருத்துவமனைக்கு மிக அருகிலிருக்கும் அண்ணா நகர் பகுதியில், மதிய உணவுக்கு வீட்டுக்குச் சென்றுகொண்டிருந்த 22 வயது இளைஞன் காளியப்பனைச் சுட்டு வீழ்த்தியது காவல்துறை. உடனடியாக காளியப்பனின் சடலம் பிணவறைக்குக் கொண்டு செல்லப்பட்டது. அவருக்கு என்ன ஆனது என்பதே தெரியாமல், பதற்றத்துடன் அரசு மருத்துவமனைக்கு வந்தது அவரது குடும்பம். மருத்துவமனை முழுவதும் நூற்றுக்கணக்கான 'காக்கி'களால் நிறைந்திருக்க, பல மணி நேரம் என்ன நடக்கிறது என்பதே அவர்களுக்குப் புரியவில்லை. நீண்ட நேரம் கழித்து அவர்களுக்கு, “காளியப்பனுக்கு வயிற்றுப் பகுதியில் குண்டு பாய்ந்திருக்கிறது. மருத்துவமனைக்குக் கொண்டு வருவதற்கு முன்பே அவர் இறந்துவிட்டார்” என்ற தகவல் தெரிவிக்கப்பட்டது. மொத்தக் குடும்பமும் போலீஸ்காரர்களின் கூட்டத்துக்கு நடுவே புகுந்து அமைதியாகப் பிணவறையை நோக்கி நடந்தது. பிணவறையின் வாசலைத் தொட்டதும், எவ்வளவு கட்டுப்படுத்தியும் முடியாமல் வெடித்துவிட்டார் காளியப்பனின் அம்மா, “ஐயோ விஜி.... (காளியப்பனின் செல்லப்பெயர்) சாப்பிடத்தானடாவரேன்னு சொன்ன. இங்க வந்து என்னடா? பண்ற? வந்துட்றா விஜி.,...போயிடலாம். வந்துட்றா... ஐயோ!” என்று அவர் கதறிய கதறலில் அங்கிருந்த சில பெண் போலீஸாரே கண்ணீர் விட்டனர். சற்றுத் தள்ளி நின்று கொண்டிருந்த சில போலீஸார் துப்பாக்கிகள் ஏந்திய நிலையில் ஏதோ சிரித்துப் பேசிக்கொண்டிருந்தார்கள்.

அவர்களை நோக்கிப் பெரும் குரலெடுத்து கத்தினார் காளியப்பனின் அண்ணன். “அந்தத் துப்பாக்கிய எடுத்து சுடுங்கடா... ஸ்டெர்லைட்டு கேன்சர் கொடுத்துக் கொல்றான்... நீங்க துப்பாக்கியை வச்சு கொல்றீங்க. அதுக்கு ஒரேயடியா எங்க மொத்த ஊரையும் குண்டு போட்டு அழிச்சிடுங்க...” என்று அவர் கோபமும் ஆற்றாமையுமாகக் கதறியது, மயான அமைதியுடன் இருந்த மருத்துவமனையின் அத்தனை திசைகளிலும் எதிரொலித்தது.

அந்தக் கதறல், சென்னையில் பூப்புனித நீராட்டு விழாவில் பங்கேற்ற முதல்வருக்கும் துணை முதல்வருக்கும், மங்கள இசையைக் கடந்து காதுகளில் நிச்சயம் விழுந்திருக்க வாய்ப்பில்லை. ■

## ஈழத்து எழுத்தாளர் தாமரைச்செல்வி சிறுகதை தமிழ்நாடு அரச பாடநூலில்

தாமரைச்செல்வி எழுதிய “வன்னியாச்சி” சிறுகதைத் தொகுதியில் வெளிவந்த “பசி” என்னும் சிறுகதை தமிழ்நாடு அரச கல்வித்திட்டத்தின் கீழ் தரம் 11 சிறப்புத்தமிழ் பாடவிதானத்தில் இணைக்கப்பட உள்ளதாக மதுரை மனோன்மணீயம் சுந்தரனார் பல்கலைக்கழக பேராசிரியர் அ. ராமசாமி தெரிவித்துள்ளார். தமிழ்நாடு அரச பள்ளிக்கல்வித்துறையினால் அறிமுகப்படுத்தப்படவுள்ள புதிய நூலில் மேற்கண்ட சிறுகதை இடம்பெற உள்ளது.

ஏற்கெனவே இவரது “இன்னொரு பக்கம்” எனும் சிறுகதை இலங்கை தேசிய தமிழ் பாட நெறியில் ஆண்டு 11க்கான பாடவிதானத்தில் இணைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

1973ம் ஆண்டு தொடக்கம் எழுதிவரும் தாமரைச்செல்வி சுமார் 200க்கும் மேற்பட்ட சிறுகதைகளையும் பச்சைவயல் கனவு, தாகம், வேள்வித்தீ, சுமைகள், விண்ணிலே அல்ல விடிவெள்ளி, வீதியெல்லாம் தோரணங்கள் போன்ற நாவல்களையும் எழுதியுள்ளார். இவரது சிறுகதைகள் ஆங்கிலம், சிங்களம், ஜேர்மன் போன்ற மொழிகளிலும் மொழிபெயர்ப்பு செய்யப்பட்டுள்ளதுடன் குறும்படங்களாகவும் வெளிவந்துள்ளது. ◆




LycaFly
Colombo fr £406
Massive Savings!
WORLDWIDE FLIGHTS
Chennai fr £353
Trichy fr £498
Kochi fr £362
Mumbai fr £322
Delhi fr £319
Goa fr £376
Dubai fr £269
Abu Dhabi fr £269
Toronto fr £308
Bangkok fr £341
Singapore fr £341
New York fr £287
Fares are from and include taxes. T&Cs apply.
HOLIDAY OFFERS
fr £729pp 8 days
Sri Lanka - Vivanta by Taj
5 Star Hotel/B&B
Return Flights
fr £1199pp 9 days
Sri Lanka Tour
B&B/ Guided Tours/
Excluding flights
fr £1199pp 8 days
Adaaran Club - Maldives
Return Flights/ All Inclusive/
Transfers
fr £1645pp 11 days
Maldives & Sri Lanka
Jetwing Colombo (B&B) &
Kuredu (AI)/ Return Flights
£20 FREE LYCAMOBILE TOP-UP WHEN YOU BOOK WITH US
Terms & Conditions apply. Applicable only for selected bookings
Fly Now Pay Later
FAST, FLEXIBLE, FINANCE FOR TRAVEL
Easy instalments from 3 – 10 months to pay your travel cost
Enjoy £20 Discount on your First Installment.
Hurry! Limited Availability.
CALL 0207 132 32 32 lines open 24x7
IATA
WEMBLEY
14 Ealing Road, Wembley,
London HA0 4TL · 0207 132 0055
EAST HAM
180 High Street North,
East Ham E6 2JA · 0207 132 0056
CANARY WHARF
Walbrook Building, 195 Marsh Wall
London E14 9SG · 020 7132 0100
9624 ATOL PROTECTED
Full terms are available on our website. LycaFly reserves the right to withdraw this offer before the expiry date, without notice.


Lycaremit
Send money home for less
£5 FREE
LYCAMOBILE CREDIT
when you transfer over £300*
உலகின் எந்த நாட்டிற்கும்
மிகக் குறைந்த கட்டணத்தில்
மிகக் கூடிய பணமாற்று வீதத்தில்
அதி விரைவாக பணம் அனுப்ப...
Visit www.lycaremit.com
or
one of our branches
Our branches
East Ham (Lycafly)
180 High Street North,
London, E6 2JA,
Wembley
14 Ealing Road,
Wembley HA0 4TL
Visit
lycaremit.com
For more info call
0207 132 0015
Or FREE from your Lycamobile
305
*Free £5 Lycamobile credit is available for customers who send £300 per single transaction or more with Lycaremit during the calendar month. When you register for Lycaremit, you will need to provide us with your Lycamobile number. You will receive the £5 Credit on your Lycamobile number within 3 weeks from the date of your transaction. Offer available until 31/08/2018 and available only once per month per customer. Lycaremit is a trading name of Lycamoney Financial Services Limited, and is authorised and regulated by the Financial Conduct Authority (registration number: 900153). Registered office: Walbrook Building, 195 Marsh Wall, London, E14 9SG. Company Registration number: 08662355.
LMFS
Lycamoney Financial Services Ltd